# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கதிர் 68 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 20, வியாழக்கிழமை 02.02.2017




## புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கு தீவிரமான முயற்சி

*மட்டக்களப்பில் நேற்று கூறினார் மைத்திரிபால*

யாழ்ப்பாணம், பெப். 2
புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் பின்னடைவு - தேக்க நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்கும் >> 28

# பிரிவினையை ஏற்படுத்தாமல் தீர்வுக்கு மகிந்த உதவ வேண்டும்



### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பகிரங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்ரவரி 2
மக்கள் மத்தியில் துவேசத்தை எழுப்பாமல் - பிரிவினையை ஏற்படுத்தாமல் எழுபது வருட காலமாகத் தீர்க்கப்படமால் இருக்கின்ற தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உதவவேண்டும். அவரின் ஒத்துழைப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரி நிற்கின்றது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்பாக வைத்துக் >> 28

## தகவல் அறியும் சட்டம் நாளை நடைமுறைக்கு

கொழும்பு, பெப். 2
தகவல் அறியும் உரிமைச் சட்டம் நாளை நடைமுறைக்கு வரவுள்ளது என்று ஊடக மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டம் கடந்த ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாளை முதல் நடைமுறையில் தகவல்களை மக்கள் பெற்றுக் கொள்ள >> 28

## நிலைமாறு கால பொறிமுறைகளில் குற்றவியல் வழக்கு விசாரணைகளே முதன்மை இடம்

*பன்னாட்டுச் சட்டவாளர் கருத்து*

கொழும்பு, பெப். 2
நிலைமாறு காலப் பொறிமுறைகளில் குற்றவியல் வழக்கு விசாரணைகளே முதன்மையான அவதானிப்புக்குரிய விடயமாக அமைந்திருக்கின்றன.
இவ்வாறு பன்னாட்டு குற்றவியல் சட்டத்தரணி கேய்ட்லின் ரீன்ஞர் தெரிவித்தார்.
கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று 'நல்லிணக்கத்தில் சிறுவர்களின் வகிபாகம்: பன்னாட்டு >> 27

## சைட்டத்துக்கு ஒருபோதுமே இடமளியோம்

*ஜே.வி.பி. போர்க்கொடி*

கொழும்பு, பெப். 2
நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப் பட்டிருந்தாலும் சைட்டம் தனியார் கல்லூரிக்குச் சட்ட அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. தீர்ப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கிணங்கப் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட >> 28

## கருணா அம்மானின் விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு

கொழும்பு, பெப். 2
கருணா அம்மான் எனப்படும் விநாயக மூர்த்தி முரளிதரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குக் குறித்த விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தனர். விசாரணை அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனையைப் >> 28



## வாள்வெட்டு அடாவடி; ஐவர் விளக்கமறியலில்

*மீட்கப்பட்ட ஆயுதங்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு*

யாழ்ப்பாணம், பெப். 2
யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுக் குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சில நாள்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட 5 பேரும் விளக்கமறியலில் >> 26

## நல்லூரில் கடை மீது அட்டூழியம் செய்த இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப். 2
நல்லூர் அரசடியில் கடை மீது பெற்றோல் குண்டுவீசிய மற்றும் இருவர் மீது வாள் வெட்டு நடத்திய குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஏனையவர்கள் தலை >> 04



**யாழ்.நகரில் நேற்று மாலை பயங்கரம்**

## இளைஞனை வெட்டுவதற்கு வாள்களுடன் துரத்திய கும்பல்

யாழ். பெப். 2
யாழ்.நகர், கஸ்தூரியார் சாலையில் நேற்று மாலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவரை எதிரே மோட்டார் சைக் கிளிலில் வாள்களுடன் வந்த கும்பல் அவரை வெட்ட முயன்றது. இளைஞன், கும்பலிட >> 26

## கேப்பாபிலவு காணிகளை உடன் விடுவிக்க முடியாது

*கூறுகிறார் முல்லைத்தீவு மாவட்ட செயலர்*

முல்லைத்தீவு, பெப். 2
முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்களின் காணிகளைப் பெற்றுக் கொடுப்பதை உடனடியாகச் செய்ய முடியாது. அதில் சில பாதுகாப்புப் பிரச்சினைகளும் இருக்கின்றன. இதனை >> 27



போராட்டத்தில் ஈடுபடும் மக்கள்.
மேலும் செய்திகள், படங்கள் 2ஆம் பக்கத்தில்

## சுமந்திரனே பொறுப்பு

*கூறுகிறார் மகிந்த*



கொழும்பு, பெப். 2
சுமந்திரனுக்கு ஏற்பட்ட உயிர் அச்சுறுத்தலுக்கு அவரே பொறுப்புக் கூறவேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அநுராதபுரம் சிறிமாபோதி விகாரைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு >> 28



**அரச தலைவர் அலுவலகம் முன்**

## துறைமுக ஊழியர்கள் மீது கண்ணீர்ப்புகைத் தாக்குதல்

கொழும்பு, பெப். 2
அரச தலைவர் செயலகத்துக்கு அருகில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்திய துறைமுக ஊழியர்கள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கத் >> 28

## குடாநாட்டுக் குடிதண்ணீர் பிரச்சினை குறித்து ஆராய இம்மாதம் சிறப்பு அமர்வு

*வடக்கு மாகாண சபையில் நடக்கும்*

யாழ்ப்பாணம், பெப். 2
யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வைக் கூட்டுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு அமைவாக இந்தமாதமே சிறப்புக் கூட்டம் நடைபெறும் என்று அவைத் தலைவர் குறிப்பிட்டார். >> 28

## சர்ச்சைக்குரிய சோதிடருக்கு நேற்றுப் பிணை

கொழும்பு, பெப். 2
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குச் சாவுத் திகதி குறித்த சோதிடரான விஜித்த ரோஹண விஜேமுனி நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றார் என்ற குற்றச்சாட்டின் >> 28

## குற்றத் தடுப்புச் சட்டத்தை திருத்துவதற்கு அங்கீகாரம்

கொழும்பு, பெப். 2
குற்றத் தடுப்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கும் அதனை வர்த்தமானியில் அறிவிப்பதற்கும் அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
நாட்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் குற்றத் தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குற்றங்களுக்காக >> 28

# கடும் பனிக்கு மத்தியில் இரவிரவாக போராடும் பிலக்குடியிருப்பு மக்கள்

## இராணுவத்தின் இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் வீதியில் படுத்துறங்கினர்

முல்லைத்தீவு, பெப். 2

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்கள் இரவிரவாக இராணுவத்தினரால் ஏற்படுத் தப்பட்ட இடையூறுகளையும் புறந்தள்ளி, கடும்பனிப் பொழிவையும் கணக்கில் எடுக்காது, ஆண்கள்-பெண்கள் அனைவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது காணிகளுக்குள் செல்லும் வரையில் வீதியிலிருந்து தொடர்ந்தும் போராட்டம் நடத்துவோம் எனவும் அவர்கள் சூளுரைத்தனர்.

**ஏமாற்றப்பட்ட மக்கள்**

பிலக்குடியிருப்பில் இராணுவம் விடுவித்த காணிகளை அடையாளப்படுத்துவதற்காகக் கிராம மக்களை அந்தப் பகுதிக்கு வருமாறு கிராம அலுவலர் அறிவித்திருந்தார். ஆனால்அதிகாரிகள்வரவில்லை. இதற்கு முன்னரும் இவ்வாறு அறிவித்தல் கொடுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டதாகத் தெரிவித்த மக்கள், தமது காணிகள் விடுவிக்கப்படும் வரை அங்கிருந்து அகலமாட்டோம் என்று அங்கேயே தங்கினர். பிலக்குடியிருப்பில் உள்ள வான்படை முகாமுக்கு முன்னால் தற்காலிகக் கொட்டகை அமைக்கப்பட்டு மக்கள் இரவு அங்கேயே இருந்தனர்.

**கூச்சலிட்ட இராணுவம்**

கொட்டகையில் மக்கள் தங்கியிருந்து போராட்டத்தில் ஈடுபட்டபோது, அந்தப் பகுதிக்கான மின்சாரத்தைப் பாதுகாப்புத் தரப்பினர் துண்டித்தனர். மின் குமிழ்களை அணைத்தனர். மக்களை இருளில் மூழ்க விட்டனர். துரிதமாகச் செயற்பட்ட மக்கள் விறகுகளை எடுத்து தீ மூட்டி வெளிச்சத்தை உருவாக்கினர். மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தையும் இதன் பின்னர் பாதுகாப்புத் தரப்பினர் துண்டித்தனர். இதற் கும் மக்கள் அசைத்து கொடுக்காததைத் தொடர்ந்து, 'எங்களைக் கொல்கின்றார்கள்' என்று பாதுகாப்புத் தரப்பினர் 50 பேர் அந்தப் பகுதியில் நின்று கூச்சலிட்ட னர்.

**மக்கள் பிரதிநிதிகள் அதிகாரிகள் வருகை**

இரவு கடும் குளிரின் மத்தியிலும் மக்கள் வீதியில் படுத்துறங்கினர். பெண்கள், குழந்தைகளும் வீதிகளிலேயே உறங்கினர். நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் நேற்றுக் காலை மக்களைச் சென்று சந்தித்தனர். மாவட்டச் செயலர், பிரதேச செயலர், முகாம் பொறுப்பதிகாரி ஆகியோரும் அங்கு வந்தனர்.

**மக்களுக்கு அனுமதியில்லை**

பிலக்குடியிருப்பில் உள்ள விமானப் படையின் முகாமின் ஒரு பகுதி வேலியை அகற்றி முகாமினுள், மக்கள் பிரதிநிதிகள் - அரச அதிகாரிகள் உள்ளே சென்றனர். இதன் போது மக்களையும், பத்திரிகையாளர்களையும் இராணுவத்தினர் உள்ளே அனுமதிக்கவில்லை.

**இராணுவ முகாம்கள் இல்லை**

முகாமினுள்ளே சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், முகாம் எல்லையினுள் இராணுவத்தினரின் கட்டடங்கள் எவையும் இல்லை. மக்கள் வசித்தமைக்கான அடையாளங்கள் இருக்கின்றன. அவர்களின் எல்லைக்கு போடப்பட்டிருந்த பனைகள் இப்போதும் காணப்படுகின்றன. கிணறுகள் உள்ளன. மக்களின் குடியிருப்புக் காணிகளை விடுவிப்பதில் பாதுகாப்புத் தரப்பினருக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது - என்றார்.

**அவகாசம் வழங்கமாட்டோம்**

அரச அதிகாரிகளும், பாதுகாப்புத் தரப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்தனர். காணிகளை விடுவிப்பதற்குக் கால அவகாசம் கோரினர். மக்கள் அதற்குத் திட்டவட்டமாக மறுத்து விட்டனர். கடந்த காலங்களிலும் இவ்வாறு பல தடவை உறுதி வழங்கப்பட்டு ஏமாற்றப்பட்டதை அவர்கள் சுட்டிக்காட்டினர். காணிகள் விடப்படும் வரையில் ஓர் அங்குலம் கூட அங்கிருந்து நகர மாட்டோம் என்று திடமாகத் தெரிவித்தனர்.

**மக்களுக்கு மிரட்டல்**

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் வான்படை முகாமின் பொறுப்பதிகாரி விடுதிக்குச் செல்லும் வாசலிலேயே தற்காலிக கொட்டகையை அமைத்திருந்தனர். இதனால் வான்படையினர் உள்ளே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. தற்காலிகக் கொட்டகையை அகற்றுமாறு மக்களை மிரட்டினர். எங்கள் காணிகளை விடுங்கள், உங் கள் பாதைகளை விடுகின்றோம் என்று மக்கள் பதிலடி கொடுத்தனர்.

**தலையீடுசெய்த பொலிஸார்**

மக்கள் பாதையை மறித்து தற்காலிகக் கொட்டகை அமைத்தமைக்கு எதிராக வான்படையினர் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து கொட்டகையை அகற்று மாறு மக்களிடம் கோரினர். மக்கள் மறுத்தனர். நீதிமன்றில் வழக்குத் தாக் கல் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று நினைக்கின்றோம். கொட்டகையை வீதியின் அருகில் போடுங்கள் என்று மக்களிடம் கேட்டனர். அதற்கு மக்கள் இணங்கி வீதியின் அருகில் கொட்டகையை அமைத்துப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (த-5-7)



## மிருசுவில் படுகொலைக் குற்றவாளியான சிப்பாய்க்கு சுதந்திர தினத்தில் மன்னிப்பு

### அரச தலைவரிடம் கோரிக்கை

மிருசுவிலில் பொதுமக்களைக் கொலை செய்த குற்றச்சாட்டில் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்ட இராணுவச் சிப்பாயைச் சுதந்திரதினம் அன்று பொதுமன்னிப்பில் விடுதலை செய்யுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் மீண்டும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தாய் நாட்டுக்கான போர் வீரர்கள் நிறுவனம் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளது.

மிருசுவிலில் பொதுமக்கள் எண்மரைக் கொன்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. சார்ஜன்ட் ரத்னாயக்கவைக் குற்றவாளியாக இனங்கண்ட, கொழும்பு மேல் நீதிமன்றம், 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அவருக்குச் சாவுத் தண்டனை தீர்ப்பளித்திருந்தது. தாம் கைவிட்டுவிட்டு வந்த வீடுகளைப் பார்ப்பதற்காக, 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமளவில் அங்கு சென்றிருந்த பொதுமக் களில் எட்டுப் பேர் இவரால் கொலை செய்யப்பட்டமைக்காகவே நீதிமன்று தண்டனை வழங்கியிருந்தது.

இவரைப் பொதுமன்னிப்பில் விடுவிக்க வேண்டும் என்று, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம்கடந்தஆண்டுகோரிக்கை முன்வைக்கப் பட்டிருந்த து. அரச தலை வர் மைத்திரிபால அவரை விடுதலை செய்யவில்லை. இந்த நிலையில் அவரைப் பொது மன்னிப்பில் விடுவிக்க மீளவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

'தாய் நாட்டுக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்த பதவி நிலை அதிகாரியான சார்ஜன்ட் ரத்னாயக்கவுக்குப் பொது மன்னிப்பு வழங்கவும், சுதந்திர தினத்தை முன்னிட்டு, அவருக்குப் பொது மன்னிப்பு வழங்க அரச தலைவர் முன்வர வேண்டும்' என்று தாய்நாட் டுக்கான போர் வீரர் கள் நிறு வனத் தலைவர் மேஜர் அஜித் பிரசன்ன கடிதத்தின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார். (த-5)

## புலிகளால் ஆபத்து

### கூறுகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, பெப். 2

புனர்வாழ்வு பெற்ற, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் பலர், கொழும்பில் வாழ்கின்றனர். அவ்வாறானவர்களால் பெரும் ஆபத்து வரக்கூடும் என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு தற்போது வேறு திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால்அங்குகொழும்பு அரசின் தலையீடுகள் இல்லை. அப்படியான தலையீடுகளும் அங்கு செல்லுபடியாவதில்லை.

சொல்லப்போனால் தனியானதொரு இராச்சியம் போன்றே வடக்கு மாகாணத்தின் கள நிலவரங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான இனவாதச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வடக்கு முதல்வரைப் போன்று தான் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது செயற்பட்டு வருகிறார். இவரும் ஒரு தமிழ் இனவாதியே.

கொழும்பைக் கேந்திரமா கக் கொண்ட சிங்கள வியாபாரிகளின் சொத்துகளும் பொதுமக்களின் பணத்தையும் உள்ளடக்கிய வகை யில், கச்சிதமாக மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவமாகவே பிணை முறி விவகாரம் பார்க்கப்படுகின்றது. இந்த விடயம் பெரிய பிரச்சினையாகி விடும் என்ற காரணத்தினால் தான் அரசும் இது விடயத்தில் அமைதி காத்து வருகின்றது.

இந்த விடயத்தில் தொடர்புடைய அர்ஜுன் அலோசியஸ் பிரபல ஊடகமொன்றை விலை கொடுத்துவாங்கியுள்ளார்என்றுதற்போதுதெரிய வந்துள்ளது. நாட்டு மக்களின் பணத்தைக் கொள்ளை யடித்து வாங்கப்பட்ட அந்த ஊடகம் எது என்பதை அரசு உடனடியாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் - என்றார். (த-5)

# களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை கட்டடத்தை திறந்தார் மைத்திரிபால

அம்பாறை, பெப்.2
களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியை அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன இன்று திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடத் தொகுதி இரத்த வங்கி, நவீன சத்திர சிகிச்சைக் கூடம், சட்ட வைத்தியப் பிரிவு, கதிர்வீச்சுப் பிரிவு, நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதி மற்றும் நிர்வாகப் பிரிவு ஆகியன உள்ளடங்கலாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கெ. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், அமைச்சர் ராஜித சேனாரத்ன, இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (இ)



# புலிகள் புரிந்த குற்றங்களையும் விசாரியுங்கள்

## வடக்கு முதலமைச்சருக்கு சம்பிக்க ரணவக்க பதில்

கொழும்பு, பெப். 2
போர்க் குற்றம் தொடர்பில் ஆராயப்படவேண்டும் என்பதில் தவறில்லை. இலங்கை இராணுவம் போர் விதிமுறைக்கு முரணாக மனித உரிமை மீறல்களை மேற்கொண்டிருப்பின் அவற்றை ஆராய வேண்டும். அதேபோல் விடுதலைப் புலிகளின் குற்றங்களையும் விசாரிக்கவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

பன்னாட்டு நீதிபதிகளை அழைத்து வடக்கு அரசு போர்க் குற்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பணித்திருந்தார். இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது அதிகாரப் பகிர்வுத் தீர்வு தொடர்பில் செயற்படவோ இவர்கள் பன்னாட்டு நீதிபதிகளை அழைக்கவில்லை. அதற்கான தேவையும் இல்லை. அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் அரசு அக்கறை செலுத்தி வருகின்றது. போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆராயவும் புலிகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவும் இராணுவத்தைத் தண்டிக்கவுமே இவர்கள் பன்னாட்டு நீதிபதிகளை வரவழைக்கப் பார்க்கின்றனர்.

பன்னாட்டு நீதிபதிகளை வரவழைக்கவேண்டும் என்றால் ஈழம் வேண்டும் என்பதா தமிழர் தரப்பின் கோரிக்கை என்பதை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும். போர்க் குற்றம் தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என்பதில் தவறில்லை. இலங்கை இராணுவம் போர் விதிமுறைக்கு முரணாக மனித உரிமை மீறல்களை மேற்கொண்டிருப்பின் அவற்றை ஆராய வேண்டும். அதேபோல் விடுதலைப் புலிகளின் குற்றங்களையும் விசாரிக்க வேண்டும். உலகளாவிய ரீதியில் தடை செய்யப்பட்ட ஆயுதக் குழுவின் நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களை பணயம் வைத்து அவர்கள் மேற்கொண்ட அராஜக நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அவர்களைத் தண்டிக்க வேண்டும்.

இறுதிப் போரில் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் 12 ஆயிரம் பேரை முன்னைய அரசு விடுதலை செய்துள்ளது. அவர்களை மீண்டும் கைது செய்யவேண்டும். ஜனநாயகம் நீதி நிலைநாட்டப்படவேண்டுமாயின் இரு தரப்பினரின் நியாயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டைக் காப்பாற்றி பாதுகாத்து வரும் இராணுவத்தைத் தண்டித்து பன்னாட்டுப் பயங்கரவாத அமைப்பை நியாயப் படுத்துவது எந்த வகையிலும் நியாயமாக அமையாது.

பன்னாட்டு விசாரணைகளை மேற்கொண்டாலோ அல்லது உள்ளக விசாரணைகளை மேற்கொண்டாலோ இரு தரப்பின் குற்றங்களையும் விசாரிக்க வேண்டும். அவ்வாறான நகர்வில் பன்னாட்டு அமைப்புகளுடன் செயற்பட்டு வரும் புலிகளின் உறுப்பினர்களைக் கைது செய்து அவர்களை இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டும்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் கட்சியாக ஜனநாயக ரீதியில் செயற்பட்டு வந்தாலும் ஆரம்பத்தில் இவர்களும் புலிகளின் கூட்டணியில் இருந்தவர்கள். இன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்கள் அன்று ஆயுதம் ஏந்தி எமக்கு எதிராகப் போராடியவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

வெறும் அரசியல் நடவடிக்கைகளுக்காக வார்த்தைகளை வெளிப்படுத்தி மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளைத் தமிழர் தரப்பு விட வேண்டும். இன்று நாட்டில் ஜனநாயக ரீதியில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சகல பகுதிகளிலும் நல்லிணக்க வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அவ்வாறு இருக்கையில் ஒரு சாராரின் கொள்கைகள், பிரிவினைவாதச் செயற்பாடுகள் மூலம் நாட்டின் ஜனநாயகத்தைக் குழப்பக் கூடாது. அவை நாட்டுக்குள் செல்லுபடியாகாது - என்றார். (த-5)

# கல்முனையில் மட்டும் 424 டெங்கு நோயாளர்

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கடந்த மாதம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 424 பேர் அடையாளம் காணப்பட்டதாக அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல். அலாவுதீன் தெரிவித்தார்.

நிந்தவூரில் டெங்கு நோயாளர்கள் 151 பேர் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் இடங்களை வைத்திருப்போருக்கு உடனடியாக அபராதம் விதிப்பதற்குப் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்காக நீர்நிலைகளில் மீன் வளர்க்கும் திட்டம் கல்முனைப் பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது–என்றார். (இ)

# சீனா, சிங்கப்பூர், மலேசியா போன்று இலங்கையிலும் அபிவிருத்திகள்

## தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 2
சீனா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் துரிதமாக அபிவிருத்தி அடைவதற்குக் காரணமாக இருந்த பெரிய பிரதேசங்கள் பலவற்றை ஒன்றிணைத்து அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டமை போன்று இலங்கையிலும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட நிர்மாணப்பணிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இளைஞர், யுவதிகளின் தொழில் இல்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாண திட்டமிட்ட வேலைத்திட்டத்தை அரசு முன்னெடுத்துள்ளது. மேற்கு, வடமேல், மத்திய, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்களை உள்ளடக்கும் வகையிலான அபிவிருத்தி வலயம் ஏற்படுத்தப்படும். அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிங்கிரிய பிரதேசத்தில் வர்த்தக வலயம் ஒன்றுக்காக 800 ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டுள்ளது. இரணவில பிரதேசத்தில் 500 ஏக்கரில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வலயம் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. - என்றார். (த-5)



# ஆட்சேபனை இருப்பின் ஒரு மாதத்துக்குள் தருக

## சுன்னாகம் நீரில் கழிவு ஒயில் கலந்த உயர் நீதிமன்றம் அறிவுறுத்தல்

கொழும்பு, பெப். 2
சுன்னாகம் பிரதேசத்துக் குடிதண்ணீருடன் கழிவு எண்ணெய் கலந்தமை தொடர்பான வழக்கில் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியசாத் டெப், புவனேக அலுவிகார ஆகியோர் தலைமையிலான குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற மனு விசாரணையின் போதே மேற்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பகுதியிலுள்ள நோதேர்ன் பவர் நிறுவனத்திலிருந்து வெளியாகும் கழிவு எண்ணெய் அந்தப் பிரதேசத்திலுள்ள குடிதண்ணீர்க் கிணறுகளில் கலந்த தாகவும், அதனால் மக்களின் உரிமை மீறப்பட்டிருப்பதாகவும் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது. சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மத்திய நிலையத்தின் பிரதானியாகச் செயற்படும் கலாநிதி ரவீந்திர காரியவசம் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள வட மாகாண சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மனு தொடர்பில் ஆட்சேபனை இருப்பதாகத் தெரியப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து ஆட் சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கு வட மாகாண சபைக்கு ஒரு மாதகால அவகாசம் வழங்குவதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்தது.

இதனையடுத்து மனுமீதான அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் மே மாதம் 26ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது. சுன்னாகம் பகுதியில் இயங்கி வந்த மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை நிறுத் துமாறு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட காலக்கெடு மே மாதம் 26ஆம் திகதி வரை நடைமுறையில் இருக் கும் என்று நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டது. (த-5)

# காணாமற்போன 3 மாணவர்களும் யாழ். ரயில் நிலையத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 2
காணாமற்போனபாடசாலைமாணவர்கள் மூவரும் பொலிஸாரால் மீட்கப்பட்டனர். விசாரணையின் பின்னர் அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை ஒன்றில் பயிலும் குறித்த மாணவர்கள் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டனர்.
மாணவர்கள் மூவரும் யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் வந்து இறங்கிய போதே அங்கு நின்ற நபர் ஒருவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில் அவர்கள் மீட்கப்பட்டனர்.
3 மாணவர்களும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விளையாடச் செல்வதாகக் கூறி வீட்டில் இருந்து வெளியே சென்றனர். விளையாட்டின் நிமித்தமும், ரயில் மற்றும் பஸ்ஸில் பயணிக்க வேண்டுமென்ற ஆசையிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா வரை பஸ்ஸில் சென்றுள் ளனர். அங்கிருந்து மீண்டும் ரயிலில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் மாலை வந்த வேளையே மூவரையும் அறிந்திருந்த நபர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். மூவரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டனர்.
விசாரணையின் போதே தமக்கு இவ்வாறான ஆசை இருந்ததாகவும், அந்த ஆசையின் நிமித் தம் இவ்வாறு நடந்துகொண்டதாகவும் பொலி ஸாரிடம் மாணவர்கள் மூவரும் தெரிவித்தனர். மூவரின் பெற்றோரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து அவர்களிடம் மாணவர்கள் ஒப்படைக்கப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.
(வ-106)

# வடக்கிலும் பெருமெடுப்பில் சுதந்திர தினக் கொண்டாட்டம்

## வவுனியாவில் நடக்கிறது ஏற்பாடு

வவுனியா, பெப். 2
வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுதந்திர தினம் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் வவுனியாவில் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.
இலங்கையின் 69ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் இம்முறை கொழும்புக்கு அடுத்தபடியாக முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து நடத்தும் அணிவகுப்புகளுடன் வவுனியா நகர சபை மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.
இந்தச் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் குறித்த நிகழ்வின்போது கொழும்பில் இடம்பெறும் முதன்மை நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆற்றும் உரையை நேரடி ஒளிபரப்புச் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இதேவேளை, முல்லைத்தீவிலும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களை முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வு முல்லைத்தீவு முகத் திடலில் (கடற்கரை) இடம்பெறவுள்ளது.
(வ-101)

# பனையிலிருந்து தவறி வீழ்ந்து குடும்பத் தலைவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், பெப். 2
பனையிலிருந்து தவறி விழுந்த குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
கொக்குவில் மேற்கில் நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நல்லையா செல்வரட்ணம் (வயது 50) என்பவரே உயிரிழந்தார்.
சீவல் தொழிலுக்காக பனையில் ஏறியபோது அவர் தவறி விழுந்தார். விழுந்ததும் தலையில் காயமடைந்து குருதி வெளியேறியது. சிறிது நேரத்தின் பின்னர் அயலவர்கள் அவர் விழுந்துகிடப்பதைக் கண்டனர். அப்போது அவர் மயக்கநிலையில் காணப்பட்டார். உடனடியாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.
திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
(வ-4)




# உள்ளூராட்சி சபைகளில் இடமாற்றம் பெற்ற அலுவலர்களை உடனடியாக விடுவிக்கவேண்டும்

## செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 2
வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி சபைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கான இடமாற்றப் பட்டியலின் பிரகாரம் இதுவரை விடுவிக்காத அலுவலர்கள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.
இவ்வாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.திருலிங்கநாதன், அனைத்து உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.
உள்ளூராட்சி சபைஅலுவலகங்களில் 2016 டிசம்பர் 31ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 5 வருட சேவையை நிறைவு செய்து 2017ஆம் ஆண்டுக்கான இடமாற்றலுக்கு விண்ணப்பிக்காத அலுவலர்களின் பின்வரும் விவரங்களையும் அனுப்பி வைக்குமாறும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.
அலுவலரின் பெயர், பதவி - வகுப்பு, முதல் நியமன இலக்கம், பிறந்த திகதி, விவாக நிலை சேவைக் காலம், பாடசாலை செல்லும் பிள்ளைகளின் விவரம், தற்போதைய வதிவிடம் மற்றும் சேவை விவரம் போன்றவற்றை அனுப்பி வைக்குமாறு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களிடம்கேட்கப்பட்டுள்ளது.
(வ - 9)

# வட்டு. மத்தியின் மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.2
வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் திறனாய்வு இன்று பிற்பகல் கல்லூரி அதிபர் பு.பஞ்சாட்சரம் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய செயற்றிட்ட அலுவலர் எ.சிவரூபனும் சிறப்பு விருந்தின ராக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.செந்தீபனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-8)

# நல்லூரில்...

மறைவாகியுள்ளனர். கைதான இருவரும் பொலிஸ் தடுப்பில் உள்ளனர். சிறப்பு பொலிஸ் பிரிவினர் அவர்களை விசாரணைக் குட்படுத்தியுள்ளனர்.
சண்டிலிப்பாய் - மாசியப்பிட்டியைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டார். உடுவிலைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவர் நேற்றுமுன்திணமிரவு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
நல்லூர் அரசடியில் கடந்த திங்கட்கிழமை மாலை கடைமுன்பாக பெற்றோல் குண்டு வீசி தீ பற்ற வைக்கப்பட்டதோடு, அந்த இடத்தில் நின்றிருந்த 2 பேரை வாளால் வெட்டிவிட்டு வாள்வெட்டுக் கும்பல் தப்பிச் சென்றிருந்தது. 4 மோட்டார் சைக்கிள்களில் வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் சென்றிருந்த 9 பேர் கொண்ட குழுவே அந்த அடாவடியில் ஈடுபட்டது. அந்த இடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமரா மூலமாக அந்தக் காட்சிகளைப் பெற்ற பொலிஸார் அவற்றின் அடிப்படையில் தற்போது 2 பேரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-4)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு மாத இறுதிக்குள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.2

இந்த மாத இறுதிக்குள் வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெயராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும், வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொண்டராசிரியர் தொடர்பான அமைச்சரவை அனு மதிப் பத்திரம், நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதற்காக நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய் யப்பட்ட தொண்டர் ஆசிரியர்களின் விவரங்கள் என்பனவற்றையும் ஆளுநர் வழங்கினார் என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான விசேட கூட்டமொன்று கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நியமனம் வழங்கப்படும் தொண்டர் ஆசிரியர்களின் விவரம் அந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-21)

# வவுனியாவுக்கான சீனிக் கொள்வனவு இன்று முதல் இல்லை

வவுனியா, பெப்.2

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கட்டுப்பாட்டு விலையில் சீனி விற்பனை செய்ய வேண்டும் என்பதால், இன்று முதல் வவுனியாவுக்கான சீனிக் கொள்வனவு இடம்பெறாது என வவுனியா மாவட்டச் சீனிக் கொள்வனவாளர்கள் தெரிவித்தனர்.

வவுனியா வர்த்தகர் சங்கத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வர்த்தமானியில் கட்டுப்பாட்டு விலையான 93 ரூபாவுக்குச் சீனியை விற்பனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சீனியைக் கொழும்பில் கொள்வனவு செய்து வவுனியாவுக்கு எடுத்துவந்து விற்பனைசெய்யும்போது சில்லறை விற்பனையாளர்களுக்கு 90 ரூபாவுக்கு விற்பனை செய்யவேண்டிய தேவை ஏற்படுகிறது. அவர்கள் உள்ளூர் வியாபார நிலை யங்களுக்கு 93 ரூபாவாக விற்பனை செய்யவேண்டும். உள்ளூர் வியாபார நிலையங்கள் சீனியை மக்களுக்கு விற்பனை செய்யும்போது விலை 93 ரூபாவை விட அதிகரிக்கும். எனவே கொழும்பில் சீனியைக் கொள்வனவு செய்து வவுனியாவுக்கு எடுத்து வந்து கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யமுடியாது.

எனவே இன்று முதல் வவுனியாவுக்கான சீனிக் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளது. இது விடயம் தொடர்பாக ஏற்கனவே அரச மட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதில் எமக்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை. இதனால் நாம் இந்த முடிவுக்கு வந்துள்ளோம் -என்றனர்.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. ரி. கே. இராஜலிங்கம், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (கு-21)



Bata
கோலாகலத் திறப்பு விழா
நவநாகரீக நங்கையர்களுக்கும்
ஆடவர்களுக்கும் ஒரு நற்செய்தி
இருபாலைச்சந்தி, கோப்பாயில்.
"பாட்டா" காலணிகள்
விற்பனை முகவர்
சுவஸ்தி என்ர பிறைஸ்
ஸ்தாபனம் இன்று (02.02.2017) வியாழக்கிழமை
காலை: 7.30 - 9.00 மணிவரை உள்ள
சுபவேளையில் கோலாகலமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வில் அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
இன்று தொடக்கம் 28.02.2017 வரை
விசேட விலைக்கழிவு வழங்கப்படும். வாருங்கள் ஆதரவு தாருங்கள்
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.
021 223 0416
அன்புடன்
உரிமையாளரும், ஊழியர்களும்


கல்வியாண்டு 2017 - மாசி மாதத்திற்கான அனுமதிகள்
சர்வதேசத் தரம் வாய்ந்த Pearson HND பாடநெறியினால்
உங்களுக்குப் பிரித்தானியக் கௌரவப் பட்டமொன்று!
வழங்கப்படும் பட்டப்பாடநெறி

From School of Computing
B.Eng (Hons) in Software Engineering
B.Eng (Hons) in Computer Networking
B.Sc (Hons) in Computing

From School of Hospitality Management
BA (Hons) in Hospitality Management
BA (Hons) in Travel & Tourism Management

From School of Business
BA (Hons) in Business Administration

From School of Engineering
B.Sc (Hons) in Civil Engineering
B.Sc (Hons) in Mechanical Engineering
B.Eng (Hons) in Electronic & Communication Engineering
B.Sc (Hons) in Quantity Surveying

REGISTER NOW FOR THE FIRST STEP
PEARSON BTEC HND
- Software Engineering
- Computer Networking
- Computing
- Business Administration
- Marketing
- Accounting & Finance
- Hospitality Management
- Travel & Tourism Management
- Civil Engineering
- Mechanical Engineering
- Electrical & Electronic Engineering
- Quantity Surveying

SUBJECTS STREAMS & DEGREES WE OFFER
2017 மாசி மாதத்திற்கான பதிவுகள் தற்போது ஆரம்பம்
Duration: 18 months

University Partners
Awarded By:
LONDON METROPOLITAN UNIVERSITY
Kingston University London
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிபெற்ற பல்கலைக்கழகம்

FREE

for all Registrations
தவணை அடிப்படையிலும் செலுத்தலாம்
மாதாந்தக் கட்டணம் ரூ.12,500 மட்டும்

பட்டத்திற்கான முன்னோக்கிய பயண வழி
After O/Level → Foundation Diploma → HND → UK DEGREE (Final Year)
After A/Level → HND

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka | 021 222 4142 | 077309 9 308
HOTLINE
0217 572 572
077 309 2626
இலங்கையின் மிகப்பாரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் ஆரம்பகால மூத்த உறுப்பினராகவும் அன்னாரின் ஒய்வுக் காலம் வரை சங்கத்தின் வழிகாட்டியாக நிர்வாகசபையில் அங்கம் வகித்து, முன்னாள் தலைவராகவும் செயலாளராகவும் சேவையாற்றிய மருத்துவர்

**இரா. கனகலிங்கம்**


அவர்களின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்**
**கைதடி**

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

(02.02.2017)

தோற்றம் 10 . 10 . 1939



மறைவு 14 . 02 . 2013

**அமரர் கந்தவனம் சின்னையா சண்முகலிங்கம்**
(ஓய்வுபெற்ற உப அதிபர்)

நிமிர்ந்த கம்பீர நன் நடையும்
நேர் கொண்ட பார்வையும்
அவனியில் எவருக்கும் அஞ்சாது
அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
விழிகள் மூடித் திறக்கும் நேரத்தில்
எம்மைத் தவிக்க விட்டுச் சென்றீர்களே!
உங்களுக்கு நிகர் இனி எங்களுக்கு யார்?
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
அணையாதே உங்கள் நினைவுகள்

பாடசாலை வீதி,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

உங்கள் நினைவுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் 20 . 04 . 1964



வானுலகில் 05 . 02 . 2014

**பத்மநாதன் கமலேஸ்வரி**

வாழ்க்கை யெனும் பயணத்தில் வந்தாய் நீ மனைவியாக
அன்பென்னும் மதுவருந்தி இருந்தோமே மகிழ்ச்சியாக
உழைப்பென்னும் ஊன்று கோலால்
உயர்வெனும் தடம் பதித்தோம் ஆமைமாய் வளர்த்துவிட்டு
அக்கினியில் சங்கமித்தாய் விதியோடு மரணம் வந்து
விலையாகிப் போனதேனோ? கண்களிலே வடிகிறதே
இரத்தக் கண்ணீர்
துடைப்பதற்கோ அருகில் உங்கள் கரங்கள் இல்லை
உங்களைப் போல் ஒரு பெண் தெய்வம் பிறக்க வேண்டும்
இப் பூமிதன்னில்

"கமலா அகம்"
8ஆம் வட்டாரம்,
மடத்துவெளி, புங்குடுதீவு

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வசாவிளான் மத்தி. மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 2
2017ஆம் ஆண்டு ஓகஸ்டில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்ற விருக்கும் வசாவிளான் மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் தமது பரீட்சை விண்ணப்பங்களை எதிர் வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளு மாறு கல்லூரி அதிபர் அறிவித்தார். (வ-422)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோகேஸ்வரி வன்னியசிங்கம்



"பிரசாந்தி இல்லம்", மானிப்பாய்வீதி, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் இல.80,கன்னாரத்தெரு, ஜிந்துப் பிட்டி, கொழும்பு -13ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி வன்னிய சிங்கம் நேற்று (01.02.2017) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - கனகமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வன்னியசிங்கத்தின் (கொழும்பு - வர்த்தகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சந்திரேஸ்வரி, மனோகரன் மற்றும் பாஸ்கரன் காலஞ்சென்றவர்களான திருமகள், விஜயபாலன், ஸ்ரீகாந்தா மற்றும் சிறிகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2017) வியாழக்கிழமை ந.ப. 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"பிரசாந்தி இல்லம்"**
**மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**ச.சிறிகுமார்**
**(சகோதரன்)**

**077 844 8680**



**திருமதி**
**இந்திராணி சச்சிதானந்தன்**

நந்தாவில் ஒழுங்கை, கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி சச்சிதானந்தன் 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் நடராசா சச்சிதானந்தன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை தம் பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான நடராசா (காட்டர்) தம்பதிகளின் பாசமிகு மருமகளும் அரவிந்தன்,மஞ்சுளா ஆகியோரின் அன்புத்தாயாரும் விஜேனி,பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மகிழ்யா, கனிஸ்ரா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சண்முகரட்ணம் காலஞ்சென்ற தெய்வேந்திரம், புவனராணி, குமரேந்திரன், சர்வேந்திரன், கலாநிதி, ராஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவமலர், கலைவாணி காலஞ்சென்ற பரமேஸ்வரன், கமலினி, பவானி, ராஜ கருணா, சுபா, கமலாதேவி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற சுலோஜனா தேவி,விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், தெய்வேந்திரம், தம்பாப்பிள்ளை, பூபதி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நந்தாவில் ஒழுங்கை,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மெய்வல்லுநர் போட்டிகள்

காரைநகர் பெப்.2
காரைநகர் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி பிரதி அதிபர் திருமதி சிவநந்தினி வாகீசன் தலைமை யில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் காரைநகர் பிரதேச செயலர் ஈ.தயாரூபனும், சிறப்பு விருந்தினர்க ளாக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.கும ரேசமூர்த்தியும், இலங்கை வங்கிக் காரைநகர் கிளை முகாமையாளர் ப.செல்வக்குமாரும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)

* * *

காரைநகர் ஊரி அ.மி.த.க. வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் இ.சிறிதரன் தலை மையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் காரைநகர் பிரதேச செயலர் ஈ.தயாரூபனும் சிறப்பு விருந்தினர் களாக காரைநகர் கோட்ட ஓய்வுநிலைக் கல்விப் பணிப் பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் இ.சிறிதரன் ஆகியோரும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)

* * *

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று வியாழக்கிழமை மதியம் 1.30 மணிக்கு இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
வித்தியாலய முதல்வர் கே.தவசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, முதன்மை விருந்தி னராக உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய பழைய மாணவனும் ஊர்காவற்றுறை நீதிமன்ற ஓய்வுநிலைப் பதிவாளருமான எஸ்.சிவராமும், சிறப்பு விருந்தினர்க ளாக மருத்துவர் எஸ்.வி. கணேவேல் மற்றும் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி விளையாட் டுச் செயற்றிட்ட இணைப்பாளர்.எஸ்.சிவகாந்தியும், கௌ ரவ விருந்தினராக கிராம அலுவலர் எஸ்.எழிலரசனும் கலந்து சிறப்பிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-23)

# மாணவர் நாடாளுமன்ற அமர்வு இன்று

யாழ்ப்பாணம், பெப்.2
யாழ்.சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் மாணவர் நாடாளுமன்றத்தின் 2ஆவது அமர்வு இன்று 2 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு அதிபர் க.கலியுகன் தலைமையில் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த அமர்வை பாடசாலையின் மாணவர் நாடாளுமன் றத்தின் பொறுப்பாசிரியர்கள் க.பரமேஸ்வரன், திருமதி அ.விமலதாஸ் ஆகியோர் நெறிப்படுத்த உள்ளார்கள்.
இந்த நிகழ்வுக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தை வண.பிதா ஜே.ஜே.மௌலிஸ் அடிகள் மற்றும் குருநகர், பேகன் ஒஸ்லோ அமைப்பின் முதன்மை நிர்வாகிகள் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர் என்று தெரி விக்கப்பட்டது. (வ-51)

# பெருந் திருவிழா

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்றுமுன்தினம் புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெற உள் ளது என்று அறிவிக்கப்பட்டது.
இந்த உற்சவத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் இடம்பெறும் என்று தெரிவிக்கப் பட்டது. (வ-250)

# சித்திரக் கவித்திரட்டு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.2
ஞானம் பாலச்சந்திரனின் ஈழமும் தமிழும் தொடரில் வெளிவரும் சித்திரக் கவித்திரட்டு நூல் வெளியீடு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

# தனியார் மருத்துவ கல்லூரி இங்கு அவசியமற்றது

### கூறுகிறது மகிந்த தரப்பு

கொழும்பு, பெ 2

இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரி அவசியமில்லை என ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும் என்பதால், இன்னும் காலம் இருக்கின்றது.

எவ்வாறாயினும், இலங்கைக்குத் தனியார் மருத்துவக் கல்லூரி தேவையில்லை. தேவையென்றால் அரச மருத்துவக் கல்லூரிகளை உருவாக்க முடியும்-என்றார். (து)

# மாலபே கல்லூரி தொடர்பில் இன்று முக்கியமான முடிவு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.2

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை பதிவு செய்ய வேண்டும் என்ற மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பு தொடர்பில் இன்று தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

மாலபே சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனு தொடர்பில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை மருத்துவ சபையில் பதிவு செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே சங்கத்தின் செயலாளர் நவிந்த டி சொய்சா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

இந்தக் கல்லூரி தரமற்றது. இதில் மாணவர்களைச் சேர்க்க வேண்டாம் என மருத்துவ சபை அறிவித்திருந்தது. இந்த வழக்கில் பிரதிவாதிகளில் ஒருவராக குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மருத்துவ சபையின் இந்த அறிக்கையை ஆராய்ந்து அதனடிப்படையில் நீதிமன்றத்திற்கு விளக்கம் அளித்திருக்க வேண்டும். ஆனால் சுகாதார அமைச்சர் அதை மறைத்ததாலே இவ்வாறு வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பு இவ்வாறு அமைந்தமைக்கு சுகாதார அமைச்சரே பொறுப்புக் கூற வேண்டும்.

சைட்டம் மருத்துவக் கல்லூரியை பரிசோதனை செய்த மருத்துவ சபை அது உரிய தரத்தில் இல்லை என ஏற்கனவே அறிவித்திருந்தது. ஆனால் நீதிமன்றம் சைட்டத்தை பதிவு செய்யுமாறு தற்பொழுது உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றத் தீர்ப்புக்கு தலைசாய்க்கிறோம். ஆனால் இந்த மருத்துவக் கல்லூரி உரிய தரத்தைக் கொண்டதல்ல. இந்தத் தீர்ப்பு தொடர்பில் எமது சட்டத்தரணிகள் ஊடாக ஆராய்ந்து மேன்முறையீடு செய்வது குறித்து முடிவு செய்ய இருக்கிறோம்.

இன்று மத்திய குழு அவசரமாக கூடி இது குறித்து ஆராய உள்ளது. அதில் நீதிமன்ற விவகாரம் மட்டுமன்றி அரசியலும் இருக்கிறது. சுகாதார அமைச்சர் எவ்வாறு செயற்படப் போகிறார் என்று அவதானத்துடன் காத்திருக்கிறோம். கடுமையான சில முடிவுகளை எடுக்க உத்தேசித்துள்ளோம்.-என்றார். (ற)

# கருணாவுக்கும் விருது வழங்க வேண்டுமாம்!

கொழும்பு, பெப்.2

முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு (கருணா) விருது வழங்க வேண்டும் என்று கோரியுள்ளது தாய் நாட்டுக்கான இராணுவத்தினரின் அமைப்பு.



அந்த அமைப்பின் இணைப்பாளர் சட்டத்தரணி அஜித் பிரசன்ன இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றிபெற இலங்கை இராணுவத்துக்கு கருணா பெரும் பங்களிப்புச் செய்தார். சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டுள்ள நிலையில் கருணாவுக்கும் விருது வழங்க வேண்டும். அல்லது சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட பட்டத்தை மீளப் பெற வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவால் பிரித்தெடுக்கப்பட்ட கருணாவை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் சரியாகப் பயன்படுத்தினர். - என்றார். (ற)

# கொம்பனி வீதியில் 10 பெண்கள் கைது

கொழும்பு, பெப் 2

கொழும்பு, கொம்பனிவீதியில் விபசார நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 10 பெண்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மத்திய பிரதேச சட்ட செயற்பாட்டுப் பிரிவினர் நடத்திய திடீர்ச் சோதனையின் போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கோட்டை நீதிவான் மன்றத்தில் பெறப்பட்ட அனுமதியை அடுத்தே குறித்த சோதனை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்கள், 29 வயதுக்கும் 48 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும், அம்பாந்தோட்டை, வெயாங்கொட, சீதுவ, மத்துகம, றாகம, அளுத்தரகம, மெத்தெனிய, லிதுல, ஹந்தபன்கொட, திஸ்ஸமஹாராம மற்றும் கிருலப்பனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (து)

# ரஞ்சனின் பிரச்சினைக்கு ஊடகங்களே காரணம்!

கொழும்பு, பெப்.2

திவுலப்பிட்டிய பிரதேச செயலருடன் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நடந்து கொண்டமை அவரது சுபாவம். இது போன்ற நடவடிக்கைகளை ஊடகங்கள் வெளியிட்டிருக்கக் கூடாது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பீ.திசாநாயக்க தெரிவித்தார். தன்னிடம் உள்ள சகலதையும் பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் ஒருவராக ரஞ்சன் ராமநாயக்காவை நான் காண்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

# சமபாலுறவு குற்றவியல் குற்றமாகாது

### தேசிய சமாதானப் பேரவை அறிக்கை

கொழும்பு, பெப் 2

குற்றவியல் கோவைச் சட்டம் மற்றும் தெருச்சுற்றல் நிலையியற் கட்டளைச் சட்டம் என்பவற்றை, அரச அதிகாரத்தில் உள்ளவர்கள் பயன்படுத்த முடியும். ஆகையால், சமபாலுறவை குற்றவியல் குற்றமாக்கும் பிரிவுகளை அகற்றவேண்டுமெனத் தேசிய சமாதானப்பேரவை அரசிடம் கோரியுள்ளது.

இது குறித்துப் பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாவருக்கும் சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை என்ற வகையில் பார்த்தால், சமபாலுறவானது குற்றவியல் குற்றமற்றதாகும்.

அவற்றுக்கு அமைவாக, சட்டத்திருத்தங்களை அரசு முன்னெடுக்க வில்லை. அதனையிட்டு, தேசிய சமாதானப்பேரவையானது ஏமாற்றமடைந்துள்ளது. அத்துடன், சிறுபான்மையினரின் உரிமையைப் பாதுகாத்தல், என்பதனை பார்க்குமிடமிடத்து, இதனைப் பின்னடைவாகவே பேரவை கருதுகின்றது. ஐ.நா. மனித உரிமை கள்சபைக்குஅமைய, பன்னாட்டு மனித உரிமைகள் சட்டத்தில் பெண்-பெண் சமபாலுறவு, ஆண்-ஆண்சமபாலுறவு, ஆண்-பெண் பாலுறவில் ஈடுபடுவோரின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டிய கடப்பாடு உள்ளது. இதற்கான ஒப்பந்தங்களில் இலங்கை கையொப்பம் இட்டும் உள்ளது.

இலங்கையில், சமபாலுறவு தொடர்பிலான வழக்குகள் பதிவாகவில்லை. சமபாலுறவாளர்கள் மீது பாகுபாடு காட்டுதல், அவர்களைத் துன்புறுத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை தொடர்பிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வித்தியாசமான பாலியல் விருப்புடன் மக்களைத் துன்புறுத்தல், பாலியல் ரீதியில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு எதிரான பாகுபாட்டை அகற்றவேண்டுமென, சகல மட்டங்களிலும் உள்ள சிவில் சமூகத்தினரை நாம் கேட்டு கொள்கின்றோம்.

இலங்கையின் இன மோதல்களுக்கு, பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணும் நோக்கில், சுதந்திரமாக, பக்கச்சார்பின்மையாகச் செயற்படும் நிறுவனமே தேசிய சமாதானப் பேரவையாகும். அந்தப் பேரவைக்கு, சகல சமூகத்தினதும் சுதந்திரம், மனித உரிமைகள் என்பன மதிக்கப்பட்டு, சமாதானமாகச் செழிப்பாக இலங்கையைக் கட்டியெழுப்பவேண்டுமென்ற தொலைநோக்கும் உள்ளது-என்றுள்ளது. (து)

# பண்டாரவளைக் கோர விபத்தில் இரு இளைஞர்கள் பரிதாபச் சாவு

பதுளை, பெப்.02

பதுளை - பண்டாரவளை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பண்டாரவளையை நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துடன் நமுனுகுல 16ஆவது மைல் கல்லருகே மோட்டார் சைக்கிள் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தமிழ் இளைஞர் ஒருவரும் அவரது நண்பரான சிங்கள இளைஞரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-ய-41)

# பல்கலை கல்விசாரா ஊழியர் போரட்டம்

### 7ஆம் திகதி நாடு முழுவதும்

கொழும்பு, பெப் 2

சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு சுற்றறிக்கை வெளியிடப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழகங்களிலுள்ள 14 ஆயிரம் கல்விசாரா ஊழியர்கள் எதிர்வரும் 07 ஆம் திகதி பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

அகில இலங்கை பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புக் குழு நேற்றுமுன்தினம் கூடிய போது இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. இந்த வருடம் முதல் மேலதிகக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதாக உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல வாக்குறுதியளித்திருந்தும் அது வழங்கப்படவில்லையெனத் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக் கணிப்பு நடவடிக்கையின்போது அரசு இந்த வாக்குறுதியை தொழிற்சங்கங்களிடம் வழக்கியதாகவும் அவை சுட்டிக்காட்டின. (து)

மர அரிவு ஆலை விற்பனைக்கு உண்டு
மிருசுவிலில் உள்ள மர அரிவு ஆலை விற்பனைக்கு உண்டு.
077 255 7761

தேவை
நக்கா வீதி, பொஸ்கோ பாடசாலைக்கு அருகிலுள்ள புத்தகக் கடைக்கு அனுபவமுள்ள/ ஆர்வமுள்ள பெண் பிள்ளை தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
077 997 8332, 077 047 6236

ஆங்கிலத்தில் தேர்ச்சி
மேற்படி தேர்ச்சிக்கு 3 மாதத்தில் இலக்கணம் உட்பட 35 வருட அனுபவம் உள்ள ஆசிரியரால் பயிற்சி வழங்கப்படும். O/L தரத்தில் தமிழ் மொழியில் C இற்கு குறையாதவர்கள் மட்டும் சேர்க்கப்படுவர்.
077 648 5234

சட்டமாணி
சட்டக்கல்லூரி-2017
(ஆங்கில மொழி மூலம்)
போட்டிப் பரீட்சையில் உயர் புள்ளி
சட்டத்துறையினரின் சிறப்பு வழிகாட்டல்
04.02.2017 சனி 3P.m
D.C.M கல்லூரி
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
Jaffna
076 362 6304

வெளிநாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
மலேசியா
01. சுப்பர் மார்க்கட் (60 ஆண்)
RM 1000 SR 40000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.
02. சைப்பிறஸ் பாம் (20 ஆண்)
SR 80000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.
சவுதி
01. Milk (பால் கம்பனி) (20 ஆண்)
RL 1100 SR 44000 + OT
உணவு, தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.
02. சேல்ஸ்மன் (20 ஆண்)
RL 1900 SR 76000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.
Tel No: 077 044 7386/ 077 346 8011
E - mail: asianlanka27@gmail.com

பெயர்மாற்றம்
மிருசுவில் வடக்கு, மிருசுவிலைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை 616594753V இலக்கம் கொண்ட செல்வராசா கமலாம்பிகை ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை செல்வராசா கமலாம்பிகை என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
28.10.2016 (N/247) (22,18,17) செல்வராசா கமலாம்பிகை

தேசியக் கொடியை ஒரு வாரம் பறக்கவிடுமாறு கோரிக்கை

இலங்கையின் 69ஆவது தேசிய சுதந்திர தினம் நாளை மறுதினம் கொண்டாடப்ப டவுள்ள நிலையில் தேசி யக் கொடியை நாடு முழுவதும் ஒரு வாரத்துக்குப் பறக்கவிடுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரிட்டன் காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்த இலங்கை மூவின மக்களின் அறவழிப் போராட்டத்தின் மூலம் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திரமடைந்தது.

இந்த வருடம் சுதந்திர தின விழா வழமை போன்று காலி முகத்திடலிலேயே நடைபெறவுள்ளது. இதற்கான ஒத்திகை கடந்த ஒருவார காலமாகக் காலி முகத்திடலில் நடைபெற்று வருகின்றது. சுதந்திர தினத் துக்குத் தேவையான அனைத்து நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு கூறியுள்ளது.

அத்துடன், நேற்று முதல் ஒருவார காலத்துக்கு அனைத்து இடங்களிலும் தேசியக் கொடியை பறக்கவிடுமாறு அமைச்சு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# மைதானத்தில் அடித்துக் கொலை வழக்கு விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற துடுப்பாட்டப் போட்டியில் யாழ். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் அமலன் கொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணைகள் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நேற்று ஆரம்பமாகின.

இந்த வழக்கு 3 நாள்கள் தொடர் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன்படி, யாழ்ப் பாண மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ் செழியன் முன்னிலையில் நேற்று விசா ரணை ஆரம்பமானது.

வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள் 6 பேரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். முதலாவது எதிரி சார்பாகச் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான சட்டத் தரணிகளும் 2ஆவது, 5ஆவது எதிரிகள் சார்பாக சட்டத்தரணி ந.சிறீகாந்தாவும் 3ஆவது எதிரி சார்பாக அரச தலைவர் சட்டத் தரணி நளின் தலைமையிலான சட்டத்தரணிகளும் 4ஆவது எதிரி சார்பாக சட்டத்தரணி க.சுகாஸ்ம் 6ஆவது எதிரி சார்பாக சட்டத் தரணிகளான ஏ.ரஞ்சித் மற்றும் வி.திருக் குமரன் ஆகியோரும் மன்றில் முன்னிலை யாகியிருந்தனர். வழக்குத் தொடருநர் சார்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத் தரணி நா.நிசாந் முன்னிலையாகியிருந் தார்.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொலை தொடர்பாக வழக்கில் 16 சாட்சிகள் அழைக்கப்பட்டிருந்தனர். சட்ட விரோத கூட்டம் கூடியமை, சட்டவிரோத கூட்டத்தில் அங்கத்தவராக இருந்தமை மற்றும் கொலை புரிந்தமை என்று, 6 எதிரிகள் மீதும் 3 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. முதலாவதாக 3ஆவது சாட்சி தனது சாட்சியத்தைப் பதிவு செய்தார்.

'நானும் அமலனும் இன்னும் இரண்டு நண்பர்களுமாக முற்பகல் 11 மணியளவில் மைதானத்துக்குச் சென்று மைதான அரங்கில் இருந்து போட்டியை பார்த்துக் கொண் டிருந்தோம். எங்களின் முன்னால் எமது பாடசாலை மாணவர்கள் ஆடிக் கொண்டிருந்தனர். மறுபக்கம் யாழ்ப் பாண கல்லூரி மாணவர்களும் ஆடிக் கொண்டிருந்தனர். மதியம் 1.30 மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்கள் எங்களை நோக்கிவந்து அடித் தார்கள். நாங்கள் ஓடினோம். எனக் கும் அடிவிழுந்தது. வந்தவர்கள் அமல னைச் சுற்றிவளைத்து அடித்தார்கள்.

தடியாலும் கையாலும் பான்ட் அடிக்கும் தடி யாலும் அடித்தார்கள். எமது கல்லூரி மாணவர்கள் வந்து அமலுக்கு அடித்தவர்களைக் கலைத்துவிட்டு அமலை பார்த்த போது அவர் மயக்கமான நிலையில் இருப்பதாக நினைத்து அவரை வைத்திய சாலைக்கு கொண்டு சென்றோம். அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவ்வாறு சேர்ப்பதற்கு முன்னர் அமலன் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அன்றையதினம் வாக்குமூலம் வழங்கினேன். பின்னர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வாக்குமூலம் வழங்கினேன்' என்றார்.

6 சந்தேக நபர்களில் முதலாம் இரண்டாம் எதிரிகளையும், சான்றுப்பொருளான தடி ஒன்றையும் அவர் மன்றில் அடையாளம் காட்டினார்.

குறுக்குவிசாரணை மேற்கொண்ட சட்டத்தரணி சுமந்திரன், இரண்டு வாக்கு மூலங்கள் வழங்கப்பட்டிருப்பதாக சாட்சி தெரிவித்துள்ளார். இரண்டு வாக்கு மூலங்களின் பிரதிகளைத் தருமாறும் கேட்டார். குறித்த திகதியில் அளிக்கப்பட்ட வாக்குமூல பிரதிகள் தற் போது இல்லை எனவும் வாக்குமூல பிரதிகளை எடுக்கும் வரை இந்த விசாரணையை ஒத்தி வைக்குமாறும் அரச சட்டத்தரணி மன் றில் கோரிக்கை விடுத்தார். அதன்படி வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த வழக்கின் விசா ரணைகள் இன்று காலை தொடரும் என்று நீதிபதி அறிவித்தார்.

*பின்னணி*

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக் கும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல் லூரிக்கும் இடையே வருடாந்த துடுப்பாட் டப் போட்டி நீண்ட காலமாக இடம்பெறுகிறது. 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வட்டுக்கோட்டை மைதானத் தில் போட்டி இடம்பெற்றது. அதன்போது போட்டி ரசிகர் களிடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப் பாகியதால் பற்றிக்ஸ் கல் லூரியின் பழைய மாணவர் அமலன் மைதானத்தில் வைத்து அடித்துக் கொல் லப்பட்டார். கொலை செய்த குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பல மாதங்களின் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப் பட்டனர். (வ-4,6)



## ஜப்பான் அரசின் உயர்ந்த விருது கரு ஜயசூரியவுக்கு

கொழும்பு, பெப் 2

ஜப்பான் அரசினால் உலகிலே சிறந்தவர்களுக்கு வழங் கும் கௌரவ விருது சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு வழங் கப்பட்டுள்ளது.

உதய சூரியன் (Rising Sun) எனும் இந்த விருது நேற்று முன் தினம் ஜப்பான் தூதுவராலயத்தில் இடம் பெற்ற சிறப்பு நிகழ்வில் ஜப்பான் தூதுவர் கெனிச் சுகனுமாவால் சபாநாயகருக்கு வழங் கப்பட்டது.

உதய சூரியன் (Rising Sun) விருது ஜப்பான் அரசினால் ஒருவருக்கு வழங்கப்படும் உயர்ந்த விருது என்பதுடன் இலங்கையர் ஒருவருக்கு இந்தவிருதுவழங்கப்பட்டமுதல் சந்தர்ப்பம் இதுவாகும். (தி)

## கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு ரூ. 50,000 தண்டம்

சாவகச்சேரி, பெப்.2

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட வரணி வடக்கு வாசிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமும் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனையும் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

கடந்த மாதப் பிற்பகுதியில் கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வரணி வடக்கு காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது. அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நபரைக் கைது செய்து அவரிடமிருந்து 23லீற்றர் 250 மில்லி லீற்றர் கசிப்பையும் உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைதானவருக்கு எதிராக போத்தல் மற்றும் பிளாஸ்ரிக் கொள்கலனில் கசிப்பு வைத்திருந்தமை, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான், கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக 50 ஆயிரம் ரூபா தண்டமும், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் வைத்திருந்தமைக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருடச் சிறைத்தண்டனையும் விதித்தார். (ற-9)

**4 மாடிக்கு மேல் கட்டடம் நிறுவ அனுமதியளிக்க அதிகாரம் கிடையாது**

# யாழ்ப்பாண மாநகர சபைக்கு கொழும்பு அரசினால் தடா

யாழ்ப்பாணம். பெப். 2

4 ஆயிரம் சதுர அடிக்கு மேற் பட்ட நிலப்பரப்பு மற்றும் 4 மாடிக்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு யாழ்ப் பாண மாநகர சபை அனுமதி வழங்க முடியாது. நகர அபிவிருத்தி அதிகார சபையே அனுமதி வழங்க முடியும்.

இவ்வாறு யாழ். மாநகர சபைக்கு, கொழும்பு அரசின் நிர்வாகத்தின் கீழான நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நேற்றைய தினம் கடிதம் அனுப்பி வைக் கப்பட்டது.

மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட யாழ். மாநகர சபை மாத்திரமே வடக்கில் உள்ள ஒரே ஒரு மாநகர சபையாகும். மாநாகர சபை எல் லைக்கு உட்பட்ட பகுதிகளில் நிர்மாணிக்கப்படும் சகல கட்டடங்களுக்குமான அனுமதி யாழ். மாநரக சபையினாலேயே வழங் கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் திடீரென மாநகர சபையின் அனுமதி வழங்கலுக்கு கட்டுப்பாடு விதிக் கப்பட்டுள்ளது. 4 ஆயிரம் சதுர அடிக்கு மேற்பட்ட நிலப் பரப்பில் அபிவிருத்தி வேலை மற்றும் 4 மாடிக்கு மேற்பட்ட கட்டடங்கள் அமைப்பதற்கு யாழ். மாநகர சபை அனுமதி வழங்க முடியாது எனவும், கொழும்பு அரசின் நகர அபிவிருத்தி அதிகார சபையே அனுமதி வழங்க முடியும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் அறிவுறுத் தலுக்கான காரணம் வெளியாகவில்லை. (வ-5)

# அரச அலுவலகங்களுக்காக 200 ஏக்கர் சுவீகரிக்க முடிவு

எருவில், பெப்.2

கல்முனை மாநகர பிரதேசத்தில் இட நெருக்கடி காணப் படுவதால் கரைவாகுவட்டையில் 200 ஏக்கர் காணியை சுவீகரித்து அரச அலுவலகங்கள் மற்றும் பொதுமக் களின் பாவனைக்கான கட்டடங்களை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை பிரதேச ஒருங் கிணைப்புக்குழுக்கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச் சரும் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் கல்முனை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கல்முனை மற்றும் சம்மாந்துறை நகர அபிவிருத்தி திட் டங்களுக்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அமைச்சில் உயர்மட்டக் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பல தீர்மானங்கள் மேற் கொள்ளப்பட்டன. அந்தவகையில் கல்முனை மாநகர பிர தேசம் சனத்தொகை அடர்த்தி கொண்ட நெருக்கடியான பிரதேசமாகக் காணப் படுகின்றது. இந்தப் பிரதே சத்தில் அரச அலுவலகங் களை அமைப்பதற்கான காணிகளைப் பெறுவதற்கான சாத்தியம் இல்லை. கரைவாகுவட்டைப் பிரதேசத்தில் முதற்கட்டமாக 200 ஏக்கர் காணியைச் சுவீகரித்து அப்பிரதேசத்தில் அரச அலுவலகங்கள், பொதுமக் களின் பாவனைக்கான கட் டடங்கள், வர்த்தக கட்டடத் தொகுதிகள் என்பவற்றை அமைக்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கல்முனை புதிய நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பாரிய வீடமைப்பு கட்டடத் தொகுதியை உரு வாக்கி அங்கு குடியேற்றம் செய்யப்போகின்றனர் என்ற உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்பப்பட்டதால் மக்கள்குழப்பமடைந்திருந்தனர். கல்முனை நகர அபிவிருத்தியில் வீடமைப்பு சம்பந்தமாக எந்தச் சந்தர்ப்பத்திலும் பிராஸ்தாபிக்கப்பட்டது கிடையாது. கல்முனை பிர தேசமானது சகல சமூகத்தவர்களும் வாழ்கின்ற பிரதே சம் என்பதால் குறித்த ஒரு சமூகத்தைப் பாதிக்கும் வகையில் எமது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாது.

அந்தவகையில் சகல மதங்களையும் சேர்ந்த பிரதிநிதி களைக்கொண்ட குழு அமைக் கப்பட்டு அதன் ஊடாக குறித்த அபிவிருத்தி திட்டத் தில் என்னென்ன விடயங் கள் உள்ளடக்கப்பட வேண் டும் என்பது தொடர்பில் ஆலோசனை பெறப்பட்டே தீர்மானங்கள் மேற்கொள் ளப்படும். அவிபிருத்தி திட் டத்தை மக்கள் சந்தேகக் கண் கொண்டு நோக்க வேண்டிய அவசியம் இல்லை - என் றார். (ற-யு)

விமையம்

# டாவில் கிழக்கு
# ஷணி அம்பாள் ஆலய
# பாபிஷேக சிறப்பிதழ்
# 02.02.2017



## ஆலய வரலாறு

லே 75 வருடங்களுக்கு முன்பு புற்றில் இருந்து நாகபாம்பின் மகத்துவத்தை அறிந்த
பாங்கல் பொங்கியும் விசேட வழிபாடுகளை ஆற்றியும் வந்தனர். நாகம்பாள் ஆலயம் என
54 ஆம் ஆண்டு எல்லோருடைய பங்களிப்புடனும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயமாக
சின்னப்பு அவர்களால் மேற்படி ஆலயம் புனர் நிர்மாணம் செய்வதற்காகவும் மக்களின்
து ஆலயம் அமைந்திருக்கும் காணி 1942 ஆம் ஆண்டு ஆலயத்திற்கென பொதுவாக
இவ்வாறான சிறப்பும் பழைமையும் வாய்ந்த ஆலயம் வளர்ச்சி கண்டு 2001 ஆம் ஆண்டு
திணைந்து வருடங்கள் கழிந்த நிலையில் பார்ப்போர் பரவசம் அடையும் வகையில்
வறு புதிய திருப்பு முயற்சியுடன் சகல வேலைகளும் கைதேர்ந்த இலங்கை . இந்திய
ளுடன் ஆலயம் 02.02.2017 இன்று சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிசேகம்

ர் இவ் ஆலயம் எனது சிறுவயது முதல்
ளயில் ஆலயம் செல்லும் போதெல்லாம்
ள் உண்டு. 2014 ஆம் ஆண்டு அம்பிகையின்
ன புதிய திருப்பணிச் சபை உருவாக்கப்பட்டது.
ச் சபையில் இணைந்து கொள்ளும் வாய்ப்பும்
ம் பங்களிப்புகளுடனும் வெளிநாட்டு வாழ்
ம் பல வேலைகள் இடம்பெற்று பல கலைஞர்
மக்கப்பட்டு அம்பாளுக்கு இன்று மகாகும்பாபி
கும்பாபிஷேகத்திற்கு உதவி வழங்கிய அனைத்து
ம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**திரு. செ. செந்தூரன்**
**ர்- ஸ்ரீநாகபூஷணி அம்பாள் பரிபாலசபை.**

### யைத்தில் அம்பிகை அருள்புரிவா....

க புனரமைப்புச்செய்யப்படாத ஆலயம் இன்று
கைதேர்ந்த கலைகளினால் இன்று பார்ப்போர்
சியளிக்கிறார். நித்தம் நாம் செல்லும் ஆலயம்
கிழ்வளிக்கிறது.
களில் வசிக்கும் எமது கிராம உறவுகளினதும்
மீது கொண்ட அதீத பத்தியால் அம்பிகைக்கு
கு வழங்கப்பட்ட சிர பண உதவிகள் மூலம்
காட்சி அளிக்கிறது. பாலஸ்தாபன கிரியைகள்
இக் கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற அனைத்து
பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. ஐ. மகாலிங்கம்**
**பொருளாளர் - ஆலய பரிபாலனசபை**

### வாழ்த்துச்செய்தி

ங்களுக்கு முன்பு தற்போது அம்பாள் ஆலயம்
புற்றில் இருந்த பாம்பிற்கு அடியார்கள் பால்
தாக பலர் கூறுவதைக் கேட்டிருந்தேன். 1954

ஆம் ஆண்டு ஆலயமாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. கடந்த கும்பாபிஷேகம் 2001 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. 12 வருடங்களுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்தப்படவேண்டும் என்பது சமய மரபு. அந்தவகையில் 12 வருடங்களுக்கு பின்பு நடைபெற வேண்டிய திருப்பணி வேலைகள் நடைபெறாததால் பல அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்க 12.06.2014 அன்று திருப்பணி வேலைகளை ஆரம்பித்தோம். அம்பாளின் அனுக்கிரகத்தால் எல்லோரும் வியப்படையும் வகையில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்வாகவுள்ளது. திருப்பணி வேலைகள் சிறப்புற சேவையாற்றிய சகலருக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க இறைவியைப் பிரார்த்தனை செய்வதோடு மகா கும்பாபிஷேக சிறப்பு இதழுக்கு எனது வாழ்த்தினை வழங்குவதில் மன மகிழ்வடைகின்றேன்.

**திரு.சு. சுந்தரலிங்கம்**
**தலைவர் - திருப்பணிச் சபை, உப தலைவர் -**
**ஆலய பரிபாலன சபை,**
**செயலாளர்- ஆசிமட அரசடி விநாயகர் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை**

### நாகபூஷணி அம்பிகையின் கும்பாபிஷேகம் சிறக்க வாழ்த்துகின்றோம்

நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இன்று புதுப்பொலிவுடன் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கின்றது. பல ஆண்டு காலமாக எமது புலம்பெயர் கனடா உறவுகளுக்கு அம்பிகையின் ஆலயம் புனரமைக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. பலரது விருப்பம் இன்று அம்பிகையின் திருவருளால் நிறைவேறியுள்ளது. புலம் பெயர்ந்து நாம் வெளியூர் வந்தால் எங்கள் குலதெய்வத்தின் ஆலயத்தை மெருகூட்ட வேண்டும் என எண்ணி எமது கோரிக்கையை ஏற்று உதவிகள் புரிந்த அனைத்து அன்பர்களுக்கும் இறையருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**கனடா வாழ் மக்கள் சார்பாக**
**ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும்**
**குமரன் விளையாட்டுக்கழகமும் இராமகிருஷ்ண பழைய மாணவர் சங்கமும்**



### பொலிவுடன் திகழும் நாகபூஷணி

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருளாலும் நாகபூஷணி அம்மனின் அருட்கடாட்சத்தாலும் அகிலம் போற்றும் அந்தண சிவாச்சாரியார்களின் புனித நற் கிரியைகளினாலும் இன்று நாகபூஷணி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இக்கும்பாபிஷேக செயற்பாடுகளை துரிதப்படுத்தி பூரணப்படுத்துவதில் மிகவும் பொறுப்புடன் நிறைவேற்றிய பெருமை ஆலய பரிபாலன சபையை சாரும். பல்வேறு பணிவகைளை சிறப்பாக செய்து வரும் பரிபாலன சபையினரின் தன்நிகர் இல்லா சேவையைக் கண்ட பலர் போற்றியதும் தூற்றியதும் உண்டு. துற்றுவோர் துற்றட்டும் போற்றுவோர் போற்றட்டும் என அல்லும் பகலும் உழைத்து இன்று மகாகும்பாபிஷேகம் பார்ப்போர் மகிழும் வகையில் இடம்பெறுவது அம்பிகையின் திருவருளே இன்று புதுப் பொலிவுடன் காணப்படும் ஆலயம் சகல கிரியைகள் மூலம் சிறப்புற்று அடியவர்களுக்கு தன் அருளை அள்ளித்தர ஆசிமட அரசடி விநாயகரை வேண்டுகின்றேன்.

**இ. குலசிங்கம்,**
**பொருளாளர் - ஆசிமட அரசடி விநயகர் ஆலயம்**



### எமதுயிர் பூத்த அன்னை நாகபூஷணி அம்பாள்

இவள் கருவறையில் தினம் பூக்கும் மலர்கள் நாங்கள். ஒரு குறையும் எமை நெருங்க இவள் என்றும் விட்டதில்லை ஈஸ்வரியாம் நாகபூஷணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ள புண்ணிய பூமியை வரமாகப் பெற்றது கோண்டாவில் பிரித்தானிய மக்களின் பங்களிப்பும் இல் ஆலய புனரமைப்பிற்கு தேவையென அறிந்து ஓர் அமைப்பு உருவாக்கி பல கொடையாளர்களின் கொடைகளால் இன்று அம்பிகை கும்பாபிஷேகம் காண்பதை நேரடியாகப் பார்க்கும்போது மகிழ்கின்றது மனம். பல்வேறு அழிவுகள் எமது உலகில் நடைபெற்றது. ஆனாலும் கடந்த சில தசாப்த காலங்களில் ஏற்பட்ட பேரழிவுகளில் இருந்து எங்கள் ஊர் காக்கப்பட்டதுவும் நாம் கண்கொண்டு அறிந்த உண்மை. நாகபூசணி அம்பிகையே எம்மைக் காத்து அருள் புரிந்த தாய். மகத்துவமும் தெய்வீக சிந்தையும் கொண்ட நாகபூஷணி அம்பாளின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்படையவும் கும்பாபிஷேகம் சிறப்புறவும் பாடுபட்ட அனைவருக்கும் பேரருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்கின்றேன்.

**பூதத்தம்பி ராஜ்குமார்**
**கோண்டாவில் கிழக்கு அபிவிருத்தி சங்கம்**
**(பிரித்தானியா)**

துவோர்

**விக்கினேஸ்வரா**

பெயின்ற்
எலக்ரிக்கல்ஸ்
தலவாக்கலை.

**SAAJI**
POLY PACKAGING
அனைத்து விதமான LDPE, HDPE Flexo
பாக் வகைகளை குறுகிய கால அழகிய வடிவில்
அச்சுப்பதித்து பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
தொ.பே. 077 220 9474

**மனோதாஸ் றில்லேஸ்**
இயந்திரம் மூலம் குழாய்க்கிணறு
தோண்டுதல் கிணற்றுக்குள் குழாய் அடித்தல்.
கைப் பம் மோட்டா பொருத்துதல்.
291, இருபாலை வீதி,
கோண்டாவில்.
021 221 6584/077 379 7069/
077 839 4755

**கங்கா**
போட்டோ அன் டிஜிற்றல் வீடியோ

HD வீடியோ ஆல்பம் கறுப்பு
வெள்ளை, கலர்ப்படங்கள்
படப்பிடிப்பாளர்கள்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

**ADSHAYA'S**

Palaly Road,
Kondavil Junction
Kondavil
adshayas@yahoo.com
Tel. 075 853 5350


**குமரன்**

ஸ்ரோஸ்
பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி

**கிருபாலேணர்ஸ்**
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Hotline - 077 722 5292
071 454 6960 /021 222 4353
021 492 3200

**ராசன்**

ரயர் வேக்ஸ்
& சேவிஸ்
இருபாலை றோட்,
கோண்டாவில்.






### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச்செய்தி

ஞானவடிவமாக எழுந்தருளி சுதுமலை ஈஞ்சடிப் பதியிலே பல விருட்சங்களை அடக்கியுள்ள விருட்சவடிவமாகவும் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள எம் பெருமானுக்கு (17) குண்டங்களோடு கூடிய புனராவர்த்தனமகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

இத்தருணம் தேவர்கள் மூவர்கள் அனுக்கிரகம் செய்வார்கள் என்பதை ஈஞ்சடி வாழ் அன்பு நிறைந்த பெரு மக்கள் எண்ணல், எண்ணுதல், கருதல், நூல், காட்சி என்னும் அளவுகள் கொண்டு அனுக்கி ரகம் செய்வார் என்பதை எப்பொழுதும் நம்பி இருப்பவர்கள் ஈஞ்சடி வாழ் பெருமக்கள் எம் பெருமானான ஈஞ்சடி பைரவப் பெருமானது அனுக்கிரகம் எப்பொழுதும் இருக்கும் என்பதையும் எனது குலதெய்வமாகிய இணுவில் கந்தப் பெருமானின் திருவருளும் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசிகள் கூறுகின்றேன்.

**கும்பாபிஷேக**
**பிரதிப் பிரதம குரு**
**சிவஸ்ரீ உ. அபராஜித சிவாச்சாரியார்.**



### தர்மகர்த்தா சபைத் தலைவர் உள்ளத்திலிருந்து.....

பல நூறாண்டு புராதனமான ஆலயமாக வேண்டுபவர்க்கு வேண்டிய வரங்களை வழங்கி நல்லருள் பாலித்து வருகின்ற அற்புதத் தெய்வமாகிய எமது ஈஞ்சடி ஞானவைரவப் பெருமானுக்கு இன்றைய இந்த நன்நாளிலே கும்பாபிஷேக பெருச்சாந்தி விழா நடைபெறுகின்றது. சைவப் பெருமக்கள் ஈஞ்சடிப் பதிவாழ் மக்கள் சுதுமலை வாழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற மக்கள் அனைவரும் வைரவப் பெருமான் மேல் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாட்டினால் இம்முறை நடைபெறுகின்ற மகாகும்பாபிஷேகம் (17) குண்டங்களைக் கொண்டதாகவும் நான்கு புறமும் கோபுரங்கள் அழகுப் பொலிவுடன் விளங்கும் வகையிலும் திருப்பணி சிறப்பாக நடைபெற்றுள்ளது. திருப்பணிக்கு சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் பெருமான் திருவருள் தேடி நாடி வந்து சேர்ந்து எல்லோரும் சிறப்புடன் வாழ்வாங்கு வாழ வழிசெய்ய வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்தி நன்றி கூறி அமைகின்றேன்.

**இ. இராசரெத்தினம்**
**தலைவர் - சுதுமலை வடக்கு,**
**ஈஞ்சடி ஞான வைரவர் -**
**தேவஸ்தானம்.**



குடமுழுக்கு
பல நூற்ற
ஈஞ்சடியானுக்
நடத்திய நட
சுதுமலைப்
வைரவர் தேவ

குடமுழுக்
ஆலயங்க
உன்னதமான

**நியூ விநாயகர் ஜீவலர்ஸ்**
கட்டிங் சென்ரர்

உரிமையாளர்
நா. பூலோகநாதன்
213/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ பிரவின்ஜா ஜுவலர்ஸ்**

உரிமையாளர்
இ.சிறிகாந்தன்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

**நாகம்மாள் கடைச்சல் தொழிலகம்**

உரிமையாளர்
பா.பிறேம்நாத்
இல.301,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ ச**
**வெ**


**A.V.S. அரிசி ஆலை**

உரிமையாளர்
வே.சிவராஜா
இணுவில்
மானிப்பாய் வீதி.

**RJ ரட்ணா ஜுவல்லர்ஸ்**

உரிமையாளர்
வை. இரத்தினம்
கே.கே.எஸ். றோட்,
தாவடிச் சந்தி,
கோண்டாவில்.

**S.K.M. நகைப்பூங்கா**

உரிமையாளர்
சி.கமலராணி
K.K.S. றோட்,
சுன்னாகம்.

**இந்தி**
**வேச்**


# கண்டுவில் குளத்துக்கு நிரந்தர வாய்க்கால் அமைக்க கோரிக்கை

சாவகச்சேரி, பெப்.2

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள கண்டுவில் குளத்தில் இருந்து நீர் வெளியேற உரிய வாய்க்கால் இல்லை. அயலில் உள்ள குடியிருப்பாளர்கள் மழைகாலத்தில் இடம்பெயர வேண்டியுள்ளது. கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்தில் குளத்தைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

சாவகச்சேரி சந்தியிலிருந்து டச்சு வீதியில் சுமார் 500 மீற்றர் தூரத்தில் கண்டுவில் குளம் உள்ளது. மழை காலத்தில் சேரும் நீரைக் கொண்டு அயலில் உள்ள காணிகளில் விவசாயிகள் தோட்டம் செய்கின்றனர்.

இந்தக் குளம் நீண்டகாலமாக சீரமைக்கப்படவில்லை. மழை காலத்தில் வெள்ளம் தனியார் காணிகள் ஊடாக வெளியேறுகின்றது. அயலில் உள்ள கண்டுவில் இரண்டாம் ஒழுங்கை தொடக்கம் தபாலக வீதி வரை சுமார் 50க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

50 வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரி பட்டண சபையால் தனியார் காணிகள் ஊடாக கண்டுவில் குளத்திலிருந்து வெளியேறும் நீரை வாய்க்கால் மூலம் பெருங்குளம் வரை செல்வதற்கு வாய்க்கால் அமைத்திருந்தனர். இந்த வாய்க்கால் மூலம் வெளியேறும் நீரால் கற்குளி ஒழுங்கையில் உள்ள குடும்பங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிமெந்து வாய்க்கால் அமைத்து பராமரிக்கப்பட்டது. வெள்ளநீர் வழிந்தோட செருக்கல் பிள்ளையார் கோவில் வீதி தபால் நிலைய வீதி ஆகியவற்றில் மதகுகள் அமைத்தனர்.

காலப்போக்கில் தனியார் காணிகளில் காணப்பட்ட வாய்க்கால் தூர்வாரிப் போனதால் மழை வெள்ளம் வெளியேற முடியாமல் குடியிருப்புகளுக்குள் புகுந்து குடியிருப்பாளர்களை வருடாவருடம் வெளியேற்றுகிறது. 2014 ஆம் ஆண்டு பெய்த பெரு மழையால் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்தனர். நகர சபைத் தவிசாளரின் முயற்சியால் அந்த வாய்க் கால சீரமைக்கப்பட்டு வெள்ளநீர் வெளியேற்றப் பட்டது.

இந்த வருடத்திற்கான கிராமத்துக்கு 5 லட்சம் ரூபா வேலைத்திட்டம் தொடர்பான மக்களின் முன்னுரிமை வேலைத்திட்டங்கள் பற்றிய கூட்டம் அண்மையில் நடைபெற்றது. குளம் சீரமைப்பு மற்றும் வாய்க்கால் அமைப்பது தொடர்பாக மக்களால் கோரிக்கை முன்வைக்கப் பட்டது. நிரந்தர வாய்க்கால் அமைக்க நிதி போதாது என்று அந்தக் கோரிக்கை தட்டிக் கழிக்கப்பட்டு ஏற்கனவே இந்தத் திட்டத்தில் 10 லட்சம் ரூபா செலவில் செய்து முடிக்கப்பட்ட வேலைகளை விஸ்தரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.


மக்களுக்கு வருடாவருடம் பாதிப்பை ஏற்படுத்தும் வெள்ளத்தை வெளியேற்ற வாய்க்காலை இரு வருடங்களில் திட்டமிட்டுச் சீரமைக்க வேண்டும் - என்றனர்.

கண்டுவில் குளத்துக்கு நிரந்தர வாய்க்கால் அமைப்பது தொடர்பாக மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. நிரந்த வாய்க்கால் அமைக்க நிதி போதாமையால் செய்ய முடியாது என்று அதிகாரிகளால் கோரிக்கை ஏற்க மறுத்தனர். வேறு திட்டங்களை முன்வைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க வைத்தியசாலைவரை உள்ள குடிதண்ணீர் குழாய் திட்டத்தை டச்சு வீதியின் புளியடிச் சந்தி வரை நீடிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப் பட்டது. அதுவும் நிராகரிக்கப்பட்டது. அத்துடன் நிரந்தர வெள்ள வாய்க்கால் அமைப்பதற்கு தனியார் காணிகளின் உரிமையாளர்கள் சிலர் பங்களிக்க மறுக்கின் றனர்.- என்று பிரிவு கிராம அலுவலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் தெரிவித்தனர். (ந-9)

விவசாயிகளுக்காக வழங்கப்பட்ட

# இரு சக்கர உழவியந்திரம் பயன்படுத்தாது கிடப்பில்

## கிளி. மாவட்ட விவசாயிகள் குற்றச்சாட்டு



கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட கமக்கார அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட இரு சக்கர உழவு இயந்திரம் உபயோகப்படுத்தப்படாது வீணாக்கப்படுகின்றது என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நிலைமையைக் கருத்திற் கொண்டு விதைப்பு நடவடிக்கைக்காக மாவட்டத்தைச் சேர்ந்த கமக்கார அமைப்புகளுக்கு 2014ஆம் ஆண்டு இரு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளில் இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்த முடியாத நிலையில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே அவை வழங்கப்பட்டன.

இந்த இரு சக்கர உழவு இயந்திரம் கடந்த ஒரு ஆண்டாக கமக்கார அமைப்பின் தலைவரின் வீட்டின் பின்புறம் நிறுத்தப்பட்டுள்ளது. கவனிப்பாரற்று அது சேதமாகும் நிலையில் உள்ளது. விவசாயிகளுக்கு எந்தப் பயனும் இல்லை எனில் அமைப்பின் தலைவர் அதை மீள ஒப்படைக்க வேண்டும். இது போன்று பல இடங்களிலும் வீணடிக்கப்படுகின்றன. அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

கடந்த ஒரு ஆண்டு காலமாக இது பழுதடைந்த நிலையில் உள்ளது. இந்த உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது குறைவடைந்துள்ளது. ஆரம்பத்தில் இதன்மூலம் உழுதவர்கள் அதற்கான பணத்தைச் செலுத்தவில்லை. அதனால் நட்டம் ஏற்பட்டது. ஒரு ஆண்டாக எவரும் இயந்திரத்தை கேட்கவில்லை. அதனால் அது திருத்தப்படவில்லை. தற்போது திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.- என்று பெரியகுளம் கமக்கார அமைப்பின் தலைவர் மாணிக்கராசா தெரிவித்தார்.

இது தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. என்ன நடந்தது என்பது பற்றித் தெரியப்படுத்தப்படும்.- என்று மாவட்ட கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளராக அண்மையில் பொறுப்பேற்ற கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆயகுலன் தெரிவித்தார்.

(ந-21)

# ஆங்கிலம் கற்றிருப்பது மாணவருக்கு அவசியம்

## இந்திய துணைத் தூதுவர் அறிவுரை

யாழ்ப்பாணம், பெப்.2

ஆங்கிலம் இன்று பன்னாட்டு மொழியாக உள்ளது. அதை மாணவர்கள் கற்பது அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதர் ஆ.நடராஜன்

யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். அதன்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கல்வி, பண்பு, ஒழுக்கம், வாசிப்பு பற்றி பேசுகின்றேன். நிலத்தைத் தோண்டத் தோண்ட தண்ணீர் ஊற்றெடுப்பது போல படிக்கப் படிக்க கல்வி வளரும். தினமும் வாசிப்பதைப் பழக்கத்தில் கொண்டு வளர வேண்டும். வாசிப்பு மிக முக்கியம். அதனைப் போன்று மிகவும் முக்கியமானது ஒழுக்கமாகும்.

புத்தகத்தை விரித்து வைத்துவிட்டு கொட்டாவி விடுவது கெட்ட பழக்கம். ஒரு பொருளை எடுத்த இடத்தில் திரும்பவும் அதே இடத்தில் வைக்கப் பழகவேண்டும். எம் தாய்மொழியான தமிழ் இனிமையானது. எமக்கு முக்கியமான மொழி. வடமாகாணத்தில் உள்ளவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள் என உலகில் சொல்லுவார்கள். ஆங்கிலம் உலகில் முக்கியமொழியாக உள்ளது. ஆங்கிலத்தைப் படியுங்கள், ஆங்கிலத்தில் பேசுங்கள்.

விளையாட்டில் நாம் முக்கியமான இடத்தைப் பெறவேண்டும். விளையாட்டும் வாழ்க்கையில் முக்கியமானது. இந்திய அரசு வடமாகாணத்தில் பல பாடசாலைகளை சீரமைத்துள்ளது. மேலும் பல பாடசாலைகளைப் சீரமைக்க உள்ளோம். இந்தப் பகுதி மாணவர்களுக்கு சகல துறைகளிலும் இந்திய அரசு புலமைப் பரிசில்களை வழங்கி மாணவர்களின் உயர் கல்விக்கு உதவி வருகிறது.

க.பொ.த.உயர்தரம் கற்றுத் தேறியவர்கள் எங்களுடன் தொடர்பு கொண்டு இந்த வாய்ப்புக்களைப் பெற முயற்சிக்க வேண்டும். சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கும் எம்மால் புலமைப்பரிசில்களை வழங்கிக் கற்றலுக்கு உதவி செய்கிறோம். போருக்குப் பின்னர் நல்லிணக்கம் பற்றிப் பேசுகிறோம். மாணவச் செல்வங்களாக உள்ள நீங்கள் எதிர்காலத்தில் விஞ்ஞானியாக, சட்டத்தரணியாக பெரிய நிர்வாகியாக, விளையாட்டு வீரராக உயர் பதவிகளுக்கு வர முயற்சி செய்யவேண்டும் என்று எதிர்காலம் பற்றிக் கனவு காணுங்கள். நாளை உங்கள் கனவு நனவாகும் - என்றார். (ந-51)

## மரண அறிவித்தல்

பிறப்பு
06
.
03
.
1943



இறப்பு
31
.
01
.
2017

### வஸ்தியாம்பிள்ளை மன்னர் அன்ரனி
### (B.M. அன்ரனி)

புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை மன்னர் அன்ரனி (B.M அன்ரனி) 31.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செபமாலையின் (பட்டம்மா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கபிரியேல் - மாகிறற்றின் மருமகனும் காலஞ்சென்றவர்களான எட்வேட், புஸ்பம், ஜோர்ஜ் மற்றும் மாலினி, மீரா (சுவிஸ்), ராஜன் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற துரை, ஜெயா, சூட்டி (கனடா), குமரர் (பிரான்ஸ்), றீற்றா (யா/ கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியை),செல்வி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோழினி, குணம் (நோர்வே), விஜயன், ஜீவா (கனடா), சுபாசினி (பிரான்ஸ்), எசார்வே (ஆசிரியர் - ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை ) ஆகியோரின்அன்பு மாமனாரும் றெக்சன் - விஜேந்தினி (லண்டன்), அனிஸ்ரன் - ஜசிந்தா, அலெக்ஸ், ஸ்ரீவினா ஜேம்ஸ்போல், பிரதீப், தணிசா, ஜனனன், ஏற்றியன், இனிஸ், அஸ்வின், தாணியா,பிறீசன், பீற்றர்சன், செறினா, ஆன்சியா, அனோஜ், அதிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆரோன், ஜெறோன், அஷ்லியோ ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.02.2017) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து புனிதயாகப்பர் ஆலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18, சென்ஜேம்ஸ் மேற்கு வீதி,
குருநகர்

தகவல்:
குடும்பத்தினர்

077 193 3530

## அன்னதான மடத் திறப்பு விழா நாளை

சுழிபுரம் திருவடி நிலையில் புதிதாகக் கட்டப்பட்ட அன்னதான சபைக் கட்டடம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்குத் திறக்கப்படவுள்ளது.

முதன்மை விருந்தினராக அ.காங்கேயனும் (மோகன் ஜேர்மனி), கௌரவ விருந்தினராக எஸ்.ஜீவராசாவும், சுழிபுரம் கிராம அலுவலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிய கட்டடத்தை அமைக்க அரசு ஒரு தொகைப் பணத்தை வழங்கியுள்ளது. கட்டடத்தை முழுமையாக்குவதற்கு பொதுமக்களின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

சுழிபுரம் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், சுழிபுரம் பறாளை ஈஸ்வரர் ஆலயம், பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம் சுழிபுரம் மேற்கு ஐயனார் ஆலயம், தீர்த்தத்திருவிழாவுக்கு அன்னதானம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(ற-28)

## நிர்வாகம் தெரிவு

இலங்கை மின்சாரசபை ஓய்வூதியர் சங்க வடமாகாண கிளை ஆரம்பக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக வ.சுப்பிரமணியமும், உப தலைவராக மு.அமிர்தலிங்கமும், செயலராக அ.அன்ரன் ஞானப்பிரகாசமும், பொருளாளராக க.தவராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-10)

# வீதியில் கழிவுகள் கொட்டுவோரை இனங்காட்டினால் சன்மானம்

யாழ்ப்பாணம், பெப்.2

வீதிகளில் குப்பைகளைக் கொட்டுவோரின் வாகன இலக்கங்கள், அவர்களைப் பற்றிய விவரங்களை வழங்கினால் சன்மானம் வழங்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் திண்மக் கழிவகற்றல் தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது. வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், பொலிஸ் அலுவலர்கள், சுகாதாரப் பகுதியினர் அதில் கலந்துகொண்டனர். அதிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வீதிகளில் குப்பை கொட்டுவோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும். தண்டம் அறவிடப்பட வேண்டும். அனைத்துப் பொலிஸ் நிலையங்களில் இருந்தும் சூழல் பாதுகாப்புப் பொலிஸார் நாளாந்தக் கடமையில் ஈடுபட வேண்டும் என்றும் அதில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

வீதிகள் எங்கும் குப்பைகள் காணப்பட்டால் அது நகரமல்ல, நரகம். குப்பையில்லாத பிரதேசங்கள் கிராமமாக இருந்தாலும் அது நகரம் என்றே கணிக்கப்படும். உள்ளூராட்சி சபைகளில் சுகாதாரத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆனால் பிரதேசங்கள் குப்பைகளாகவே காணப்படுகின்றன.

உள்ளூராட்சி சபைகளில் சுகாதாரத் தொழிலாளர்களாக நியமிக்கப்பட்ட சிலர் அலுவலகக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அனைத்துத் தொழிலாளர்களும் குப்பைகள் அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். பணியில் ஈடுபட அவர்கள் மறுத்தால் அவர்களுக்குப் பதிலாகப் புதியவர்களை நியமிக்க வேண்டும். சுழற்சி முறையில் சுத்திகரிப்புப் பணியில் தொழிலாளர்களும், வாகனங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். அனைத்து உள்ளூ ராட்சிச் சபைகளிலும் குப்பைகள் அகற்றுவதற்கான வாகன வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன. அவை குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே சேவை யில் ஈடுபடுகின்றன. காலை 6 மணிமுதல் 6 மணி வரை வாகனங் கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு சபைகளுக்கும் தேவையான ஆளணி வசதிகள் ஏற் படுத்தப்பட்டுள்ளன. எமது பிரதேசத்தைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தை உள்ளூராட்சிச் சபைகளே அந்தந்தப் பகுதி மக்களுக்கு உணர்த்த வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

சுத்திகரிப்புத் தொழிலா ளர்கள் மூலம் தினமும் கழிவுகள் அகற்றப்படுகின்றன. வீடுகளில்வாகன வசதி உள்ள வர் கள் இரவு 9 மணிக்குப் பின்னரும் அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரையான காலப்பகுதியில் குப்பைகளை வீதியில் கொட்டு கின்றனர் என்றுஅனைத்துஉள்ளூராட்சிச்சபைகளின் செயலாளர்களும் குற் றஞ்சாட்டி னர்.

வீதிகளில் கழிவுகளைக் கொட்டு பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக் கப்பட்டது. (ற-ற-21,9)

## மரண அறிவித்தல்



### நாதன் சின்னையா

**(இளைப்பாறிய கணக்காளர் - (இ.போ.ச), சமாதான நீதிவான், இணக்கசபை உறுப்பினர் (பருத்தித்துறை), தனியார் பாரவூர்தியின் முன்னாள் உப தலைவர்)**

யாழ்ப்பாணம், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் உத்தராவத்தை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நாதன் சின்னையா 30.01.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாதன் - பசுபதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பேபி சரோஜாவின் பாசமிகு கணவரும் சி.கற்பகம், காலஞ்சென்ற மாணிக்கம், சின்னம்மா ஆகியோரின் அருமைமிகு சகோதரனும் சுகுணராஜ் (கனடா), சுஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாமினி, உதயராஜன் ஆகியோரின் அன்புமிகு மாமனாரும் சபரினா, சௌமியா ஆகியோரின் ஆசைமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உத்தராவத்தை,**
**பருத்தித்துறை**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**021 2260013, 077 899 9923**

ஆசிரியர் முற்றுகை விவகாரம்;

# கண்டனப் பிரேரணை தற்போது ஏற்றதல்ல

முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.2

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட முற்றுகைப் போராட்டம் தொடர்பாக குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகின்றது.

அந்த விடயம் தொடர்பாக சபையில் கண்டனப் பிரேரணை கொண்டு வருவது பொருத்தமானதல்ல.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 83ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. முற்றுகைப்போராட்டம்தொடர்பாககண்டனப்பிரேரணைஒன்றைஅதில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கொண்டு வரவிருந்தார்.

கடந்த 10 ஆம் திகதி சில பாடசாலை ஆசிரியர்கள் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் காரியாலயத்தை முற்றுகையிட்டனர். செயலாளரது கழுத்துப் பட்டியைப் பிடித்தும், நெஞ்சில் தள்ளியும் அட்டகாசம் புரிந்தனர். அவரைக் காரியாலயத்தில் இருந்து வெளியேற விடாது அட்டகாசம் புரிந்தனர்.

மாணவர்களுக்குக் கல்வியுடன், ஒழுக்கத்தையும் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்கள் சிலர் காடையர்கள் போன்று செயற்பட்டுள்ளனர். இது ஆசிரியர் சமூகத்துக்கே இழிவைத் தரும் செயற்பாடாகும். அது தொடர்பில் கண்டனம் தெரிவிக்கும்வகையில்எனதுபிரேரணையைச் சமர்ப்பிக்கின்றேன் - என்று வடக்கு எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வடக்கு கல்வி அமைச்சர் மற்றும் செயலாளர் அன்றைய அமர்வுக்கு வராததால் பிரேரணை எடுத்துக் கொள்ளப்படவில்லை. அடுத்த அமர்வில் பிரேரணை எடுத்துக் கொள்ளப்படும் என்று அவைத் தலைவர் தெரிவித்தார். (ற-8)

# கள் எனக் கொறிடோனை குடித்தவர் சிகிச்சையில்!

தென்மராட்சி, பெப்.2

கள் என்று நினைத்து கொறிடோன் கரைசலைத் தவறுதலாக அருந்தியவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மந்துவிலில் நடந்துள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய விவசாயி கத்தரிச்செடிகளுக்கு விசுறுவதற்காக கொறிடோன் தூளைக் கரைத்து சிரட்டையில் வைத்துள்ளார். வேறொரு சிரட்டையில் கள்ளை நிரப்பி அருகில் வைத்துள்ளார்.

அந்தநேரம் அயல் தோட்டக்காரர் அழைத்துள்ளார். அவசரத்தில் அவர் கள்ளுக்குப் பதிலாக கொறிடோன் கரைசலை அருந்திவிட்டார். அருந்திய பின்னரே தான் கொறிடோன் கரைசலை அருந்தியதை அவர் உணர்ந்தார். உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.(ற-9)

சாவகச்சேரி வைத்தியசாலையில்

# உடைமாற்றும் அறை இன்றி தாதிய அலுவலர்கள் சிரமம்

தென்மராட்சி, பெப்.2

சாவகச்சேரி வைத்தியசாலையில் தாதியர்கள் உடைமாற்றும் அறை இல்லை. பெண் தாதிய உத்தியோகத்தர்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. தாதிய அலுவலருக்கான சீருடையுடன் பேருந்தில் பயணிக்க முடியாது.

இவ்வாறு தாதிய அலுவலர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 26 தாதிய அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர். அவர்களில் பெரும்பாலோனோர் வேறு பிரதேசங்களில் இருந்து பேருந்தில் கடமைக்கு வருகின்றனர். தாதிய உடையுடன் பேருந்தில் பயணம் செய்துவிட்டு அந்த உடையுடன் நோயாளர்களுக்குச் சேவை செய்ய முடியாது. சாதாரண உடையுடன் வைத்தியசாலைக்கு வந்தால் உடைகள் மாற்ற அறை கிடையாது. பெரும் சிரமத்தின் மத்தியில் கடமைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது - என்று அவர்கள் தெரிவித்தனர்.

போரால் முழுமையாக அழிவடைந்த சாவகச்சேரி வைத்தியசாலையில் விடுதி வசதிகள், வைத்திய அதிகாரிகள் வதிவிடம் என்பன மீள அமைக்கப்பட்டன. தாதிய அலுவலர்களுக்கான வதிவிடம் இன்னமும் அமைக்கப்படவில்லை. வைத்தியசாலையில் கடமையாற்றும் தென்பகுதியைச் சேர்ந்த தாதிய அலுவலர்கள் தாம் கடமையாற்றும் விடுதிகளில் காணப்படும் அறைகளில் தற்காலிகமாகத் தமது பயணப்பைகளை மாதாந்தம் மாற்றிக் கடமையாற்றுகின்றனர். வைத்தியசாலையில் நிரந்தர தாதியர் வதிவிடத் தொகுதிக் கட்டடம் உருவாக்க வேண்டும் என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.(ற-9)

# கூட்டமைப்பால் மட்டுமே தீர்வை அடைய முடியும்

## கூறுகிறார் கிழக்கு மாகாண உறுப்பினர்

மட்டக்களப்பு, பெப் 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர, வேறு எவராலும் அதிகாரப் பரவலாக்கலில் உறுதியாக இருந்து தமிழ் மக்களுக்கு நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது எனக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.



மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு உயர் பெறுபேற்றுக்கான கௌரவிப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களது பகுதிகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவேண்டும். எமது மக்களுக்கான மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கவேண்டும்.
வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு முழு அதிகாரப் பரவலாக்கலுடன் சுயாட்சி ஏற்படுத்தப்படவேண்டும். அதன் ஊடாக எமது காணிகள் வரையறை செய்யப்பட வேண்டும். எமது பாதுகாப்பை நாங்களே உறுதிப்படுத்த வேண்டும்.
இந்த அதிகாரங்கள் எல்லாம் பரலாக்கப்படவேண்டும். காணி அதிகாரங்கள் எங்களுக்கு முழுமையாகப் பெறப்படவேண்டும். அப்போதுதான் எமது பிரதேசத்தினை நாங்கள் அபிவிருத்தி செய்யமுடியும்- என்றார். (த)

### புதிய அரசியல் கட்சிகளின் பதிவு நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, பெப் 2
புதிய அரசியல் கட்சிகளின் பதிவுக்கான விண்ணப்பங்கள் நேற்று முன் தினம் முதல் ஏற்கப்பட்டு வருவதாகத் தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.
2010ஆம் ஆண்டுக்குப் பிறகு அமைக்கப்பட்ட புதிய அரசியல் கட்சிகளின் பதிவுகள் கடந்த ஆறு வருடங்களாக நடைபெறவில்லை எனவும், நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ள விண்ணப்பங்களை ஏற்கும்பணி இந்தமாதம் 28ஆம் திகதி முடிவடையும் எனவும், தேர்தல்கள் ஆணையகத்தில் இதுவரை 64 அரசியல் கட்சிகள் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் ஆணையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (த)

### பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவரின் அலுவலகம் சீல்

#### முக்கிய ஆவணங்கள் மாயமானதால்

கொழும்பு, பெப் 2
பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்துக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.
அந்த அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த, முன்னாள் தலைவருக்கு உரித்துடைய ஆவணங்கள் சில மற்றும் கணினித் தரவுகள் காணாமற்போன சம்பவத்தையடுத்தே, உடன் நடைமுறைக்கு வரும் வகையில் அலுவலகத்துக்குசீல்வைக்கப்பட்டுள்ளது.
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் புதிய தலைவராகச் சட்டத்தரணி நதுன் பொ்ணாண்டோ, கடந்த வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட் டார். எனினும், முன்னாள் தலைவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் சிலர், கடந்த சனிக்கிழமையிலிருந்து அந்தக் காரியாலத்துக்கு வந்து சென்றதாக அறியமுடிகின்றது. அந்த அலுவலகத்துக்கு வந்திருந்தவர்களே, அங்கிருந்த ஆவணங்கள் சிலவற்றையும் கணினித் தரவுகள் சிலவற்றையும் எடுத்துச்சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.
புதிய தலைவராக நியமிக்கப்பட்ட சட்டத்தரணி நதுன் பெர்னாண்டோ, தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் பொறுப்பேற்கவிருந்தார்.
ஆவணங்கள் மற்றும் கணினித் தரவுகள் களவாடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (த)

### ஐ.தே.க. மறுசீரமைப்பு இந்த வாரம் ஆரம்பம்

கொழும்பு, பெப் 2
ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தை மேலும் பெருக்கிக்கொள்ளும் நோக்கில் மறுசீரமைப்புப் பணிகள் இந்த வாரம் ஆரம்பிக்கப்படும் என சிறிகொத்தா தலைமையகம் தெரிவித்தது.
நல்லாட்சி அரசின் பிரதான தூணாக விளங்கும் ஐ.தே.க. இளைஞர், யுவதிகளுக்காக ஏராளமான தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க முழு உத்வேகத்துடன் செயற்பட்டு வருவதாகவும், அதற்கேற்ப கட்சியின் பலமும் அதிகரிக்கப்படவிருப்பதாகவும் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.
நாடு முழுவதிலும் நடக்கவுள்ள இந்த மறுசீரமைப்புப் பணிகள் தொடர்பாகக் கலந்தாலோசிக்க கட்சியின் முக்கிய பிரமுகர்களை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் அலரி மாளிகைக்கு அழைத்திருந்தார்.
குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் என்ற இரண்டு கட்டங்களின் கீழ் இந்த மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் கிராம மட்டத்தில் வீடு வீடாகச் சென்று கட்சிக்கு ஆதரவு திரட்டவேண்டுமெனவும் ரணில் இந்தக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)

## கொள்ளைக் குற்றச்சாட்டில் மூன்று மாணவர்கள் கைது

மட்டக்களப்பு, பெப் 2
வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் மிக நீண்ட நாள்களாகத் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த பாடசாலை மாணவர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
தொடர்ந்தும் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்களான மாணவர்களை கடந்த திங்கட்கிழமை கைது செய்ததாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி எல்.பி.ஜே.குமாரசிங்க தெரிவித்தார்.
வாழைச்சேனை சேகு இப்றாஹிம் வீதியில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றதையடுத்து வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி எல்.பி.ஜே.குமாரசிங்கவின் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.
தொடர் விசாரணைகளின் அடிப்படையில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து பெறுமதியான பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.
குறித்த மூவரிடமிருந்து இரண்டு லட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான தங்கம், டி.வி.டி. பிளேயர், ஒன்பதாயிரம் ரூபா பணம், மேலும் தங்க முலாம் பூசப்பட்ட நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.
கைது செய்யப்பட்டவர்கள் 15 மற்றும் 17 வயதுப் பாடசாலை மாணவர்கள் எனக் கூறப்பட்டது. (த)


TENDER NOTICE
GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRILANKA
MINISTRY OF HIGHER EDUCATION & HIGHWAYS
ROAD DEVELOPMENT AUTHORITY
JAFFNA

**INVITATION FOR BIDS**

01. The Provincial Director, Road Development Authority, Beach Road, Jaffna, on behalf of the provincial Director's Tender Board invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Details of works | District | Bid Security | CIDA Grade |
|---|---|---|---|---|
| 01. | Metalling and tarring for Aavanam Village Internal Road - 1.25 km | Mannar | 100,000.00 | C 7 |
| 02. | Metalling and tarring on Kovilputhukulam 5th lane to Thetkilippaikulam 6th lane junction Road. | Vavuniya | 85,000.00 | C 7 |

02. Bidding will be conducted through the competitive Bidding procedure among Regional Contractors registered within the administrative Limits of Northern Province as per the Public Finance Circular No.04/2016 and letter No.PFD/PMD/Clari/Vol.II.
03. To be eligible for contract award, the successful bidder shall be currently registered with the Construction Industry Development Authority (CIDA) in grade given in the above table in highway speciality.
04. Bidding Documents may be inspected free of charge at the Provincial Director's office, Road Development Authority, Beach Road, Jaffna.
05. Pre - Bid meeting will be held at provincial Director's Office, Kandy Road, Vavuniya on 09.02.2017 at 10.00 a.m and a site visit will be arranged immediately thereafter if necessary.
06. Bidding documents shall be purchased by interesting bidders on submission of a written application to the provincial Director, Road Development Authority, Beach Road, Jaffna along with the certificate issued by Department of Registrar of Companies under public contract Act No.3/1987 from 02.02.2017 until 16.02.2017 on a payment of non refundable tender fee of Rupees.1,500.00(including VAT)
07. Bids shall be valid up to 05.05.2017
08. Bids must be accompanied by a bid security which mentioned in the tender document. Any bid not accompanied by an acceptable bid security will be rejected.
09. Bid security shall be valid up to 02.06.2017.
10. Dead line for the submission of Bids shall be on 17.02.2017 at 14.00 hrs.
11. Each sealed bids shall be dispatched either by registered post or hand delivered to the provincial Director, Road Development Authority, Beach Road, Jaffna to be received before the closing time.
12. Bids will be opened on 17.02.2017 immediately after the closing at the above address.
13. Bidders or their authorized representatives are requested to be present at the opening of Bids.
14. For further details, Please contact provincial Director, on Tel No: 021 222 2517 or 021 222 2580 Fax No: 021 222 2517

**Provincial Director / NP**
**Road Development Authority**
**Beach Road, Jaffna.**

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை பொது அறிவித்தல் - 2017

01. **படவரைஞராகப் பதிவுசெய்தல் - 2017**

2017ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2017ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்வதற்கும், புதுப்பித்துக்கொள்வதற்கும் எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

02. **வியாபாரஉரிமஅனுமதிப்பத்திரம் - 2017**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப் போர் 2017ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப் பப்பத்திரத்தைத் தத்தமது பிரிவிற்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு /ஒட்டுசுட்டான்/ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 31.03.2017 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

03. **வீடமைப்பு நகரசீர்திருத்தக் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்.**

3.1 புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறு கள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

3.2 ஏற்கனவேஅனுமதிபெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத் தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

04. **சூழல் பாதுகாப்புஉரிமம் (EPL) –2017**

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப் பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் நிர்வாகப் பாதுகாப்புப் பிரதேசத்தில் 1533/16ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/ 18ஆம் இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை களில் விதந்துரைக்கப்பட்டதொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப் பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை / நடத்துகின்ற உரிமையாளர் களுக்கு சூழல் பாதுகாப்புஉரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்குவழங் கப்பட்டுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும் இவ்வாறுஉரிமம் பெறாத எவரும் 2017ஆம் ஆண்டு குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ப தனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

05. **விளம்பரங்களைஅமைத்தல் / காட்சிப்படுத்தல்**

இப்பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் நடவடிக்கைகளில் பொருத் தப்பட்டு/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.03.2017ஆம் திகதிக்கு முன் உரியகட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப் பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும் விளம்பரங்களுடான பெயர்ப் பலகை மற்றும் மேலதிகமாக உள்ளபெயர்ப் பலகைகளுக்குப் பிரதேசசபையின் அனுமதிபெறப் படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத பெயர்ப் பலகைகள் 01.04.2016 இலிருந்து எவ்வித முன்னறி வித்தலுமின்றி பிரதேசசபையால் அகற்றப்படும்.

06. **பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்குஅண்மித்தபகுதியில் வைத்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்.**

புதுக்குடியிருப்புபிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அமைந் துள்ள பகுதிகளில் 1.5K.Mஆவரையானசுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள் இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங் களிலோ விற்பனை செய்தல் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

07. **பொது இடங்களில் கழிவுகள் போடல்**

புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருள் களை அனுமதியின்றி கொண்டுசெல்லல் கொட்டுதல் ஆகியன பொது சுகாதா ரத்தைக் கருத்திற் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபை கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

08. **பொது இடங்களிலும் வர்த்தகநிலையங்கள் முன்பாக வும், வீதியோரங் களிலும் கழிவு களைபோடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களை போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருள்களைச் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணத்தினை செலுத்தி சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

09. **பொதுசுகாதாரம் பேணல்.**

சபையின் எல்லைக்குள் அபிவிருத்திசெய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ளகாணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **கட்டாக்காலிகால்நடைகளைக் கட்டிவைத்தல்.**

சபையின் எல்லைக்குள் பொதுப்போக்கு வரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிகால் நடைகளை உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாள ருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**ந.ஜெயராஜா,**
**செயலாளர்,**
**பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**

# பன்னாட்டு தலையீடின்றி கிட்டாது தீர்வு

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



செங்கலடி, பெப்.02

பன்னாட்டுத் தலையீடு இல்லாமல் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நிரந்தரத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் மாறி மாறி வந்த அரசுகள் உரிமைக்காக அகிம்சை ரீதியாக போராடிய எமது தலைவர்களை ஏமாற்றியதன் காரணமாக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்பட்டது. உரிமைக்கான ஆயுதப் போராட்டம் 2009ஆண்டுமுடிவடைந்தது. தற்போது எமது தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இராஜதந்திர ரீதியில் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் பன்னாட்டு நீதிபதிகள் கொண்ட குழுவின் மூலம் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்ற நிலமை கூட தற்போது மழுங்கடிக்கப்பட்டு உள்நாட்டிலே விசாரணை நடைபெற வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய அரசு காணாமல் போனோரின் உறவுகளினால் முன்னெடுக்கப்படும் அகிம்சை ரீதியான போராட்டங்களை கொச்சப்படுத்துகின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அலைந்து இறுதியில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டு பிடியுங்கள் என வலியுத்திப் பெரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற் கொண்டார்கள் .

காணாமல் ஆக்கப்பட்டோர் வெளிநாடு சென்றிருப்பார்கள் அல்லது இறந்திருப்பார்கள் என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்து எமது மக்களை மிகவும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது. இது ஒரு நாட்டின் தலைமை அமைச்சர் கூறக் கூடிய கருத்து அல்ல. தலைமை அமைச்சர் இந்த நாட்டுமக்கள் அனைவரையும் நேசிக்க வேண்டும்.

தலைமை அமைச்சரின் இந்தக் கருத்து நாட்டில் நல்லாட்சி நடைபெறுகிறதா என்பதுடன், வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பார்கள் என்றால் தலைமை அமைச்சரா அனுப்பி வைத்தார் என்ற கேள்விகளையும் எழுப்பியுள்ளது - என்றார். (த-ய-47)

## திருக்கோவிலில் கடலரிப்பு மீன்பிடிக்கு பெரும் பாதிப்பு

அம்பாறை, பெப் 2

திருக்கோவில் பிரதேசத்தில் கடலரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், தங்களது தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

கடற்றொழிலையே ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள தங்களின் எதிர்காலம் கட லரிப்பினால் கேள்விக் குறி யாகியுள்ளதாகவும் அவர் கள் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடற்கரையோரத்தில் கொட்டப்பட்டிருந்த கற்கள் கடலரிப்பால் கடலுக்குள் சென்றுள்ள நிலையில், அந்தக் கற்களில் படகுகளும் வலைகளும் அகப்பட்டுச் சேதமடைகின்றன.

கட லரிப்புக் காரணமாக படகுகளை நிறுத்தி வைப்பதற்கு இடம் இல்லாத நிலமை காணப்படுகின்றது.

இங்கு கடற்கரை வீதியாக அமைந்திருந்த கிறவல் வீதியும், பழைமை வாய்ந்த திருக்கோவில் ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோவிலின் வளாகத்தின் முன் பகுதியும் கடலுக்குள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அரசியல்வாதிகளிடமும் உரிய அதிகாரிகளிடமும் தெரியப்படுத்தியபோது, கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனிடம் கேட்டபோது, அச்சுறுத்தலாகி வரும் கடலரிப்புத் தொடர்பில் உரியவர் களின் கவனத் துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கடலரிப்பைத் தடுக்கும் வகை யிலான வேலைத்திட்டத் துக்கு அதிக நிதிதேவைப்படுகின்றது. இதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற் கொண்டு தருவதாக அரசாங்கம் உறுதியளித்துள் ளது–என்றார். (து)

## தாய்ப்பால் புரையேறி 3 மாதச் சிசு உயிரிழப்பு

அம்பாறை, பெப் 2

திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 3 மாதங்களேயான ஆண் சிசு ஒன்று தாய்ப்பால் புரையேறி உயிரிழந்துள்ளது.

வழமை போன்று சிசுவுக்குத் தாய்ப்பால் ஊட்டுகையிலேயே பால் புரையேறி சிசு உயிரிழந்துள்ளதாகத் தெரிய வந்தது.

சிசுவை திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்குக்கொண்டுசென்ற போதும், அது ஏற்கெனவே உயிரிழந்து காணப்பட்டதாக வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவித்தன. (து)



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாற்பதுவட்டை, மண்மலை எனும் இடத்தில் இறந்த நிலையில் யானையொன்றின் உடல் நேற்று மீட்கப்பட்டது. 10 அடி உயரமுடைய 22 வயது ஆண் யானையொன்றே இறந்துள்ளது. யானை இறந்ததற்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. (ற-ய)

# இரணைதீவு விடயத்தில் வாய்திறக்க மறுக்கும் இணைத் தலைவர்கள்

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

கிளிநொச்சி, பெப்.2

இரணைதீவுநிலைமையை நேரில் சென்று பார்வையிட்ட இணைத்தலைவர்கள் இன்றுவரை மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றனர். கடந்த மாதம் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அது தொடர்பாக வாய்திறக்கவில்லை. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.

நாம் இடம்பெயர்ந்து 25 ஆண்டுகள் ஆகின்றன. சொந்த இடத்தில் மீள் குடியமர்த்தப்படுவோம் என்ற நம்பிக்கை குறைந்துவிட்டது. தங்கி நின்று தொழில் செய்வதற்கான அனுமதியேனும் தரப்படவில்லை. 1992ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த நாம் இரணைமாதா நகர் எனும் கிராமத்தில் வசிக்கின்றோம். எமது பிரதான தொழில் கடற்றொழில்தான். வாழ்வாதாரத் தொழிலைச் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இரணை தீவு விவகாரம் பல தடவைகள் பேசப்பட்டது. கடந்த ஆண்டும் பேசப்பட்டது. இணைத்தலைவர்கள் இரணைதீவுக்குச் சென்றனர். அவர்களுடன் ஊடகவியலாளர்களும் சென்றனர். இரணை தீவில் மக்கள் தங்கிநின்று தொழில் புரிய விரைவில் அனுமதி என மறு நாள் செய்திகள் வெளியாகின. இதுவரை எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை. - என்று மக்கள் தெரிவித்தனர்.

இரணைமாதா நகரில் உள்ள 240 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. நாம் இங்கிருந்து தொழிலுக்குச் செல்வதானால் 25 லீற்றர் மண்ணெய்த் தேவையாகவுள்ளது. இரணை தீவில் தங்கி நின்று தொழில் செய்வதானால் 25 லீற்றர் மண்ணெயை ஒரு கிழமைக்குப் பயன்படுத்த முடியும்.

எமது வாழ்வாதாரம் மிகவும் தாழ் மட்டத்திலேயே உள்ளது. பெரியதீவு, சிறியதீவு, கிழக்குத் தீவு என மூன்று தீவுகளை அடக்கியதே இரணைதீவு. சிறுதீவிலாவது தங்கி நின்று தொழில் செய்ய அனுமதி தர வேண்டும். இரணைமாதா நகர் கிராமத்தில் தற்போது 332 குடும்பங்கள் உள்ளன. நாச்சிக்குடாவில் 10 குடும்பங்களும் உள்ளன. மன்னார் மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் இரணை தீவில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் வாழ்கின்றனர். - என்று இரணைமாதா நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஜோன் கெனடி கூறினார்.

மக்கள் இரணைதீவில் குடியமரவோ அல்லது தங்கி நின்று தொழில் செய்யவோ பாதுகாப்பு அமைச்சே அனுமதி வழங்க வேண்டும். கடந்த ஆண்டு இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இரணைதீவுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். அவர்களின் மக்கள் நிலை தொடர்பாக ஏனைய அதிகாரிகளிடம் பேசினர். மாவட்ட செயலகம் தொடர்பாக நாமும் கடிதம் அனுப்பியுள்ளோம். பாதுகாப்பு அமைச்சுதான் இந்த விடயத்தில் இறுதி முடிவு எடுக்க வேண்டும்.- என்று கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (ற-21,6)

## தனங்களப்பில் பயிரழிவு தொடர்பான பதிவுகள்

தென்மராட்சி, பெப்.2

தென்மராட்சி தெற்கு, தனங்களப்பு கமக்கார அமைப் புக்குட்பட்ட காலபோக 'நெற்செய்கையில் பயிரழிவு ஏற்பட்ட நெற்செய்கையாளர்கள் தொடர்பான பதிவு நாளை மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணி வரை தனங்களப்பு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

பயிர்கள் முழுமையாக அல்லது பகுதியாகச் சேதமடைந்த வயல்களின் செய் கையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவு மேற்கொள்ளும்போது தமது தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் என்பற்றின் தலா இரு பிரதிகள் கொண்டு வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ கமக்கார அமைப்புக்குட்பட்ட பாதிப்புக்குள்ளான நெற்செய்கையாளர்களின் பயிரழிவு தொடர்பான பதிவுகள் நேற்று மறவன்புலோ அபிவிருத்தி அலுவலகத்தில் நடைபெற்றன. (ற-9)



## ஒரு நாடு, ஒரு இனம் என்பதற்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

### வடக்கு அவைத் தலைவர் முதலமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

அரச ஊழியர்களுக்கான புது வருட சத்தியப்பிரமாணத்தில் ஒரு நாடு ஒரு இனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 83 ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. கொழும்பு அரசு மாகாண சபையின் ஒப்புதலைப் பெறுவதற்காக அனுப்பியிருந்த இலங்கையின் நிலைபேறு அபிவிருத்திச் சட்டவரைவு தொடர்பான விவாதம் அதில் நடைபெற்றது. அதன்போதே அவைத்தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்டவரைவு தொடர்பாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவித்தார்.

சட்டவரைபில் ஓரிடத்தில் பலமிக்க ஒரு இனமாக என்ற சொற்பிரயோகம் உபயோகிக் கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் கருத்துத் தெரிவித்தார்.

அரச ஊழியர்கள் இந்த ஆண்டு முதல் நாளில் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டனர். அதற்காக அரசு அனுப்பியிருந்த சுற்றறிக்கையில் , ஒரு நாடு, ஒரே கொடியின் கீழ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சத்தியப்பிரமாணம் செய்த அரச ஊழியர்களால் எதுவும் செய்யமுடியாது.

மாகாண சபையே இது தொடர்பா நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைத் தமிழரசுக் கட்சி அன்று முதல் இன்று வரை ஒரு நாடு இரு தேசிய இனங்கள் என்பதையே வலியுறுத்துகின்றது. சத்தியப்பிரமாணத்தின் ஆங்கில, சிங்கள மொழி சுற்றறிக்கை களை ஆராய்ந்து முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்று அவர் குறிப்பிட்டார். (ற-5,8)

## விடுவிக்கப்பட்ட காணிக்கு உரிமைகோரும் 3 நபர்கள்

வவுனியா, பெப்.2

வவுனியாவில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணி ஒன்றுக்கு மூவர் உரிமை கோரியுள்ளனர். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்த இராசேந்திரன்குளம், பாரதிபுரம் ஆடைத் தொழிற்சாலைக்கு அருகே உள்ள காணி கடந்த ஆண்டு இராணுவத்தால் விடுவிக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்ட காணிக்கு மூவர் உரிமை கோரியுள்ளனர். காணிக்கு உரிமையாளர்கள் இருந்தால் சகல ஆவணங்களுடன் இருவாரத்துக்குள் வவுனியா பிரதேச செயலரைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற):

## முதியவரை தாக்கி பணம் அபகரிப்பு

தென்மராட்சி, பெப்.2

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதோர் முதியவரை மோதிக் காயப்படுத்திவிட்டு அவரிடமிருந்து பணத்தை அபகரித்துத் தப்பியோடினர். முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருவிலில் இடம்பெற்றது. மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த 63 வயது முதியவரே காயமடைந்தார். அவரை அயலவர்கள் சாவகச் சேரி வைத்தியசாலையில் சேர்த்தனர். (ற-9)

### வவுனியா பேருந்து நிலையத்தில் சாரதிகள் இடையே மோதல்:

# விதிகளை பேருந்துகள் மீறினால் நடவடிக்கை

### வவு. தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்சரிக்கை

வவுனியா, பெப்.2

வவுனியா பேருந்து நிலையத்தில் நேற்று ஏற்பட்ட கைகலப்பில் சாரதி ஒருவர் படுகாயமடைந்தார். வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சால் வவுனியா புதிய பேருந்து நிலையம் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையச் செயற்படாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனி தெரிவித்தார். வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் மு.ப. 10 மணியளவில் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துச்சாரதிகள் இடையேமோதல் ஏற்பட்டது. முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்கு வந்த இ.போ.ச. பேருந்துச் சாரதிக்கும், தனியார் பேருந்துச் சாரதிகளுக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அது கைகலப்பானது. இ.போ.ச.சாரதி படுகாயமடைந்தார்.



இரு சாரதிகளும் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய பேருந்து தரிப்பிடத்திலிருந்து மத்திய பேருந்து தரிப்பிடத்துக்கு கொண்டுவரப்பட்ட தூர சேவை பேருந்துகள் அனைத்தையும், புதிய பேருந்து நிலையத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாமல் சேவைகளை நடத்த வேண்டும்.

கடந்த மாதம் மாவட்டச் செயலாளர், வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கு அமைவாக சேவையில் ஈடுபடாத பேருந்து சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனி தெரிவித்தார். (ற-21)

# இஸ்ரேல் விடாப்பிடி

ஜெருசலேம், பெப். 2
பலஸ்தீனத்தின் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக 2 ஆயிரத்து 500 வீடுகளை அமைப்பதில் இஸ்ரேல் அரசு முனைப்புக் காட்டிவந்தது. தற்போது விடுகளின் எண்ணிக்கையை 3 ஆயிரமாக உயர்த்தியது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. இஸ்ரேல் - பலஸ்தீனம் ஆகியன பரம வைரி நாடுகளாக உள்ளன. பஸ்தீனத்திடமிருந்து கிழக்கு ஜெருசலேம் உட்படப் பல பகுதிகளை ஆக்கிரமித்து வைத்துள்ளது இஸ்ரேல் அரசு. குறித்த பகுதிகளிலும் பலஸ்தீனத்துக்கு மிக நெருக்கமாக குடியிருப்புக்களையும் கட்டடத் தொகுதிகளையும் அமைப்பதில் இஸ்ரேல் தீவிரம் காட்டியது. ஆனால் இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இஸ்ரேலின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. எனினும் ட்ரம்பின் ஆதரவுடன் குடியிருப்புக்களை அமைப்பதில் மீண்டும் முனைப்புக் காட்டுகிறது. 2 ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை 3 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டது. (ம-எ)



# அமெரிக்காவின் திட்டத்துக்கு பணிகிறது மெக்சிக்கோ

வொஷிங்ரன், பெப். 2
அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்புவதில் ட்ரம்ப் உறுதியாக உள்ள நிலையில், இந்தத் திட்டத்துக்கு இணங்கிச் செல்லும் சமிக்ஞைகள் மெக்சிக்கோ தரப்பில் வெளிப்படுத்தப்பட்டது.
அதிபர் தேர்தலில் தனது பரப்புரைகளில், ட்ரம்ப் பல்வேறுபட்ட சர்ச்சைக் கருத்துக்களை முன்வைத்து வந்தார். அவற்றில் அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பப்படும். அதற்கான செலவை மெக்சிக்கோவே பொறுப்பேற்கும் என்று தெரிவித்திருந்தார். அரியணையில் ஏறிய பின்னர் தனது திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் முனைப்பாகச் செயற்பட்டார். ஆனால் இந்தத் திட்டத்துக்கு மெக்சிக்கோ உடன்படவில்லை. இதனால், மெக்சிக்கோவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருளுக்கு 20 சதவீதம் வரி அறவிடப்படும் என்றும் மெக்சிக்கோ அதிபர் அமெரிக்காவுக்கு வரத்தேவையில்லை என்றும் ட்ரம்ப் எச்சரித்தார். அமெரிக்காவை பகைத்து மெக்சிக்கோவால் ஒன்றும் செய்ய இயலாது என்று பன்னாட்டு ஊடகங்கள் கருத்துத் தெரிவித்தன. இந்தக் கருத்து தற்போது மெக்சிக்கோவின் தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது.
எல்லையில் சுவர் எழுப்புவது தொடர்பில் பேச்சுவார்த்தைக்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம். செலவில் அமெரிக்காவின் வகிபங்கு எவ்வாறிருக்கும் என்பது தெரிவிக்கப்பட வேண்டும் என்று மெக்சிக்கோவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)






# ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்க மறுத்தது இந்திய உச்சநீதிமன்றம்

## அலங்கா நல்லூரில் கொண்டாட்டம்

மதுரை, பெப். 2
இந்திய உச்சநீதிமன்றம், தமிழ்நாட்டு அரசால் கொண்டுவரப்பட்ட ஜல்லிக்கட்டு அனுமதிச் சட்டத்துக்கு தடை விதிக்க மறுத்ததை அடுத்து, ஜல்லிக்கட்டுக்கு பெயர்போன அலங்காநல்லூரில் பட்டாசு வெடித்துக் கொண்டாடப்பட்டது.
தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை மிருகவதை என்று தெரிவித்து தடைசெய்திருந்தது இந்திய மத்திய அரசு. தமிழ்நாட்டின் அலங்காநல்லூர் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பொங்கல் என்றாலே ஜல்லிக்கட்டு களைகட்டத் தொடங்கிவிடும். ஆனால் இந்தத் தடை காரணமாக கடந்த சில வருடங்களாக ஜல்லிக்கட்டு நடத்தப்படவில்லை. ஒட்டுமொத்த தமிழ்நாட்டளவில் 25 லட்சம் பேர் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து தமிழ்நாட்டரசு அவசர சட்டத்தை இயற்றி ஜல்லிக்கட்டை நடத்தியது.
இந்த நிலையில் தமிழக அரசின் சட்டத்தை எதிர்த்தும், ஏற்கனவே பிறப்பித்த காளைகள் தொடர்பான அறிவிப்புகளைத் திரும்பப் பெறும் மத்திய அரசின் உத்தரவை எதிர்த்தும், உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. தமிழக அரசின் ஜல்லிக்கட்டு சட்டத்துக்கு தடை விதிக்க மன்று மறுத்துவிட்டது.
இதனையடுத்து அலங்காநல்லூரில் பட்டாசு வெடித்து கொண்டாடப் பட்டது. (ம-எ)



# அமெரிக்காவின் மதிப்பு சோதனைக் கட்டத்தில்

## ஒபாமா கடும் அதிருப்தி

வொஷிங்டன், பெப். 2
ட்ரம்பின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு வலுத்து வரும் நிலையில் முன்னாள் அதிபரான ஒபாமாவும் தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார்.
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தனது தேர்தல் பரப்புரைகளில் குறிப்பிட்டதைப் போன்று பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். ஈரான், ஈராக், சிரியா, லிபியா, சூடான், ஏமன், சோமாலியா ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு நுழைவிசைவு வழங்குவதை நிறுத்தி வைக்க உத்தரவிட்டார். எல்லைச் சுவர் அமைப்பதில் முழுத் தீவிரமாக உள்ளார். இதனால் அவர்மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன. இந்த நிலையில் முன்னாள் அதிபரான ஒபாமா, ட்ரம்புக்கு எதிராக கருத்துப் பகிர்ந்தார். அமெரிக்காவின் மதிப்பை ட்ரம்ப் பந்தயத்தில் வைத்துள்ளார் என்று ஒபாமா குற்றம் சாட்டினார். (ம)

## அமெ. உயர்நீதிமன்ற நீதிபதி நியமனம்

அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக நெய்ல் கோர்சர்ச் என்பவரை நேற்றுமுன்தினம் நியமித்தார் அதிபர் டொனால்ட் ட்ரம்ப். அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த அன்டோனின் ஸ்காலியா கடந்த ஆண்டு பெப்ரவரியில் சாவடைந்தார். குறித்த வெற்றிடத்துக்கே இந்த நியமனம் அமைந்தது. (ம-எ)



சென்னை - எண்ணூர் துறைமுகத்தில் கடந்த 27 ஆம் திகதி இரவு ஈரான் நாட்டு கப்பலும் இந்தியக் கப்பலொன்றும் மோதி விபத்துக்குள்ளாகின. இந்தியக் கப்பலில் இருந்த பல்லாயிரக்கணக்கான லீற்றர் டீசல் கடலில் கலந்தது. டீசலை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. டீசல் பரவல் காரணமாக ஏராளமான கடலாமைகள் சாவடைந்து கரையொதுங்குகின்றன என இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# பர்தாவைத் தடை செய்வதற்கு பரிசீலிக்கிறது ஆஸ்திரிய அரசு

ஆஸ்திரிய அரசு, நீதிமன்றங்கள் மற்றும் பள்ளிக்கூடங்கள் போன்ற பொது இடங்களில் முகத்தை முழுவதுமாக மறைக்கும் இஸ்லாமியப் பெண்களின் உடையான பர்தாவைத் தடைசெய்வதற்குப் பரிசீலித்து வருகிறது.
இஸ்லாமியப் பெண்களின் வடிவில் ஆயுததாரிகளின் தாக்குதல்கள் ஆஸ்திரியாவில் அரங்கேறலாம் என்ற அச்சத்தின் அடிப்படையிலேயே இந்தப் பரிசீலிப்பு நடைபெறுகிறது எனப் பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. அரச அலுவலர்கள் பர்தாவை அணிந்து வருவதை நிறுத்தவும் அந்த அரசு பரிசீலிக்கிறது என்று மேலும் குறிப்பிடப்பட்டது. சில ஐரோப்பிய நாடுகள் பர்தாவை ஏற்கனவே தடைசெய்துள்ளன. வேறுசில நாடுகள் தடை செய்வது தொடர்பில் பரிசீலனை செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-எ)

### உலக அளவில் இவ்வருடம்

# 75 லட்சம் குழந்தைகள் ஊட்டச் சத்தின்மையை எதிர்கொள்ளும் அபாயம்



உலக அளவில் 75 லட்சம் குழந்தைகள் இந்த வருடம் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்படுவார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகளுக்கான நிறுவனமான யுனிசெப் கடும் எச்சரிக்கை விடுத்தது.

ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், ஏமன், எத்தியோப்பியா, கென்யா, சிம்பாப்வே போன்ற நாடுகளிலும் வாழும் குழந்தைகள் ஊட்டச் சத்தின்மையால் பெரிதும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்று யுனிசெப் மேலும் சுட்டிக்காட்டியது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஈராக், சிரியா ஆகிய நாடுகளின் சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ளது. அந்த அமைப்பை பொது எதிரியாகக் கொண்டு உலகின் பெரும்பாலான நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈராக்கின் மோசூல் நகரில் தற்போது கடும் தாக்குதல் நடத்தப்படுகிறது. அயல்நாடான சிரியா ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான தாக்குதல், அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவுக்கு எதிரான தாக்குதல் என்று இருமுனைப் போரில் சிக்கியுள்ளது. ஏமனிலும் ஹௌதி அயுதக் குழு கடும் நெருக்கடி கொடுக்கிறது. நைஜீரியாவில் போகோஹறம் அமைப்பு தலை தூக்கியுள்ளது. இந்த நான்கு நாடுகளிலும் அயுதக் குழுக்கள் உள்ள பகுதிகளில் கிட்டத்தட்ட 48 மில்லியன் சிறுவர்களும், குழந்தைகளும் வாழ்கின்றனர். அவர்களுக்கு உதவ 3.3 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது என்றும் குறித்த நிறுவனம் குறிப்பிட்டது. (ம-எ)



இந்தியத் தலைநகர் புதுடில்லியில் செங்கோட்டை முன்பாக பாரத் பாவ் என்ற வருடாந்த கலாசாரவிழா இடம்பெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து நேற்றுமுன்தினம் வரை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்தியாவின் பல்வேறு திசைகளிலும் இருந்து வந்து நூற்றுக்கணக்கான கலைஞர்கள் பங்கெடுத்தனர். (ம-எ)

## தமிழ்நாட்டில் பன்றிக் காய்ச்சல் இந்திய அளவிலும் ஆங்காங்கே

சென்னை, ஜன. 2

இந்தியாவிலும், தமிழ்நாட்டளவிலும் ஆங்காங்கே பன்றிக் காய்ச்சல் பரவி வருகின்றமை இனங்காணப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சேலத்தில் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சாய் ரக்சன் என்ற ஒன்றரை வயதுக் குழந்தை நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தது. பன்றிக் காய்ச்சலுடன் நிமோனியாவும் குழந்தையைப் பாதித்திருந்தது என்று மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்தது. ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பிறிதொரு பெண்குழந்தையும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளது.



இதனையடுத்து காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

முன்னதாக தமிழ்நாட்டுக்கு வெளியே மேலும் மூவர் பன்றிக் காய்ச்சலால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

## ஐ.எஸ்.ஐ.எஸ். உறுப்பினர் வெட்டிக் கொலை

பக்தாத், பெப். 2

ஈராக்கில் 100 பேருக்கும் அதிகமானவர்களுக்கு சாவுத் தண்டனை வழங்கிய ஐ.எஸ்.ஐ.எஸ். முக்கிய உறுப்பினர் ஒருவர் பொதுமக்களால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

அபு சயப் என அழைக்கப்படும் இந்த நபர், பொறுப்பாளராக இருந் துள்ளார். அல் டசாவாப் பகுதியில், தன்னால் கொல்லப்பட்டவர்களின் உடலைப் புதைக்கச் சென்ற வேளையில் அங்கிருந்த மக்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்று ஈராக் ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம-எ)

## பன்றிகளின் அரசன்

பீஜிங், பெப். 2

743 கிலோ எடையில் இராட்சத பன்றி சீனாவில் இனங்காணப்பட்டது.

7 அடி நீளத்தில் 3 அடி 5 அங்குல உயரத்தில் குறித்த பன்றி



இனங்காணப்பட்டுள்ளது. ஹினான் மாகாணத்தில் நடத்தப்பட்ட பன்றிப் போட்டியில் கலந்து கொண்டு பன்றிகளின் அரசன் என்ற தலைப்பையும் வென்றது.

இந்தப் பெண் பன்றி மனிதர்கள் சவாரி செய்யக் கூடிய அளவுக்கு உறுதியானது. (ம-எ)

## அமெரிக்கர்களை வைத்தே அமெரிக்காவைத் தாக்குவோம்
## ட்ரம்ப் நடவடிக்கைக்குப் பதிலடியாக ஐ.எஸ்.ஐ.எஸ். எச்சரிக்கை

கெய்ரோ, பெப். 2

அமெரிக்கர்களை வைத்து அமெரிக்கா தாக்கப்படும் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு எச்சரித்தது.



அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றுள்ள ட்ரம்ப், அமெரிக்காவின் எல்லைகளை பாதுகாப்பதில் அதிதீவிரமாக ஈடுபட்டு வருகிறார். அகதிகள் அமெரிக்காவுக்குள் வர 4 மாதகால தடையைப் பிறப்பித்தார். ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், ஏமன் ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு நுழைவிசைவு வழங்குவதை நிறுத்த உத்தரவிட்டார். மெக்சிக்கோ வழியாக அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் என்று கருதி சுவர் எழுப்புவதில் முனைப்பாக உள்ளார். தனது இந்த நடவடிக்கைகள் அனைத்தும் உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரானது என்று ட்ரம்ப் தெரிவித்துள்ள நிலையில் எல்லைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினாலும் அமெரிக்கர்களை வைத்து அமெரிக்காவைத் தாக்குவோம் என்று ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு எச்சரித்தது.

ட்ரம்ப்பின் உத்தரவுகள் எந்தப் பலனையும் தரப்போவது இல்லை. அமெரிக்காவுக்கு வெளியே இருந்து வந்து எவரும் தாக்குதல்களை நிகழ்த்தப் போவதில்லை. அமெரிக்காவில் பிறந்த, அமெரிக்காவை பூர்வீகமாக கொண்ட அமெரிக்கர்களை கொண்டுதான் அமெரிக்காவை தாக்குவோம் என்று அந்த அமைப்பு வெளியிட்டுள்ள காணொலியில் குறிப்பிடப்பட்டது. (ம-எ)

# ‘மில்லேனியம் சலஞ் கோப்பறேசன்’ உடன்படிக்கைக்கு இலங்கை தெரிவு

## பொருளாதார வளர்ச்சியின் ஊடான வறுமையை எதிர்ப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சி

மில்லேனியம் சலஞ் கோப்பறேசன் பணிப்பாளர்கள் சபையினால் ஐந்து வருட நன்கொடைக்கான மில்லேனியம் சலஞ் கோப்பறேசன் உடன்படிக்கைக்கு இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளதான தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி பொருளாதார வளர்ச்சியின் ஊடாக வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளை மில்லேனியம் சலஞ் கோப்பறேசனின் சிரேஷ்ட உயர் அதிகாரிகள் இலங்கையில் மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது.
இதுசார்ந்த கலந்துரையாடல்களை மேற்கொள்ளவென மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அதிகாரிகள் இலங்கை அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் தனியார் துறையின் தலைவர்களைச் சந்தித்ததுடன் கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள வர்த்தகப் பிரதிநிதிகளையும்,அவர்களின் வணிகம் சார் செயற்பாடுகளையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், தனியார் முதலீடுகள் எவ்வாறான மாறுதல்களை குறிப்பாக, இலங்கையின் அபிவிருத்தி குறைந்த பகுதிகளில் தொழில்களை, வாழ்க்கைத் தொழில் பயிற்சிகளை மற்றும் முதலீடு,தொழில்சார் கல்விக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளன என்பதனை அறிந்து கொள்ளும் விதமாக கிளிநொச்சியில் அமைந்துள்ள கார்கில்ஸ் மற்றும் மாஸ் ஹோல்டிங்ஸ் தொழிற்சாலைகளுக்கும் பிரதிநிதிகள் குழு பயணம் செய்துள்ளது.
இது குறித்து கருத்துரைத்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அதுல் கேஷாப்,
“எம்.சி.சி உடன்படிக்கைக்கு இலங்கை தெரிவு செய்யப்பட்டமையானது நாட்டில் நீதி,ஜனநாயக ஆட்சி மற்றும் பொருளாதார சுதந்திரம் வலுப்படுத்தப்படல் அதேபோன்று மக்களின் முதலீடு சார் செயல்நிலைகளில் காணப்படும் உள்ளார்ந்த உயர்வு நிலை என்பவற்றில் இலங்கை வெளிப்படுத்திய முன்னேற்றங்களுக்கான சான்றாகும் என்றார்.
இதன்போது எம்.சி.சி இன் உயர்மட்டக்குழுவானது
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, தொழிற்றுறை அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன ஆகியோரைச் சந்தித்ததுடன் இலங்கையின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கான முன்னுரிமைகள் தொடர்பில் கலந்துரையாடல்களையும் ஆலோசனைகளையும் பரிமாறிக்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அபிவிருத்தியின் மீதான செழுமையை அதிகரிக்க உதவுவதற்கு உள்ளக ரீதியில் முன்னெடுக்கப்படும் தீர்வுகளில் எம்.சி.சி. செயற்பாடுகள் தங்கியுள்ளன. நல்லாட்சி, ஜனநாயக உரிமைகளை மதிப்பதில் ஊழலுக்கு எதிராகப் போராடல் என்பதான தர நிர்ணயங்கள் உள்ளடங்கலான அடிப்படையில் நாடுகள் தெரிவு செய்யப்படுகின்றன.







“
எம்.சி.சி. உடனான பங்காளித்துவம் என்பது இலங்கை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு கிடைத்துள்ள சிறந்த தருணமாகும். உள்நாட்டிலுள்ள சிவில் சமூக குழுக்கள் மற்றும் தொழிலாளர்கள், தொழில் தருநர்களுடனான பரந்தளவு கலந்தாலோசனைகளை இந்த செயற்பாடுகள் உள்ளடக்கும்.

***பாதிமா சுமார்***,
*எம்.சி.சி. உடன்படிக்கை செயற்பாடுகளுக்கான பிராந்திய பிரதி உதவித் தலைவர்*

## நுட்பம்



### கலக்சி எஸ் – 8
### அதிதிறன்பேசி அறிமுகம்

உலகின் முன்னணி கைபேசித் தயாரிப்பு நிறுவனமான சம்சுங் நவீனத் துவங்களுடன் கூடியதான தனது புதிய அதிதிறன்பேசியினை சில வாரங்களில் அறிமுகம் செய்யவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்படி புதியதான கலக்சி எஸ் - 8 அதிதிறன்பேசிகள் 5.8 அங்குல அளவு மற்றும் 6.2 அங்குல அளவுடைய தொடுதிரைகளைக் கொண்டதான இரு பதிப்புக்களாக வெளிவரவுள்ளது.
இவற்றில் சினாப் டிராகன் 835 புறோசசர், 4 ஜிபி (ரம்) பிரதான நினைவகம், 64 ஜிபி சேமிப்பு நினைவகம் என்பன உள்ளடங்கியுள்ளன.
தவிர 12 மெகாபிக்சல்களை உடையதான பிரதான கமரா, 8 மெகாபிக்சல்களை உடையதான காணொளி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் இவை கொண்டமைந்துள்ளன.
அதேபோன்று 5.8 அங்குலத் தொடு திரை கொண்ட கைபேசியில் 3 ஆயிரம் மெகாவாட்ஸ் மின்கலமும், 6.2 அங்குல அளவுடைய தொடு திரையைக் கொண்ட கைபேசியில் 3 ஆயிரத்து 500 மெகாவாட்ஸ் மின்கலமும் இணைப்புப் பெற்றுள்ளன.

## வணிகம்

### ஜப்பானின் வர்த்தக மற்றும் பாரம்பரிய கலை கலாசார கண்காட்சி நிகழ்வு கொழும்பில்












ஜப்பானின் வர்த்தக மற்றும் பாராம்பரிய கலை கலாசார பயனுறுதிகளை இலங்கையில் வெளிப்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜப்பானின் வர்த்தக மற்றும் பாரம்பரிய கலை கலாசார கண்காட்சி நிகழ்வுகள் கொழும்பில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம் கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை இக் காண்காட்சி நிகழ்வானது இடம்பெறவுள்ளது.
இதன்போது தொழில்நுட்பம் சார்ந்த பல விடயங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளதாகவும் இலங்கை மக்கள் ஜப்பானின் அபிவிருத்தி சார் தொடர்பாடல் வகையறைகளையும் அது சார்ந்த தகவல்களையும் நேரடியாக அறிந்து கொள்வதற்கான சிறந்த வாய்ப்புகளை மேற்படி கண்காட்சி நிகழ்வானது ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனச்சி சுகனுமா தெரிவித்துள்ளார்.

மிருசுவில் தமிழ்தாசன்

# தெருநாய்களும் அவற்றால் பரவும் நோய்களும்



வாலைக்குழைத்துவரும் நாய் தான் இது மனிதருக்குத் தோழனடி பாப்பா! இது அன்று பாரதி பாடிய பாப்பாப் பாட்டு. அதே பாரதி இன்று இப்போதைய நம் சமூகத்தில் வாழ்ந்திருப்பாராகில் ஆளைக் கடித்து வரும் நாய்தான். இது மனிதனுக்குக் காலனடி பாப்பா!" என்று தான் பாடியிருப்பார். நாய் நன்றியுள்ள மிருகம். இருக்கட்டும் அது நன்றியுள்ளதாகவே இருக்கட்டும். அது தன்னுடைய எசமானுக்கு மட்டுமே நன்றியுடையதாகவும் கட்டுப்பாடு கொண்டதாகவுமிருக்கும். ஆனால் ஏனையோருக்கு அது நாய் என்னும் வரையறையைத் தாண்டிப் பேயாக அல்லவா காணப்படுகின்றது. திருடன் வந்தால் குரைக்கும். ஆம் ஒரு வீட்டுக்குள்ளே அனுமதியின்றி வேற்று மனிதர் ஒருவர் நுழைந்துவிட்டால் நாய் குரைப்பது மட்டுமல்ல அவரைக் கடித்தாலும் பாதகமில்லை. ஆனால் தெருவீதிகளிலே கால்நடையாகப் போவோர் வருவோரை, மிதிவண்டிகளில் பயணிப்பவர்களை மற்றும் மோட்டார் சைக்கிளோட்டிகளை இந்த நாயென்னும் பேய்கள் படுத்தும் பாடு சொல்லுந் தரமன்று. எமது யாழ்.மண்ணிலே ஒரு வேளை சூரியன் உதிக்காமல் கூட விடலாம். ஆனால் நாய்க்கடிக்காளாகி மருத்துவமனைக்கு ஒருவராவது போகாத நாளேயில்லை என்று துணிந்து கூறலாம். தெருநாய்களில் நல்லவைகள் எவை விசர் பிடித்து வெறிகொண்டலையும் நாய்களெவையென்று யாராலும் இனம் காண முடிவதில்லை. வீதியிலே அப்பாவித் தனமாகப் பயணிக்கும் பொதுமக்கள் தெருநாய்களால் படும் துன்பங்கள் கொஞ்ச நஞ்சமா! ஒருவருக்கு துரதிர்ஷ்ட வசமாக ஒரு வெறிநாய் கடித்து விட்டால் அவரும் அவரின் குடும்ப உறவுகளும் படும் துயரங்களை வார்த்தைகளில் வடிக்க முடியாது. நாய்க் கடிக்காளானவர் சிகிச்சை பயனளிக்காது சாவைத் தழுவிக் கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படுவதுண்டு. இத்துடன் முடிந்ததா நாய்களின் தொல்லைகள்.

காலையில் எழுந்து பார்த்தால் எமது அழகான தெருவீதிகளை எப்படியெல்லாம் அசிங்கப்படுத்தி விடுகின்றன. வீதியில் பயணிப்போர் அருவருப்புடனும் பெருவெறுப்புடனுமே இயங்கவேண்டியிருக்கின்றது. இதுமட்டுமா நாய்களின் திருமண ஊர்வலங்களைப் பார்த்துப் பெண்கள் சங்கடப்பட்டு ஓடி மறைவதும் பெரியவர்கள் கல்லெறிந்து அவைகளைத் துரத்துவதும் விடலைகளில் ஒரு சிறு கூட்டம் அதை வேடிக்கை பார்த்து ரசித்துச் சிரிப்பதுமாக நிலமைகளிருக்கும். சூழ்நிலை புரியாது கிழடுகட்டை சொத்தி குருடு என்ற பாகுபாடின்றி சனசந்தடியுள்ள இடங்களில் கூட்டம் கூட்டமாக இந்த நாய்கள் பண்ணும் இந்த அட்டகாசங்கள் சகிக்க முடியாதவை. சமூகத்தில் அனுமதிக்க முடியாதவை.

இவைகளுக்கெல்லாம் யார் காரணம்! நாய்கள் பாவம்! அவை ஐந்தறிவு ஜீவன்கள். நல்லது கெட்டதை உணரத் தெரியாத அற்ப பிறவிகள். முற்றுமுழுதாக மனிதரை நம்பியே வாழ்பவை. இந்த நிலையில் வளர்த்தவர்கள் அவைகளைப் பராமரிக்காது வெளியிலே துரத்திவிட்டால் அன்று முதல் அவைகள் தெருநாய்களாகி விடுகின்றன. வயிற்றுப் பசிக்குப் போதிய தீனி கிடைக்காமை, மனிதர்களால் கைவிடப்பட்டு விட்டோமே என்னும் காரணத்தால் ஏற்பட்ட ஒரு வெறுப்புணர்வு போன்ற காரணிகளால் நடுத்தெருவில் நின்று சண்டித்தனம் செய்கின்றன.

குட்டிகளாக இருக்கும் போது எந்த நாயும் அழகாகவேயிருக்கும். அவைகளை வீட்டில் வைத்திருந்து ஜிம்மி, பப்பி, வீரா, சூரா என்னும் செல்லப் பெயர்களையும் சூட்டி நல்ல உணவுகளைக் கொடுத்துச் செல்லம் பேணி அன்புடன் பராமரிப்பவர்கள் கால ஓட்டத்தில் அந்த நாய்கள் சற்று வயது முதிர்ந்து போக, நோய்வாய்ப்பட அவைகளை ஈவிரக்கமின்றி வீதிக்கு விரட்டி விடுவார்கள். இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட நாய்களும் படையினரால் பராமரிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட நாய்களும் நீண்ட காலமாகத் தெருவீதிகளையே பூர்வீகமாகக் கொண்டு வாழும் நாய்களும் ஒன்றுடன் ஒன்று கூட்டணி அமைத்துத் தெரு வீதிகளிலே தமது வதிவிட உரிமைகளைப் பறைசாற்றி நிற்கின்ற நாய்க்கூட்டங்கள் எமக்கெல்லாம் அன்றாட காட்சியாகும். இவ்வாறு அலைந்து திரியும் நாய்கள் காலப்போக்கில் நோய்வாய்ப்பட்டு வீதிகளிலும் வீதியோரங்களிலும் பரிதாபகரமாக இறந்துவிடுகின்றன. அவற்றின் உடல்கள் கூட அகற்றப்படாது வீதிகளிலே கிடந்து துர்நாற்றம் வீசிப் பொதுமக்களுக்கு எத்துணை அசௌகரியங்களை விளைவிக்கின்றன.

இவைகளையெல்லாம் இல்லாமல் செய்து பீதியற்ற சுகாதாரமான சுத்தமான ஒரு சமூகச் சூழலை ஏற்படுத்த முயற்சிப்பது எங்கள் எல்லோரினதும் தலையாய கடமையாகின்றது. வீட்டிலே அளவாக நாய்களை வளர்ப்பது, அவைகளைக் கடைசிக்காலம் வரை வீட்டிலே வைத்துக் கட்டிப் பராமரித்து வளர்ப்பது, பெண்நாய்களுக்குக் கருத்தடைகள் செய்வது போன்ற ஆக்கபூர்வமான காரியங்களை நாமெல்லோரும் உணர்ந்து செய்வோமாகில் நிச்சயமாகத் தெரு நாய்களின் தொகை குறைவதுடன் பொதுமக்கள் நிம்மதியாகவும் வாழலாம்.

இதைவிடத் தெருநாய்கள் காணப்பட்டால் அவைகளை எப்படியோ ஒழிக்கவோ அழிக்கவோ வேண்டிய பொறுப்பு அவ்வப்பகுதி உள்ளூராட்சி மன்றங்களையே சாரும். முன்னைய காலங்களில் தெரு நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டது போன்று எதிர்வரும் காலங்களிலும் செய்யலாம். உணவின்றி நோய்வாய்ப்பட்டு வீதி வீதியாகக் கிடந்து துடித்துப் பதைத்துச் சாவதை விட அவைகளைப் பிடித்து ஒரே தடவையில் அழிப்பது ஒன்றும் பாவச் செயலாகாது. சொல்லப்போனால் இது ஒரு கருணைக் கொலையாகப் பார்க்கப்படும்.

எனவே தெருநாய்களை இல்லாதொழித்து, ஏற்படப்போகும் நோய்களிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும் எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய தேவை இந்தக் கால கட்டத்தில் மிக அவசியமாகின்றது. அதை இன்றே செய்வோம்! நன்றே செய்வோம்.

"நாய்கள் பாவம்! அவை ஐந்தறிவு ஜீவன்கள். நல்லது கெட்டதை உணரத் தெரியாத அற்ப பிறவிகள். முற்றுமுழுதாக மனிதரை நம்பியே வாழ்பவை. இந்த நிலையில் வளர்த்தவர்கள் அவைகளைப் பராமரிக்காது வெளியிலே துரத்திவிட்டால் அன்று முதல் அவைகள் தெருநாய்களாகி விடுகின்றன. வயிற்றுப் பசிக்குப் போதிய தீனி கிடைக்காமை, மனிதர்களால் கைவிடப்பட்டு விட்டோமே என்னும் காரணத்தால் ஏற்பட்ட ஒரு வெறுப்புணர்வு போன்ற காரணிகளால் நடுத்தெருவில் நின்று சண்டித்தனம் செய்கின்றன.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நீதிமன்றத்தின் கரிசனை நியாயமானது

நாடாளுமன்றத் தேர்தல் 2015 ஒகஸ்ட் மாதம் நடைபெறுவதற்குச் சில மாதங்கள் முன்பாகச் சுன்னாகம் பகுதியில் நிலத்தடி நீர் மாசடைந்துள்ளமை குறித்த விவகாரம் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டது. நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்திருப்பதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. சுன்னாகத்தில் இயங்கி வந்த மின் நிலையமே இதற்குக் காரணம் என்றும் சொல்லப்பட்டது. அந்த நிறுவனம் அதனை மறுத்தது.

பெரும் விவாதப் பொருளாக மாறி இருந்த இந்த விவகாரம் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடமும் கனதியான தாக்கத்தைச் செலுத்தியது. அவர்களில் பலர் இந்த விடயத்தில் தமது நிபுணத்துவ உதவிகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் ஓடோடிவந்து வழங்கினர். வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சு, இது பற்றி விசாரிக்கவென ஒரு குழுவையும் அமைத்தது. அந்தக் குழு தண்ணீரில் ஆபத்தான உலோக மூலங்களின் கலப்பு ஏதும் இல்லை என்று தெரிவித்தது. எனினும் அந்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பலரும் பரவலாக மறுத்தனர். ஆபத்தான உலோகங்கள் இல்லையென்றால் அந்தத் தண்ணீரைக் குடிக்கலாமா என்று சொல்லுங்கள் என்ற குரல் வலுத்தது. ஆனால் அதற்கும் நிபுணர் குழு பதிலளிக்கவில்லை. ஆனாலும் மெல்ல மெல்ல விடயம் அடங்கிப்போனது.

தற்போது இந்த விவகாரம் மீண்டும் விவாதப் பொருளாகியுள்ளது. மல்லாகம் நீதிவான் மன்று வழங்கியிருக்கும் கட்டளை அந்த விவாதத்தைக் கிளறியுள்ளது.

சுன்னாகம் உள்ளிட்ட இடங்களில் நிலத்தடி நீரில் எண்ணெய்க் கசிவு உள்ளது என்றும், அத்தகைய குடிதண்ணீர் மனித நுகர்வுக்கு ஒவ்வாதது என்றும் நீதிமன்றம் தனது கட்டளையில் தெரிவித்துள்ளது. நீதிமன்றில் இதுவரையில் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளை ஆய்ந்தே இந்த முடிவுக்கு வந்திருப்பதாகவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அதேநேரத்தில் மற்றொரு முக்கிய விடயத்தையும் நீதி மன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. இந்தப் பிச்சினையில் அரச அதிகாரிகள் மற்றும் தவறான அறிக்கைகளைத் தயாரித்து வெளியிட்டவர்களும் ஏதாவது கையூட்டல் (லஞ்சம்) பெற்றுள்ளனரா என்பது பற்றி, பெரும் நிதிக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் விசாரணை நடத்தவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நிலத்தடி நீரில் கலக்கும் வகையில் கழிவு எண்ணெய்யைவிட்ட குற்றச்சாட்டில் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இந்தப் பிரச்சினையில் ஆரம்பம் முதலே 'பெட்டிகள்' சில கைமாறின என்கிற குற்றச்சாட்டுப் பல தரப்புகளுக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்டு வந்தது. அதையொத்த சந்தேகத்தையே நீதிமன்றமும் இப்போது எழுப்பியுள்ளது.

இந்தப் பிரச்சினை தனது அதிகாரவரம்புக்கு உட்பட்டதொன்று அல்ல என்றாலும், அது குறித்த தீவிர விசாரணையை நிபுணர் குழு ஒன்றின் ஊடாக நடத்துவதாகக்கூறி இதற்குள் தலையை நுழைத்த வடக்கு மாகாண சபை, இது விடயத்தில் முழுமையான தீர்வு ஒன்றைத் தரத் தவறியிருந்தது. அதேநேரத்தில், சபையின் நிபுணர்கள் குழு வெளியிட்ட முடிவுகளின் அடிப்படையில், மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்க ஒதுக்கப்பட்ட நிதி நிறுத்தப்பட்டதாக அரச அதிகாரி ஒருவர் கூறியதையும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியிருக்கிறது.

உதவி செய்யாவிட்டாலும், உபத்திரவமாவது செய்யாமல் இருக்கலாம் என்பது தமிழின் வழக்கு மொழி. வடக்கு மாகாண சபையைப் பொறுத்தவரையில் நீதிமன்றக் கட்டளை அதனைத்தான் இடித்துக் காட்டுகிறது.

நிலத்தடி நீர் மாசு தொடர்பான இந்த விவகாரத்தில் தனது மக்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டிய அதிகார ரீதியான கடமை மாகாண சபைக்கு இல்லாவிட்டாலும், தார்மீகக் கடமை இருக்கிறது. அதிலிருந்து சபை விலகிச் சென்றுள்ளது என்பதையும் நீதிமன்றக் கட்டளை மறைமுகமாகத் தொட்டுக் காட்டுகிறது.

நீதிமன்றத்தின் கரிசனை நியாயமானது. மக்களின் நலன் மீது அக்கறை கொண்டது. அந்தக் கரிசனையின் அடிப்படையில் நேர்மையான விசாரணை ஒன்று இது விடயத்தில் நடத்தப்பட்டு உண்மைகள் அனைத்தும் அம்பலப்படுத்தப்படவேண்டும். மக்களின் உயிருடன் விளையாடுவது நிறுத்தப்படவேண்டும்.



## அரசியல் தலைமையை நிராகரித்த முன்மாதிரி

# ஜல்லிக்கட்டுப் போராட்டம்

மு.ஈழத்தமிழ்மணி

தமிழகத்தின் வரலாறு கண்டிராத போராட்டமாய் அமைந்தது, தைப் புரட்சி என்று அடையாளப்படுத்த ஜல்லிக்கட்டுக்கான தடை நீக்கப் போராட்டமாகும். ஜல்லிக்கட்டுக்கான தடையைக் கொண்டு வந்த 'பீட்டா' என்கிற அமைப்பையும் தடைசெய்யக் கோரியும், ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு உயர் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த தடையை முற்றாக விலக்கக் கோரியும் இளைஞர்கள் பலர் ஜனவரி 17ஆம் நாள் ஜல்லிக்கட்டுக்குப் பெயர் போன மதுரை மாவட்டத்திலுள்ள அலங்காநல்லூரில் அறவழியில் தங்களது போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

காளைகளுக்கான போராட்டத்தில், காளையர்களின் உணர்வுகளுடன், ஆரம்பத்திலிருந்து ஓரிரு நாள்கள் கழிய போராட்டத்துக்குப் பேராதரவு பெருகியது. ஜனவரி 17ஆம் நாள் சுமார் 500 இளைஞர்கள் வரையில் கலந்து கொண்ட போராட்டத்தின்போது, தமிழக பொலிஸார் தடியடி நடத்தியிருந்தனர். இதன் விளைவாகவே போராட்டம் எழுச்சி கண்டது.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தின் மதுரை மாவட்டத்திலுள்ள அலங்காநல்லூர், பாலமேடு போன்ற இடங்களில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழமையாகும். தமிழர்களுடைய பாரம்பரிய வீர விளையாட்டான ஏறு தழுவுதல் என்கிற ஜல்லிக்கட்டுக்குக் கொண்டு வரப்பட்ட தடையினால், 2014 ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையான 3ஆண்டுக்ள் ஜல்லிக்கட்டுப்போட்டிகள் நடைபெறவில்லை.

### ஜல்லிக்கட்டு நடத்தத் தடை உத்தரவு வாங்கிய 'பீட்டா' அமைப்பு

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான தைப்பொங்கலையொட்டி நடத்தப்படும் ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு எதிராக, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து விலங்கு நல அமைப்பான 'பீட்டா' தடை உத்தரவு வாங்கியிருந்தது. இந்தத் தடை விலகும் என நம்பி மூன்று வருடங்கள் வரை பொறுத்திருந்த தமிழகத் தமிழர்கள், கொதித்தெழுந்து ஜனவரி 17ஆம் திகதி தொடக்கம் போராடிக் கொண்டிருந்தனர்.

அலங்கா நல்லூரில் ஆரம்பித்த ஜல்லிக்கட்டுத் தடை நீக்கப் போராட்டம், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவடைந்தது மட்டுமல்லாமல், சென்னை நகரிலுள்ள மெரீனா கடற்கரையில் இறுதிப் போராட்டமாக மையம் கொண்டிருந்தது. ஒரு வாரகாலப் போராட்டத்தின் போது, இப் படை தோற்கின் எப்படை வெல்லும், என எழுச்சிக் கோசமிட்டவாறு மாணவர்கள், இளைஞர்கள் அலை அலையாக இரவுபகலாகப் போர்க்களம் நோக்கித் திரண்ட வண்ணமிருந்தனர். மாணவர்களின் எழுச்சி முழக்கம் தமிழகம் முழுவதும் எதிரொலித்தது. எதற்காகப் போராடுகின்றோம்? ஏன் போராடுகின்றோம்? என்ற கனதி மிக்க கேள்விகளை ஒவ்வொரு தமிழன், தமிழிச்சியும் சுமந்தவாறு மெரீனாக் கடற்கரை நோக்கி வருகின்றனர்.

தமிழர்களின் அடையாளமான ஏறுதழுவுதல் விளையாட்டுக்குத் தடைபோடுவிக்க 'பீட்டா' அமைப்புக்கு என்ன உரிமை உள்ளது? எங்கள் கலாசாரத்தில் கை வைப்பதற்கும், தமிழர்களின் உரிமைகளை மறுப்பதற்கும் ஜல்லிக்கட்டா கிடைத்தது? என்றவாறு எழுப்பப்பட்ட உரிமை முழக்கம் உலக நாடுகள்வரை நீண்டு சென்றது மட்டுமல்லாமல், ஈழத்தமிழினத்தின் தாயகத்திலும் ஓங்கி ஒலித்து ஆதரவு தெரிவித்திருந்தது. ஜல்லிக்கட்டுப் போட்டிகள் தமிழர்களது பாரம்பரியவீரவிளையாட்டாகும். தென்னிந்தியாவில் மட்டுமே கலாசார பாரம்பரிய விளையாட்டாக ஜல்லிக்கட்டு நடைபெற்று வந்தது.

போராட்டத்தின் முக்கிய இடமாக மெரீனா மாற்றமடைந்தது. தமிழர்களின் நியாயமான அறப்போராட்டத்தால் இலட்சக் கணக்கில் திரண்டு இரவு பகலாக ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்த இளைஞர்கள், மாணவர்களின் கோசங்களால் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்ற மெரீனா கடற்கரையின் அலைகளின் ஆர்ப்பரிப்பும் அடங்கியேயிருந்தன.

ஜல்லிக்கட்டுப்புரட்சி தைப்புரட்சி என அடையாளமிடப்பட்டிருந்த எழுச்சி மிகு போராட்டமாக அறவழியில் அமைந்திருந்தது. பாடசாலைகள், கல்லூரிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. சில மாவட்டங்களில் கல்லூரிகளுக்கு விடுமுறைகள் வழங்கப்பட்டன. இளைஞர்கள் தங்களது வேலைகளைத் தற்காலிகமாக ஒத்திவைத்துவிட்டும், குழந்தைகள், சிறுவர்கள், யுவதிகள், தாய்மார்கள், முதியவர்கள் என வீட்டைவிட்டு வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

### தமிழக அரசின் அலட்சியப் போக்கால் எழுச்சிகண்ட போராட்டம்

தமிழக அரசு ஆரம்பத்தில் இளைஞர்களின் போராட்டம் தானேயென்று அலட்சியமாக இருந்து விட்டது. தமிழக அரசினது அசண்டையீனத்தை உணர்ந்த இளைஞர்களுடன், ஏனைய தொழிற்சங்கங்கள், பல்வேறு அமைப்புகள் என ஆயிரக் கணக்கில் மாணவர்களுடன்

போராட்டத்தில் இணைந்து கொண்டன. தி.மு.கவின் ரயில் மறிப்புப் போராட்டங்கள், உண்ணாவிரதம் என்பனவும் இளைஞர்கள்- மாணவர்களின் எழுச்சியும் தமிழக அரசின் நிம்மதியைக் குலைத்தன.

தன்னெழுச்சி கொண்டெழுந்த மாணவர்கள், இளைஞர்களால் எந்த அரசியல் தரப்புக்களது தலையீடுகளுமின்றி, எவருமே தலைமை தாங்காமல் ஒரு கட்டமைப்போடும், ஒழுக்கத்தோடும் பண்பாடு காத்து நடத்தப்பட்டுக் கொண்டிருந்த வீரமிகு போராட்டத்தைக் கண்டு தமிழக அரசு ஆடிப்போய் விட்டது.

முழுத்தமிழகமே ஸ்தம்பித்துவிடும் என்று தமிழக அரசு அஞ்சிய நிலையில் ஜல்லிக் கட்டு நடத்துவதை உறுதிப்படுத்தி அவசரச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என வலியுறுத்துவதற்காக போராட்டத்துக்கு முன்தோன்ற விரும் பாத முதல்வர் ஓ.பன்னீர்ச் செல்வம் 19 ஆம் திகதி பிரதமர் மோடியுடன் அது குறித்து உரையாடுவதற்கு டில்லிக்குப் பறந்து சென்றார்..

முதலமைச்சரால் மோடிக்கு எடுத்துரைக்கப்பட்ட ஜல்லிக்கட்டு விவகாரம் சம்பந்தமாக 'குறித்த விடயம் தொடர்பாக பரிசீலிக்கின்றேன்' என்று கூறி பிரதமர் மோடி கைவிரித்து விட்ட நிலையில் முதலமைச்சர் சென்னை திரும்பியிருந்தார்.



போராட்டமோ நாளுக்கு நாள் உக்கிரமடைந்தது. நடிகர்கள், போக்குவரத்துச் சங்கங்கள், 40 இலட்சத்துக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு வெற்றி கிடைக்கும் வரை போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவோமென அறைகூவல் விடுத்தன. ரயில்களையும் நகரவிடாது இளைஞர்கள் மறித்து மறியல் போராட்டத்தை நடத்தினர். இவைகள் யாவும் தமிழக அரசுக்கு பல மடங்கு நெருக்கடியைக் கொடுத்திருந்தது.

தமிழகத் தமிழர்களின் உரிமைக் குரலுக்குத் தமிழக அரசு மதிப்பளித்தேயாகவேண்டும் என்ற நிலைப்பாட்டில், தமிழக சட்டசபை கூட்டப்பட்டு 23ஆம் திகதி மாலையிலிருந்து நடைமுறையாகும் வகையில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான நிரந்தரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஒரு வாரகாலமாக நடைபெற்ற தமிழர்களின் தைப் புரட்சிப் போராட்டம் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது.

தமிழர்களின் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு இனிவரும் காலங்களில் எவராலும் தடைபோடமுடியாது. தடை போடுவதற்கு எவருக்கும் எந்த வித உரிமையுமில்லை. உலகம் முழுவதும் வாழுகின்ற தமிழர்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் இந்தப்போராட்டம் தட்டியெழுப்பியிருந்தது. தமிழக மக்களின் இந்த எழுச்சி மிகு போராட்டம் இந்திய வரலாற்றில் வேறு எந்த இனத்தவர் மத்தியிலும் இடம்பெற்றிராத விதத்தில் பண்பாடு, கலாசாரம்பேணல் என்பவற்றை உள்ளடக்கியதுமட்டுமன்றி, பெண்களின் பாதுகாப்பு, நல்லொழுக்கம் என்பவற்றைக்கவனத்தில் கொண்ட போராட்டமாகவும் அமைந்தது.

தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அவர்க்கொரு குணமுண்டு என்பதைப் பல்வேறு இனமக்களுக்கும் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தினூடாக உணர்த்தி, பெருமை பெற்ற இனமாக, உலகம் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் தமிழ்நாட்டு இளைஞர்கள் நிரூபித்து விட்டுள்ளனர்.

தலைவர்கள் இல்லாது, அரசியல் கட்சிகளின் எந்தவித தலையீடுகளுமின்றி, வழிநடத்தலுமின்றி இளைஞர்களும் மாணவர்களும் போட்டி போடாமல் தங்களைத் தாங்களே புரிந்து கொண்டு, தன்னெழுச்சியுடன், ஏழு நாள்களிலும் போராட்டத்தில் சோர்வின்றி இரவு பகலாகக் கலந்து கொண்டமை முக்கிய சிறப்பு அம்சமாகும்.

### சகல தரப்பினரும் ஒன்றிணைந்து நடத்திய போராட்டம்

எங்கள் இளைஞர்களே எங்களுக்குப் பாதுகாப்பு என்றவாறு உறுதிப்படுத்திக் கொண்டு, ஆயிரம் ஆயிரம் இளம் யுவதிகள், கல்லூரி மாணவிகள் அலங்காநல்லூரிலும், மெரீனா கடற்கரையிலும் அந்த நம்பிக்கையுடன் அறப்போராட்டத்தில் கலந்து கொண்டதை பெண்ணினம் வியந்து பார்க்கின்றது. 'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' என்ற அந்த வரிக்கு தமிழன் உரித்துடையவன். அந்த வீரவரிகளுக்கு தமிழன் என்றும் சொந்தக்காரன் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

இளைஞர்கள் பெண்ணினத்துக்கு வழங்கிய மரியாதையைக் கண்டு அறிவு சார்ந்தவர்கள், பண்பாட்டியலாளர்கள், மதப் பெரியார்கள், தமிழ்ப்புலவர்கள், அறிஞர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இளைஞர்களைப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்களின் பாரம்பரியத்துக்குக் கிடைத்த வெற்றி. உலகத்தமிழர்களின் ஒன்றுபட்ட பலத்துக்குக் கிடைத்த வெற்றி. தமிழர்கள் ஒன்றுபடவும் தலைமையில்லாமல் கட்டமைப்புடன் போராட்டத்தை நடத்தவும் முடியும், வெற்றி காணவும் முடியும் என்பதற்குச் சமூக வலைத்தளங்களான முகநூல், டுவிட்டர், வாட்ஸ்அப் மட்டுமன்றி தமிழகத்தில் இயங்குகின்ற சில தொலைக் காட்சிகளும் பக்கபலமாக இருந்தன.


ஜல்லிக்கட்டு என்ற தமிழர்களின் வீர விளையாட்டு இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. அது பாரம்பரியமாக, தொன்று தொட்டு வழக்கிலிருந்து வருகின்றது. ஓர் இனத்தின் வீரத்தையும், கலாசார உரிமையையும் அடையாளப்படுத்தும் ஜல்லிக்கட்டைத் தடை செய்வது கலாசார உரிமை மீறல் என்ற தமிழர்களின் வாதத்துக்கும், போராட்டத்தில் தடையை உடைப்போம் என்ற சவாலுக்கும், கிடைத்த வெற்றியானது தமிழர்கள் குட்டக் குட்டக் குனிபவர்கள் அல்ல என்பதைத் தமிழக மத்திய அரசு தொடக்கம் பீட்டா அமைப்பு வரை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை ஒருவார காலப் போராட்டம் உணரவைத்துள்ளது.

மெரீனா கடற்கரையில் நிகழ்ந்த சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று சமூக வலைத்தளங்களில் பிரபல்யமாகப் பார்க்கப்பட்டது.

மெரீனா கடற்கரையில் இடம்பெற்ற போராட்டத்தின்போது, பெண்ணொருவர் விடுதலைப்புலிகளின் தலைவரான பிரபாகரனின் உருவப் படத்தைத் தாங்கியவாறு கலந்து கொண்டிருந்தார். அப்போது பிரபாகரனின் படத்துடன் எதற்காக இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றீர்கள் எனக் கேள்வி கேட்கப்பட்டதற்கு, அந்தப்பெண் இவர் இல்லாமல் தமிழருக்கு உணர்வு எப்படிவரும் என்று பதில் அளித்திருந்தார்.

உலகத் தமிழர்களின் கண்முன் இன்றும் சரி, எதிர்காலத்திலும்சரி தமிழினத்தின் போராட்டங்கள் உலகின் எந்தக் கோடியில் நடைபெற்றாலும், தமிழர்களின் போராட்டத்துக்கு விடுதலைப் புலிகளின் தலைவரானவே.பிரபாகரன் உதாரணம் காட்டப்படுவதை எவராலும் நிராகரிக்க முடியாது என்பதையும் ஜல்லிக்கட்டுப் போராட்டம் எடுத்துக் காட்டி நிற்கின்றது.





# வாசகர் திருமுகம்

## இன்றே செய்வோம்; அதனை நன்றே செய்வோம்

தொற்றுநோய் ஆய்வுப்பிரிவின் தகவலின்படி, 2017 ஜனவரி மாதத்தில் மட்டும் நாடு தழுவிய ரீதியில் 6500 க்கு மேற்பட்டோர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளானதாக இனம் காணப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. நாட்டில் டெங்குநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வரும் நிலையிலும், பொதுமக்கள் மத்தியில் அதற்கான விழிப்புணர்வும் அக்கறையும் போதிய அளவில் இருப்பதாகக் கருதமுடியவில்லை. அதேவேளை, கிணற்று நீரில் பெருக்கமடையும், இலேசில் அழித்தொழிக்க இயலாத வீரியம் கொண்டதும், மலேரியா நோயைப் பரப்பவல்லதுமான புதிய நுளம்பு இனமொன்று தலைமன்னார், பேசாலைப் பிரதேசத்தில் இனம் காணப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள செய்தி சமூக ஆர்வலர்களைக் கவலையுற வைத்துள்ளது. சமூகத்தின் அங்கங்களான நாம், சமூகமட்டத்தில் ஏற்படத்தக்க சுகாதாரப் பாதிப்பை, தொற்று நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த சுற்றுச்சூழல் சுகாதாரம் பேணி எம்மாலான முழு ஒத்துழைப்பையும் வழங்கி சமூகபொது நலன் பேண முயற்சித்தல் அவசியமான தொன்று. இன்றே செய்வோம்; அதனை நன்றே செய்வோம்.

*க.அருளம்பலம், துன்னாலை*


## இடம் பெயர்ந்தோருக்கான கொடுப்பனவு கிட்டுமா?

இறுதிப் போரின் பின்னர் செட்டிகுளம் மெனிக் பாம் முகாமிலிருந்து வடக்கில் மீளக் குடியமர்ந்த மக்களில் அரச கொடுப்பனவான ரூபா 25,000 கிடைக்காதவர்களின் பட்டியலைச் சமர்ப்பித்தால், அவர்களுக்கான பணத்தை உடனடியாக வழங்குவதற்குத் தாம் ஏற்பாடு செய்வதாக அமைச்சர் ரிசாத் பதியூதீன் தெரிவித்ததாக பத்திரிகையில் செய்தி வெளிவந்திருந்தது. இவ்வாறு பணம் கிடைக்காதவர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறும், வங்கிக் கணக்கொன்றைத் தமது பெயரில் திறக்குமாறும் நல்லூர் பிரதேச செயலகம் கேட்டுக் கொண்டுள்ளதாக முன்பொரு சமயம் பத்திரிகையில் செய்தி வந்ததற்கமைய நல்லூர் பிரதேச செயலகம் திருநெல்வேலியில் இயங்கியபோது உரியபதிவுகளை நாம் அங்கு மேற்கொண்டிருந்தோம். ஆனால் எமக்கான கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை. அந்தப் பட்டியலை அமைச்சரது அண்மைய அறிவித்தலுக்கமைய மீண்டும் சமர்ப்பித்து, எமக்கு 25,000ரூபா கொடுப்பனவு கிடைக்க பிரதேச செயலகம் வழி சமைக்குமா என ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

*மீளக்குடியமர்ந்த போதிலும்*

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: ஜோதிடர்





**மேடம்:** கடந்த கால இனிய அனுபவங்களை எண்ணி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்களுக்கு பணிச்சுமை ஏற்பட வாய்ப் புண்டு. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



**இடபம்:** அறிமுகம் இல்லாதவர்களும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு உயரும். தொழிலில் ஆதாயம் பன்மடங்கு கூடும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.



**மிதுனம்:** புதிய உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தாமதித்த பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து போட்டியாளர்களை வியப்பில் ஆழ்த்தும். முதலீட்டை அதிகப்படுத்துவீர்கள்.



**கடகம்:** நற்செயல்களில் ஈடுபட்டு மகிழ்ச்சி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் சராசரி விற்பனை இருக்கும். லாபம் படிப்படியாக உயரும். வெளியூர் பயணத்திட்டத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.



**சிங்கம்:** குடும்ப சிரமங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருகிற குறுக்கீடுகளை உடனடியாக சரிசெய் வது நல்லது. பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.



**கன்னி:** பேச்சில் நல்லெண்ணம் வெளிப்படும். தொழில், வியாபார வளர்ச்சியால், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். குடும்பத்தினரின் தேவை யறிந்து நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெற்று மகிழ்வர்.



**துலாம்:** சமூகத்தில் மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.



**விருச்சிகம்:** மனக்குழப்பம் உருவாகி மறை யும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும்.



**தனுசு:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. லாபம் மித மாக இருக்கும். உடல்நலனின் அக்கறை கொள்வீர்கள்.



**மகரம்:** சமூக பொறுப்புடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபி விருத்தி பணி, திட்டமிட்டபடி நிறைவேறும். லாபம் பன்மடங்கு உயரும். மாணவர்கள் அக் கறையுடன் படிப்பர்.



**கும்பம்:** செயல் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். உறவினர் வகையில் திடீர்ச் செலவு ஏற்படலாம். வாகன போக்குவரத்தில் கவனமாக இருக்கவும்.



**மீனம்:** பேச்சில் நேர்மை நிறைந்திருக்கும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். லாபம் உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

# வசனங்களே இல்லாமல் படம் எடுக்கும் கார்த்திக் சுப்புராஜ்



ஜெகதீஷ் பாண்டியன் இயக்கி இருக்கும் 'எஸ்கேப்' என்ற படம் வசனங்கள் இன்றி எடுக்கப்பட்டுள்ளது. தென் இந்தியாவில் சிறந்ததொரு குறும்படங்களை தயாரிக்கும் நிறுவனமாக விளங்கி கொண்டிருக்கும் கார்த்திக் சுப்புராஜின் 'பெஞ்ச் பிலிக்ஸ்'. தொடர்ந்து எண்ணற்றதிறமைவாய்ந்த இளம் இயக்குநர்களையும், அவர்களது படைப்புகளையும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்த வண்ணம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதன் மூலம் பல்வேறு குறும்படங்களும், ஆவணப் படங்களும் வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றன. இவர்களின் அடுத்த படைப்பு, ஜெகதீஷ் பாண்டியன் இயக்கி இருக்கும் 'எஸ்கேப்' குறும்படம். 13 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த 'எஸ்கேப்' குறும்படம் வெளிநாட்டில் படமாக்கப்பட்டிருப்பது மட்டுமில்லாமல், எந்த ஒரு வசனமுமின்றி உருவாக்கப்பட்டிருப்பது மேலும் சிறப்பு. டிமோத்தி பக்மேனின் இசை மற்றும் சேத் பாண்டியனின் ஒளிப்பதிவு இந்த 'எஸ்கேப்' படத்திற்கு பக்கபலமாய் அமைந்திருக்கிறது என்பதை வெகுவாக சொல்லலாம். சிலருடைய வாழ்க்கையின் மிக முக்கி யமான தருணங்களில், நம்முடைய பங்கும் பெரிதாக இருக்கக்கூடும். அவர்கள் யார் என்பது நமக்கு தெரியாவிட்டாலும் கூட... இதுதான் இந்த 'எஸ்கேப்' குறும்படத்தின் ஒரு வரி கதை.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | 8 | 1 | | |
| 1 | 3 | | | 4 | | | | |
| | | 8 | | | 7 | | 4 | |
| | | 2 | 4 | | | 5 | | |
| | | | | | | | | 9 |
| 4 | 7 | | | 1 | | | 3 | |
| | 1 | | 5 | | 6 | | 2 | |
| 8 | | | | | 1 | | | |
| 5 | 2 | | | | | 3 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 1 | 9 | 6 | 5 | 4 | 7 | 2 |
| 4 | 2 | 7 | 1 | 8 | 3 | 9 | 5 | 6 |
| 9 | 5 | 6 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 1 | 7 | 9 | 6 | 2 | 4 | 5 | 8 | 3 |
| 8 | 3 | 4 | 7 | 5 | 1 | 2 | 6 | 9 |
| 2 | 6 | 5 | 8 | 3 | 9 | 1 | 4 | 7 |
| 5 | 4 | 2 | 3 | 1 | 7 | 6 | 9 | 8 |
| 7 | 9 | 8 | 2 | 4 | 6 | 3 | 1 | 5 |
| 6 | 1 | 3 | 5 | 9 | 8 | 7 | 2 | 4 |


சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறு வனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### பொண்ணு ரொம்ப பொறுமைசாலி எண்டு சொல்லி ஏமாத்திட்டாங்க... அப்படி என்ன செஞ்சா...?



காலையில் பொறுமையா 10 மணிக்கு எழுந்திருக்கிறாயா.....

### நம்ம டீச்சருக்கு என்ன ஆச்சு? ஏன் கேக்கிறாய்...



திருக்குறளை கரும்பலகையில் எழுதியிட்டு அவங்களே இதை எழுதி னது யார் எண்டு கேக்கிறாங்க....

"பூச்சி மருந்து வாங்குறீர்களே எதுக்கு?"

"மனசே சரியில்லை, தற்கொலை பண்ணிக்கலாம் எண்டுதான்"

"உங்க மனைவிக்குத் தெரியுமா?"

"தயவு செய்து சொல்லாதீங்க அவளுக்குத் தெரிஞ்சா என்னைக் கொண்டிடுவா"

WhatsApp



சைலு @Lovly_girl__

புன்னகை செய்வதற்கு மட்டுமே உங்கள் இதழ்களை பயன்படுத்துங்கள். மற்றவர்கள் மனம் புண்படுவதற்கு பயன்படுத்தாதீர்கள்.



# ம வடக்கு ஈஞ்சடி அருள்மிகு
# சமேத ஸ்ரீ ஞானபைரவர் தேவஸ்தான
# (17) குண்ட சஹித புனராவர்த்தன
# றா கும்பாபிஷேக சிறப்பிதழ்

**02.02.2017 வியாழக்கிழமை**
**காலை 9.34 மணி தொடக்கம்**
**முற்பகல் 10.44 மணிவரை**

## ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



சைவ சாத்திரங்களுக்கு அமைவாக சிவன்கோயில் என்று விளங்கும் வண்ணம் சிவனுடைய அம்சமாக விளங்கும் பைரவப் பெருமானுக்கு அழகிய பெரும் ஆலயமாக அமைக்கப்பட்டிருப்பது பெருமை சேர்கின்றது. சைவ சித்தாந்தங்களை தெளிவுபடுத்தும் நோக்கின் 17 குண்டங்களுடன் கூடிய மகாயாகம் அமைக்கப்பெற்று பெரும் வேள்வி மூலம் பைரவப் பெருமானுடைய திருவருளை நெறிப்படுத்தும் இக்கும்பாபிஷேக நிகழ்வையும் பெரும் திருப்பணியை நிறைவேற்றிய ஈஞ்சடி சைவப்பெருமக்களது பெருமையை போற்றி வாழ்த்துவதில் பெருமை கொள்கிறேன்.

**ந.உருத்திரமூர்த்தி குருக்கள்**
**ஆலய பிரதம குரு**
**ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்**

## ஆசிச்செய்தி



க்ஷேத்திரத்தை பரிபாலிக்கின்ற. பொறுப்பினை தன்வசம் கொண்டிருப்பதால் க்ஷேத்திரபாலர் ஏன்னும் பெயரால் அழைக்கப்படுகின்ற ஈஞ்சடி ஞான பைரவப் பெருமானுக்கு புனருத்தாரணப் பணிகளை நிறைவு கண்டு இன்று மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காணுகின்ற ஈஞ்சடிவாழ் சைவப் பெருமக்கள் பெறுகின்ற புண்ணியப்பேறு அளப்பரியது. தர்மப்பணி சிறந்தது. ஆகமச் சட்டங்கள் கூறுவதைப் போல இகலோக வாழ்க்கை சிறப்பான தாகவும் பரலோக வாழ்க்கை நல்ல பேறு உள்ளதாகவும் அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதால் பல விதத்திலும் தர்மப்பணி செய்தவர்களுக்கு எப்போதும் அனைவரையும் பரிபாலிக்கின்ற கருணைத் தெய்வமாம் ஞானபைரவப் பெருமானின் திருவருள் என்றுமே நீடித்து அளப்பரியதாக கிடைக்கும். என்று ஆசிகள் வழங்குகிறேன்.

**இ. கமலநாதக்குருக்கள்**
**என்லில் நாகபூஷணி அம்மன் கோயில் லண்டன்**
**பிரதமகுரு**

## ஆசிச்செய்தி



எமது ஊர் சுதுமலைக் கிராமத்தில் சைவமும் தமிழும் சேர்ந்து பண்பாட்டு விழுமியமாகக் காணப்படும் சிறப்பையும் பல கோயில்களைத் தன்னகத்தே கொண்டு கோயில் நகரமாகவும் சிறப்பிக்கப்படும் மானிப்பாய் சுதுமலை ஈஞ்சடி என்னும் பதியில் கல்வி கேள்விகளையும் கற்ற சான்றோர்களையும் கொண்டமைந்ததுமான வடக்கு சுதுமலையில் சிவாலயம் போன்ற ஆலய நிர்மாணங்கள் ஆலய பிரகாரம் ஆலய வகிர்ப் பிரகாரம், விமானங்கள், சுந்தரஇராஜ கோபுரங்கள் அமைக்கப்பெற்று பெரும் ஆலயத்தின் நாயகமா விளங்கும் ஈஞ்சடி ஞானவைரவ பெருமானுக்கு (17) குண்டங்கள் அமைக்கப்பட்டு புனராவர்த்தன பிரதிட்டா மகா கும்பாபிஷேகத்தை குறித்து வெளிவரும் சிறப்பிதழ்க்கான ஆசிச் செய்தியை வளங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். சுமார் 35 வருடங்களுக்கு முன் பிரதான குருத்துவ பணியையும் பரிவார மூர்த்திகளின் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகத்தையும் செய்த தலைமை பொறுப்பையும் பைரவப் பெருமான் எனக்கு அருளியிருந்தார். தற்போது எமது ஊர்மக்களினது அயராத முயர்ச்சியினாலும் தர்ம கார்த்தா சபையினரது தர்மப்பணியினாலும் மேலும் பல திருப்பணிகள் நடைபெற்றுகுறிப்பாக இளம் இளைஞர்களின் துடிப்பான ஒத்துழைப்பாலும் இவ்வாலயம் முன்னிலைப் படுத்தப் பட்டுள்ளது. சிவாச்சாரிய பெருமக்கள். தர்மகர்த்தா சபையினர். ஊர் வாழ் மக்கள் எது ஊரைசேர்ந்த புலம்பேர் மக்கள் அனைவருக்கும் கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவின் பூரணபலன் கிடைக்கவும் ஜீவராசிகள் அனைத்திற்கும் ஆனந்தப் பெருவாழ்வு கிடைக்க வேண்டும் என பிராத்தித்து சங்களைத்தாய் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருளும் கிடைக்க வேண்டும் என ஆசிகள் கூறுகின்றேன்.

சுபமஸ்து

**சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள்**
**பிரதமகுரு -**
**சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி**
**அம்பாள் ஆலயம்**

## குடமுழுக்கு



யாழ் நகரப் பகுதியில் வடக்கே சகல வளங்களையும் பெற்று கற்றோரும். அறிஞர்களும். பண்டிதர்களும். வைத்திய கலாநிதிகளும் நிறைந்த ஊர் சுதுமலை. பல சிறப்புக்களையும் பெற்ற சுதுமலையின் காவலனான சுந்தர குமரனுக்கு இன்று

முழுக்கு

பல நூற்றாண்டு காலத்துக்கு முன்பே புதுமையின் நாயகன் சடியானுக்கு இலங்கையில் முதன் முதலாக இரதோற்சவம் ந்திய நடந்து கொண்டிருக்கும் சிறப்பை பெற்ற ஆலயம் மலைப் பகுதியில் காவல் கொண்டிருக்கும் ஈஞ்சடி ஞான ரவர் தேவஸ்தானம்.

தடமுழுக்கின் சிறப்பு

ஆலயங்களிலே நடக்கும் விழாக்களிலே மிகச் சிறப்பு பெற்றதும் னதமானதுமான விழா குடமுழுக்கு ஒரு அடியான் காலை மாலை பன்னிரண்டு ஆண்டு ஆலயம் சென்று தரிசித்த பலனை ஒரு குடமுழுக்கை முற்றாக தரிசித்தால் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆன்றோர் கூறுகின்றனர் அத்தகைய சிறப்பு மிக்க குடமுழுக்கு இன்று நடைபெறுவதையிட்டு சுதுமலை வாழ் மக்கள் மட்டுமல்ல எல்லா சைவ மக்களும் மனம் பூரிக்கின்றனர்.

மிக சிறப்பாக நடைபெறும் இந்த விழாவை எல்லோரும் தரிசிக்க வேண்டும் அவன் அருளைப் பெற வேண்டும் என்று வாழ்த்தி வணங்கி ஆசி கூறி அமைகின்றேன்.

"ஞான பைரவர் தாள் பணிய
ஆன கிரகங்கள் ஒன்பதும் அடிபணியுமே"

**ச. தம்பித்துரை J.P**

**தர்மகர்த்தா சபை**
**சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானபைரவர் தேவஸ்தானம்**

சுபா
வெதுப்பகம்
உரிமையாளர்
இ.பேரின்பநாயகம்
சுதுமலை.

அபிராமி
சவுண்ஸ்

உரிமையாளர்
மா. சந்திரகுமார்
கல்லூரி வீதி,
இளவாலை.

ஸ்ரீ ஐங்கரன்
வெதுப்பகம்

உரிமையாளர்,
மு.மகேந்திரன்
இணுவில் தெற்கு,
இணுவில்.

V.K.K.
அரிசி ஆலை

உரிமையாளர்
கு.கோபிகிஸ்னா
ஆலடி, உடுவில்.

ந்திரன்
வேக்ஸ் சொப்
உரிமையாளர்
மு.இந்திரசேனன்
உரும்பிராய் றோட்.
மருதனார் மடம்.

PSR BUILDERS
Civil Engineering
Construction Work
Proprietor
S.RAJINTHAN

அம்பாள்
ஸ்ரோஸ்

அம்பாள்
அரைக்கும் ஆலை
உரிமையாளர்
வே.பிறேமானந்தன்
அம்மன் கோயிலடி, சுதுமலை.

கலைமகள்
கலைக்கூடம்

உரிமையாளர்
ஸ்தபதி க. பரமானந்தம்
தென் இந்தியா
தொ.பே:. 076 729 9911



உ சிவமய

# யாழ். கோண்டா

# அருள்மிகு ஸ்ரீ நாகபூ

# மஹா கும்பா


கோண்டாவில் எனும் தெய்வீகப் பதியிலே 75
கிராமத்தவர்கள் பாம்பிற்கு பால்வைத்தும் பொங்கல்
வழிபாடு ஆற்றப்பட்டு வந்த வேளையில் 1954 ஆம்
புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. நாகப்பர் சின்னப்
சுதந்திரமான வழிபாட்டிற்காகவும் தற்போது ஆலய
வழங்கி மக்களின் நன் மதிப்பைப் பெற்றார். இவ்வாற
மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற பின் பதினைந்து
மணிமண்டபம், கோபுரம் போன்ற பல்வேறு புதி
கலைஞர்களின் மதிநுட்பமான வேலைகளுடன் அ
நடைபெறுகின்றது.



### கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச்செய்தி

எல்லாம் வல்ல அன்னை நாகபூஷணி அம்பிகையின் பேரருளால் இவ் ஆலயம் இன்று புதுப்பொலிவு பெற்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இவ் ஆலயம் இக் கிராமத்தவர்கள் மற்றும் புலம்பெயர் கிராமத்தவரின் ஆதரவில் சிறப்பாக நடைபெறுகின்றது. அடியவர்களுக்கு வேண்டிய வரத்தைக் கொடுக்கும் அம்பிகையாக அருள் பாலித்துக் கொண்டுள்ளார். அன்னை திருவருளை நினைத்து எல்லோரும் இன்புற்று இவ்வுலகில் இருக்க வேண்டும் என நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

**கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு**
**சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள்**
**(நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம்)**



### ஆசிச்செய்தி

கோண்டாவில் கிழக்குப் பிரதேசத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் நாகபூஷணி அம்பிகைக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. உலகத்திற்குத் தாயாக விளங்கும் அன்னை வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் பொருட்டு பல வடிவம் தாங்கி அருள் பாலிக்கிறன்றாள். இவற்றில் நாகபூஷணி என்பது நாகதோஷங்களால் ஏற்படும் துன்பங்களைக் களைவதாக எழுந்தருளியுள்ளாள். பல நற்பேற்றுச் சிறப்புடைய கோண்டாவில் பகுதியில் நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் தொழுது மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!


**இரண்டாவது குரு மஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



### ஆலய குருவின் ஆசிச்செய்தி

ஆலயங்கள் ஆன்மீகம் வளரும் புண்ணிய இடமாகும். வேண்டும் வரங்களை அருளி சிறந்த கல்வி மான்களாகவும் செல்வந்தர்களாகவும் கொடைவள்ளல்களாகவும் சிறப்புடன் மகிழ்ச்சியாக வாழ வைத்துக் கொண்டிருப்பவள் அன்னை நாகபூசணி அம்மன் என்பது யாவரும் அறிந்ததே. அடியவர்கள் அனைவரும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மஹா கும்பாபிஷேக பெருவிழாவை கண்குளிரக் கண்டு இறைவியின் திருவுருவத்தை இதயத்தில் நிலைநிறுத்தி அன்னையின் அருட்கடாட்சத்தை அனைவரும் பெற்று சிறப்புடன் வாழ்வீர்கள் என்பதில் ஐயம் இல்லை. மஹா கும்பாபிஷேகத்திற்கு வரும் முப்பத்து முக்கோடி தேவர்களின் அனுக்கிரகமும் அன்னையின் அருளும் கிடைக்கப்பெற்று அனைவரும் சிறப்புடன் வாழ இறைவியை வேண்டிக் கொள்கிறேன்.

**ஆலய குருவும் அர்ச்சகரும்**
**குமார புலேந்திரக் குருக்கள்**



### கோண்டாவில் நாகபூஷணி அம்பிகையே....!

கோண்டாவில் பதியில் புற்றெடுத்து அருளாசி புரியும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய சிறப்பு இதழுக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்வடைகின்றேன். 1918 ஆம் ஆண்டு இக் கிராம பெரியார் நாகப்பர் சின்னப்பு அவர்களால் அவரது மூத்த புதல்வர் செல்லப்பா அவர்களுக்கு வழங்கப்பட்ட காணியில் ஒரு மரத்தின் கீழ் இருந்த புற்றில் தோன்றிய நாகபாம்பிற்கு பொங்கல் பொங்கி வழிபாடு ஆற்றி வந்தனர். பின்னர் இக் காணி 1942 ஆம் ஆண்டு மார்கழி 19 ஆம் நாள் ஆலயத்திற்கென பொதுவாக வழங்கி பொதுமக்களின் சுதந்திரமான வழிபாட்டிற்கு வழி சமைத்து பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றார் செல்லப்பா. இவ்வாறான பழைமை வாய்ந்த ஆலயத்தினைப் புனரமைக்க வேண்டும் என எண்ணி மக்களின் பலத்த ஆதரவுடன் இன்று அம்பிகை பேரருளாக காட்சியளிக்கிறது மகிழ்விற்குரியது. எல்லோரது கடின முயற்சியினால் இன்று கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதனை நினைக்கும் போது மனம் ஆனந்தம் அடைகிறது. ஆலய கட்டுமான பணிகளுக்கு பண உதவி கோரியபோதும் தேவையான நேரத்தில் தேவையான உதவிகளை வழங்கிய அனைத்து அம்பிகை அடியவர்களுக்கும் அம்பிகையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்கின்றேன்.

**ப. மோகனராசா**
**தலைவர்- ஆலய பரிபாலன சபை.**



### அம்பாளின் ஆலயம் கண்கொள்ளாக் காட்சி...

இந்து மகா சமுத்திரத்தில் யாழ்ப்பாணப் பதியில் கோண்டாவில் கிழக்கில் கோயில் கொண்டு வேண்டுவோர் வேண்டிய அருள்புரியும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய கும்பாபிஷேக சிறப்பு இதழுக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்வடைகின்றேன். அம்பிகையின் இவ் ஆ
திருத்தப்படாது காணப்பட்ட வேளையில் ஆ
கவலையடைந்து திரும்பிய சந்தர்ப்பங்கள் உண்டு.
திருவருளால் ஆலய புனரமைப்புக்கென புதிய தி
அம்பாளின் ஆசியுடன் நானும் திருப்பணிச் சபையி
கிட்டியது. கிராமமக்கள் எல்லோரதும் பங்களி
அன்பர்களின் பங்களிப்புக்களின் மூலமும் பல வே
களின் கைவண்ணத்தில் அழகுற அமைக்கப்பட்டு
ஷேகம் இடம்பெறுகின்றது. அம்பாளின் கும்பாபிஷே
உள்ளங்களுக்கும் சகல சௌபாக்கியமும் கிடைக்கப்

**செயலாளர்- ஸ்ரீநா**



### அழகமைந்த ஆலயத்தில்

பல ஆண்டுகள் காலமாக புனரமை
பல்வேறு கலைஞர்களின் கைதேர்ந்த
மிளிரும் அம்பிகையாக காட்சியளிக்கிற
இவ்வாறு மதிநுட்பமாக காட்சியளிப்பது மகிழ்வளிக்கி
காலத்தின் கட்டாயத்தால் வெளிநாடுகளில் வசி
உள்ளூர் அன்பர்களினதும் அம்பிகை மீது கொ
மிகவும் அழகான ஆலயம் அமைப்பதற்கு வழங்
நாகபூஷணி அம்மன் ஆலயம் சிறப்பாக காட்சி அ
ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை இக் கும்பா
வழிகளிலும் உதவிய அனைவருக்கும் பேரருள் கி

**பொரு**



### வாழ்த்து

ஏறக்குறைய 75 வருடங்களுக்கு
அமைந்திருக்கும் இடத்தில் புற்றில் இ
வைத்து வழிபாடு ஆற்றி வந்ததாக பல

மஹாகும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோ

**பிள்ளையார் எலக்ரிக்கல்ஸ்**
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

**ஸ்ரீகணேசா**
அபிஷேகப் பொருள்கள் விற்பனை நிலையம்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

**கணபதி ஸ்ரோஸ்**
தலவாக்கலை.

**ஸ்ரீ வக்சன்**
பல்பொருள் வாணிபம்
பலாலிறோட்,
கோண்டாவில் சந்தி.

**Thabeshan**
Agro Store
Palaly Road,
kondavil Junction,
kondavil.

**வேல் முருகன்**
சைவ உணவகம்
பலாலி வீதி,
திருநெல்வேலி.
தொ.பே: 075 853 0212

**ஐங்கரன் களஞ்சியம்**
இல. 8, பலாலி வீதி,
திருநெல்வேலி.

# கைரேகை சோதிடம்



உள்ளங்கையில் காணப்படும் முக்கியமான ரேகைகளில் இதுவும் ஒன்றாகும். இந்த ரேகை புதன் மேட்டில் உற்பத்தியாகிச் சூரிய மேடுகளைத் தாண்டி குரு மேட்டில் முடியும். சிலருக்கு இந்த இருதய ரேகை சனி மேட்டில் முடியும்; (அ) கிரக மேடுகளுக்கு வெகுவாக கீழே தள்ளிப் புத்திரேகையை ஒட்டியும் முடியலாம். சிலர் கைகளில் புத்தி ரேகை, இருதய ரேகை ஆகிய இரண்டும் சேர்ந்து, உள்ளங்கையில் குறுக்கே ஒரே ரேகையாகவும் காணப்படலாம். இந்த இருதய ரேகை மூலம் நமது இருதயம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதையும், இருதயத் துடிப்பு குருதி ஓட்டம் போன்றவற்றையும் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் இருதயத்தில் ஏற்படக்கூடிய கோளாறுகளையும் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் இதயத்தின் ஆரோக்கியம் தொடர்பான பல்வேறு விடயங்களுக்கும் அப்பாற்பட்டு, உணர்ச்சியைத் தாங்கும் திறன், காதல் உணர்வுகள், மன அழுத்தம், மற்றும் இன்பதுன்ப நிலைப்பாடு ஆகியவற்றையும் இது குறிப்பதாக நம்பப்படுகிறது. இந்த ரேகை மூலம் அன்பு, பாசம், தயை, காருண்யம், காதல் போன்ற உணர்வுகள் எந்த அளவில் உள்ளன என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

**விதி ரேகை கை ரேகை பலன்**

விதி ரேகையானது, மணிக்கட்டிற்கு அருகில் உள்ளங்கையின் அடியிலிருந்து, நடுவிரலை நோக்கி உள்ளங்கையின் மையம் வழியாக மேலே ஓடும். உள்ளங்கையில் மணிக்கட்டு பகுதியில் இருந்து ஒரு ரேகை சனி மேட்டை நோக்கிச் செல்லும். இதுவே விதி ரேகை (அ) தொழில் ரேகை என்று அழைக்கப்படும். இந்த ரேகை நமது உழைப்புக்குத் தகுந்த பலனைக் கொடுக்கக் கூடியது எனலாம். சிலர் கைகளில் இந்த ரேகையே இருக்காது! இவர்கள் எவ்வளவு தான் கஷ்டப்பட்டுப் பாடுபட்டாலும், அதற்குத் தகுநத பலன் கிடைக்காது. விதி ரேகை தெளிவாக அமைந்து வெட்டுக்குறி, தீவு ஏதும் இல்லாது மணிக்கட்டிலிருந்து சனி மேடு வரை செல்வது நல்ல அமைப்பாகும். இவர்கள் வாழ்நாள் முழுவதும் தொழில் வியத்தில் பிரச்சினை ஏதும் இல்லாது நிம்மதியாக வாழ்வர். விதி ரேகையுடன் ஆயுள், புத்தி, இருதயரேகைகளும் நன்றாக அமைந்திருந்தால், இவர்களுக்கு நல்ல தேக ஆரோக்கியமும் , புத்தி சாலித்தனமும் , நல்ல தொழில் விருத்தியும் ஏற்பட இட முண்டு. இவர்களது எதிர்காலம் சந்தோசமாக அமையும். கல்வி மற்றும் தொழில் சார்ந்த வெற்றிகள் மற்றும் தடைகள் உட்பட, இது ஒருவரின் வாழ்க்கையோடு மிகவும் தொடர்புபட்டிருப்பதாக நம்பப்படுகிறது.


**தலை ரேகை கைரேகை ஜோதிட பலன்**

கைரேகை பார்ப்பவர்களால் கூறப்படும் அடுத்த ரேகை, தலை ரேகையாகும். இந்த ரேகை, சுட்டுவிரலின்கீழ் உள்ளங்கையின் ஓரத்தில் தொடங்கி, உள்ளங்கையின் வெளிப்புற விளிம்பிற்கு ஓடும். பொதுவாக, தொடக்கத்தில் தலை ரேகையானது ஆயுள் ரேகையுடன் இணையும். கல்வி, மற்றவர்களுடனான உறவுமுறை, புத்திசாலித்தனம் மற்றும் அறிவு தேடல் ஆகியவை உட்பட இது ஒருவரின் மனதையும், அது வேலை செய்யும் முறையையும் கணிப்பதாக பொதுவாக கைரேகை பார்ப்பவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**ஆயுள்ரேகை**

இறுதியாக, கைரேகை பார்ப்பவர்களால் ஒருவகையில் மிகவும் கருத்துவேறுபாடுகளைக் கொண்ட ரேகையான ஆயுள் ரேகை. இது கட்டைவிரலுக்கும் மேலே உள்ளங்கையின் விளிம்பில் இருந்து தொடங்கி, மணிக்கட்டை நோக்கி ஒரு வில்லைப் போல பயணிக்கிறது. இந்த ரேகை ஒருவரின் ஆயுளையும், உடல் ஆரோக்கியத்தையும் மற்றும் பொதுவான ஆரோக்கியத்தையும் குறிப்பதாக நம்பப்படுகிறது. ரேகைகளில் மிகவும் முக்கியமானது ஆயுள் ரேகையாகும். முதலில் இதன் தன்மையைக் கவனிக்க வேண்டும். இந்த ரேகை சிலரது கைகளில் தடிமனாகவும், ஆழமாகவும் பதிந்திருக்கும்; சிலரது கைகளில் லேசாகவும் மெல்லியதாகவும் பதிந்திருக்கும். தடிமனான ஆயுள் ரேகை மிருகபலத்தையும், மெல்லிய ஆயுள் ரேகை ஆத்ம பலத்தையும் குறிப்பிடும்.

(தொடரும்)




**நாளை தை-21**
வெள்ளிக்கிழமை -03.02.2017
திதி: ஸப்தமி மு.இ. 10.32
நட்சத்திரம்: அச்சுவினி மு.இ.7.50
சுபநேரம்:06.35-08.05 வரை
ராகுகாலம்:11.05-12.35 வரை

# எனில், 2009ஆம் ஆண்டில் ஐ.பி.எல். பெரிதானது ஏன்?

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை மிருகவதை என்று தெரிவித்து தடை செய்திருந்தது இந்திய மத்திய அரசு. தமிழ்நாட்டின் அலங்காநல்லூர் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பொங்கல் என்றாலே ஜல்லிக்கட்டு களைகட்டத் தொடங்கிவிடும். ஆனால் இந்தத் தடை காரணமாக கடந்த சில வருடங்களாக முறைப்படி ஜல்லிக்கட்டு நடத்தப்படவில்லை. தமது பாரம்பரியத்தில் கைவைத்த பீட்டாவுக்கும் (விலங்கு வதைக்கு எதிரான அமைப்பு), இந்திய மத்திய அரசுக்கு எதிராகவும் வெகுண்டெழுந்தனர் தமிழ்நாட்டு இளைஞர்கள். இளைஞர்களுக்கு ஆதரவாக மாணவர்களும் களத்தில் குதித்தனர்.

மெரீனாவில் 7 லட்சம் பேரும் ஒட்டுமொத்த தமிழ்நாட்டளவில் 25 லட்சம் பேரும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போரில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த மாபெரும் எழுச்சியால் தடை உடைந்தது. மூன்றே நாள்களில் சட்டங்களில் மாற்றம் செய்யப்பட்டு அனுமதி கிடைத்தது. ஜல்லிக்கட்டு அரங்கேறியது. உலமே இந்தப் போராட்டத்தையும் இளைஞர்களின் வலிமையையும் வெகுவாய்ப் பாராட்டியது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இலங்கை, மலேசியா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜேர்மன், பிரான்ஸ் என்று உலகின் பக பாகங்களிலும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கப்பட்டது. சிறப்பான போராட்டம். இளைஞர்களின் வலிமையை பறை சாற்றிய போராட்டம். விடுதலை வேட்கையில் பெண்களின் வகிபங்கை வெளிப்படுத்திய போராட்டம். அத்தனையும் நல்லதுக்கே.

ஆனால் ஒரு மாட்டுக்காவும் விளையாட்டுக்காகவும் வந்த கூட்டம், நாட்டுக்காகவும் தான் சார்ந்த இனத்துக்காகவும் வரவில்லை என்பதுதான் அன்றாடம் மனதை கசக்கிப்பிழியும் படியாக அமைந்தது, அமைந்து கொண்டிருக்கிறது, கொண்டிருக்கும். 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மௌனிக்கச் செய்யப்பட்டனர். முள்ளிவாய்க்காலில் மூச்சை இழந்தனர் பல்லாயிரக்கணக்கான எமது உறவுகள். வாழ்வின் ஆதாரத்தை பல குடும்பங்கள் தொலைத்தன. சிரிப்பின் முகவரியை நிரந்தரமாகத் தொலைத்துவிட்ட உதடுகள் லட்சோபலட்சம். காணமல் போனவர்களைக் கண்டெடுக்கும் படலம் இன்றுவரை தொடர்கதையாக நீள்கிறது. வைத்தியசாலைகளிலும் பள்ளிகளிலும் குண்டுகள் பொழியப்பட்டன. புலிகள் மட்டுமல்லாமல் மக்களும் உயிர்துறந்தனர். இத்தனை அவலமும் இங்கே அரங்கேற அங்கே அதாவது தமிழ்நாட்டில் இந்திய பிரீமியர் லீக் என்று சொல்லப்படும் ஐ.பி.எல். தொடர் நடைபெற்றது. சென்னை சுப்பர் கிங்ஸுக்கு இன்று மாட்டுக்காக அழுதவர்கள் அழுபவர்கள் கொடிபிடித்தனர். குண்டுகளைப் பார்த்து இங்கே நாம் கூக்குரலிட அங்கே பவுண்டரிகளுக்கும் சிக்சர்களுக்கும் கூச்சலிட்டனர்.

கேவலம் ஒரு மாட்டை விட எமது நாட்டின் தாகம் உணரப்படவில்லை. 25 லட்சம் தமிழர்கள் ஒன்றிணைந்து ஜல்லிக்கட்டுக்கு நடத்திய போராட்டத்தைப் போல் ஈழத்துக்கும் குரல் கொடுத்திருந்தால் தற்போதிருக்கும் நிலவரங்கள் எமக்குச் சாதகமாகியிருக்கவும் அதிக வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை. எனின் 2009 ஆம் ஆண்டில் எம்மைவிட, எமது இனத்தை விட, எமது கோரிக்கைகளை விட ஐ.பி.எல். தமிழ்நாட்டின் சகோதரர்களுக்கு பெரிதாய்ப்பட்டது ஏன். தனக்கு தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம் என்பது பழமொழி. ஜல்லிக்கட்டு விடயத்தில் அது சாலப் பொருத்தம்.

மறந்துவிட்டோம்... அத்தனையையும் மறந்து விட்டோம்... மறதி எமது தேசிய வியாதி. அதனால் தான் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, கொழும்பு என்று பரவலாக போராட்டங்களை நடத்தி ஜல்லிக்கட்டை அனுமதிக்க வேண்டும் என்று நாமும் வலியுறுத்தினோம். ஏராளமான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்ட நண்பர்கள் ஏந்தியிருந்தார்கள். அவற்றில் 'அலங்காநல்லூர் ஆடும்வரை ஈழ நல்லூர் அடங்காது' என்ற வாசகமும் ஒன்று.

இதுவும் கடந்து போகும்.



**VACANCY**

PURCHASING OFFICER REQUIRED WITH THE FOLLOWING REQUIREMENTS

1. EXPERIENCE-1 YEAR
2. AGE-20-35
3. MOTOR BIKE LICENCE-

SEND YOUR CV TO hr@thethinnai.com THE THINNAI

**021 203 0400**

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை (சபாபதி மணியம்) சிவறஞ்சன்



தோற்றம் 11.01.1981 மறைவு 26.01.2017

யாழ். வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் லண்டன், சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவறஞ்சன் சுவிஸில் அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை-அற்புதராணி தம்பதியரின் அன்பு மகனும் தயாநிதி (லண்டன்), சாந்தினி (இலங்கை), செல்வறஞ்சன் (நோர்வே), சிறீமோகனறஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுபேந்திரன் (லண்டன்), பிரதாபன் (இலங்கை), சிந்துஜா (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மிதுஷ் (லண்டன்), றிதுஷ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அச்சரன் (நோர்வே), அக்ஷனா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை, நிர்மலாதேவி, தங்கராசா சாரதாதேவி, சிவானந்தம் சுபாசினி, கிருஷ்ணமூர்த்தி கனகாம்பிகை, சூரியகுமார் அழகராணி ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, தங்கமுத்து, விக்கினேஸ்வரன் சுமதி, இராமச்சந்திரன் ஜெயதேவி, உதயச்சந்திரன் விமலாதேவி, உதயகுலம் மல்லிகா ஆகியோரின் அன்பு மருமகனும் வேலுப்பிள்ளை கன்னி, சின்னப்பு, சின்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வரணி இயற்றாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வரணி இயற்றாலை ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**றஞ்சன் ஒப்பந்தகாரர்**

**வரணி இயற்றாலை, வரணி**
**077 285 5276**

### Dr. சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்



சாவகச்சேரி, சங்கத்தானை பெரிய அரசடியைப் பிறப்பிட மாகவும், வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சங்கரப் பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் திருமதி மீனாட்சிபிள்ளை (Retired teacher - chavachcheri Hindu college). திருமதி [illegible] திருஞானசம்பந்தர் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் [illegible] (Australia). நடராஜா ஆகியோரின் அருமை மைத்துனரும் திருமதி சத்தியபாமா (Canada). திருமதி ஜீவஜோதி (Australia). திருமதி சந்திரகாந்தி (Australia). சுமதி (Canada). சிவமோகன் (Canada). Dr.விஜிதா. திருமதி கிருபாஜினி (Australia). கிரிதரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் தில்லைநாதன் (Canada). சிதம்பரநாதன் (Australia). சபாநாயகம் (Australia). இராஜகுலசிங்கம் (Canada). சரஸ்வதி (Canada). சிறீகுமரன். (Australia) பிரதா ஆகியோரை பெறாமக்களாகக் கொண்ட Dr. சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன் 01.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர் 021 321 0104,**
**கிரிதரன் - 077 7708 616**

Galaxy Star
வெற்றி வாரம் 132 திகதி 01.02.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
05 10,27,56,60
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000 /-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2840 திகதி 01.02.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
10 16 37 45 T 38
போனஸ் இல. சனிக்கிழமை ஜக்பொட்
ரூ. 45,872,407/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைப்பதன். அல்லது துரித அழைப்பு 1919

## கண்ணீர் அஞ்சலி



எமது மண்ணில் அசாதாரண போர்க்காலங்களில்
மக்களை நோயில் இருந்து தனது அர்ப்பணிப்பான
வைத்திய சேவையினால் காப்பாற்றி எமது பிரதேச
மக்களினால் கடவுள் எனப் போற்றப்பட்ட

**வைத்தியகலாநிதி சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்**

**(கடவுள்) ( ஓய்வு நிலை வைத்தியப் பொறுப்பதிகாரி முழுங்காவில், பளை பிரதேச வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை)**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம்
அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினரதும் பிரதேச
மக்களினதும் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரது
ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி அபிவிருத்திக்கழகம் - சாவகச்சேரி (T.D.A).**

## மரண அறிவித்தல்

### திருமதி பகவதிதேவி பொன்னம்பலம்



தோற்றம் 29.07.1937 மறைவு 31.01.2017

மலேசியாவை பிறப்பிடமாகவும் "கலாபவனம்" துலாக்கட்டு வீதி,வதிரி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதிதேவி பொன்னம்பலம் 31.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற நாராயண மூர்த்தி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சரஸ்வதி காலஞ்சென்ற முத்துலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சுமங்கலாதேவி (லண்டன்), பரிமளாதேவி (புத்தளம்),சறோஜாதேவி(ஆசிரியை, யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை),உமாதேவி(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வம் (லண்டன்),திருச்செல்வம் (வைத்தியர் -புத்தளம்), யோகேந்திரன் (நூலகர்-யா/உடுப்பிட்டி அ.வி.கல்லூரி),ஸ்ரீகந்தசீலன்(டுபாய்) ஆகியோரின் அன்பு மாமியும் வித்தியாகௌரி (லண்டன்),கபில்விக்னேஸ் (லண்டன்). மயூர் சங்கர்(லண்டன்),அரவிந்(Software Engineer-Colombo) பிரவீனா துஸ்யந்தி(மாணவி-மருத்துவபீடம்-யாழ் பல்கலைக்கழகம்). ஜயஜயினி ஜயஜனனி (மாணவி-யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை). ஸ்கந்தரூபன் (மாணவன்-பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2017) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"கலாபவனம்"**
**துலாக்கட்டு வீதி,**
**வதிரி, கரவெட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்**



## வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டனர். அவர்கள் கைது செய்யப்படும் போது மீட்கப்பட்டதாகக் கூறப்பட்ட வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் நேற்று நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் கடந்த வாரம் நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அரியாலை மற்றும் கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த 5 இளைஞர்கள் சில நாள்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

17 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்ட அவர்களிடமிருந்து 6 வாள்கள், 2 கைக் கோடரிகள், சிறு கத்தி, முகமூடி, அலைபேசி என்பன மீட்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

மீட்கப்பட்ட வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்கள் நேற்றுச் செய்தியாளர்களுக்கு காண்பிக்கப்பட்டன. அவை பின்னர் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் 5 பேரும் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். விசாரணை நடத்திய பதில் நீதிவான் 5 பேரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதுதவிர, நல்லூர் அரசடியில் கடந்த திங்கட்கிழமை வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக பெற்றோல் குண்டு வீசி தீப் பற்ற வைத்தமை மற்றும் இருவர் மீது வாளால் வெட்டிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவர் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,5,101,106)

## இளைஞனை...

மிருந்து சுதாகரித்து மோட்டார் சைக் கிளைக் கைவிட்டு ஓடி உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கஸ்தூரியார் சாலையில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தகம் ஒன்றுக்கு அருகில் இடம்பெற்றது.

இளைஞன் மோட்டார் சைக்கிளில் கஸ்தூரியார் சாலை மாதா கோவிலடியில் பயணித்துக் கொண்டிருந்தார். எதிரே ஓர் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் குதித்து வாளால் இளைஞனை வெட்ட முயன்றுள்ளனர்.

தனது உயிரைப் பாதுகாக்கும் நோக்கில் அந்த இளைஞன் மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு குறுக்கு ஒழுங்கையால் தப்பியோடியுள்ளார். இவ்வாறு ஓடிய இளையனை வெட்ட முயன்றவர்கள் துரத்திச் சென்ற போதும் அவரைப் பிடிக்க முடியவில்லை. இளைஞன் தப்பிச் சென்றதால், அவரின் மோட்டார் சைக்கிளை வாளால் வெட்டிச் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து கும்பல் தப்பிச் சென்றது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-101)

**தேவை**

உயர் தொழில் புரியும் குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு - 077 525 4227

**பெயர் மாற்றம்**

துர்க்காபுரம் தெல்லிப்பழையை சேர்ந்த
**சுந்தரலிங்கம் சுவதாஸ்**
ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை
**சுந்தரலிங்கம் சுபதாஸ்**
என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல
ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம்
இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
**சுந்தரலிங்கம் சுபதாஸ்**

## நிலைமாறு கால...

'அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்' தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிலைமாறு காலப் பொறிமுறைகளில் குற்றவியல் வழக்கு விசாரணைகளே முதன்மையான அவதானிப்பிற்குரிய விடயமாக அமைந் திருக்கின்றன. அநீதிகள் தொடர்பில் நீதியைக் கோரி நிற்பதாக மக்கள் கூறும்போது அவர்கள் அர்த்தப்படுத்த விளைவது குற்றவியல் வழக்கு விசாரணைகளூடாகக் குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவதைக் காண்பதேயாகும். இது மாத்திரமே தனித்துவமான நடைமுறை கிடையாது. அனைத்து நீதிகளையும் இந்த நடைமுறை பெற்றுத்தரும் என்ற சுமை இன்றிய நிலையில் செயற்படும்போதே இது சிறந்த பெறுபேற்றைத் தரும். தனிப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளை எதிர்கொள்வது மட்டுமன்றி மக்களை அறிவூட்டுவதற்கான சக்தியையும் குற்றவியல் வழக்கு விசாரணைகள் கொண்டுள்ளன. போரின்போது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நடத்தப்படுகின்ற குற்றவியல் வழக்கு விசாரணைகள் நம்பிக் கையை வென்றெடுக்கக் கூடிய வகையில் நடத்தப்படவேண்டியது அவசியம். இல்லாவிடின் அதிலிருந்து மோசமான விளைவே கிடைக்கும் – என்றார். (த-5)

## கேப்பாபி...

மக்களுக்குத் தெளி வாகச் சொல்லி உள் ளோம். மாவட்டத்தின் உயர் அதிகாரி என்ற அடிப்படையில் நான் அவர்களுடன் கதைத்தேன். எங்களுக்குச் சிறு கால அவகாசம் தேவை. அவர்கள் அதனைத் தராது தொடர்ந்து போராட்டம் நடத்துவதன் ஊடாக எதையும் சாதிக்க முடியாது.

இவ்வாறு முல்லைத் தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பிலக்குடியிருப்பு மக்கள் இரவு பகலாக இராணுவ முகாம் முன்பாக, தமது காணிகளை விடுவிக்கக் கோரிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். மக்களின் காணிகளை மாவட்டச் செயலர் நேரடியாகச் சென்று நேற்றுப் பார்வையிட்டிருந்தார்.

'இன்று (நேற்று) நாங்கள் பிலக்குடியிருப்புக்குச் சென்று பார்வையிட்டோம். இரா ணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைப் பார்வையிட்டோம். முகாமின் எல்லைப் பகுதிகளில் உள்ள காணிகள் எமக்குத் தேவையாக உள்ளன. அந்தக் காணிகள் விடக் கூடிய நிலையில் உள்ளதா இல்லையா என்று கலந்துரையாடலும் நடைபெற்றது. பொது மக்களுக்குரிய காணிகளை அடையாளப்படுத்த வேண்டியுள்ளது.

அதனை விடுத்து எழுந்தமானமாகக் கதைக்க முடியாது தானே. பிலக்குடியிருப்புப் பகுதியைச் சென்று பார்த்து கலந் துரையாடலிலும் ஈடுபட்டோம். இனி வரைபடம் ஊடாக எந்தக் காணி அவர்களுடைய திட்டத்தில் உள்ளடங்குகின்றது என்பதை இனங்கண்ட பின்னர் தான் காணிகள் விடுவிக்கப்படுவது தொடர்பாக முடிவெடுக்கப்படும்' என்றார் மாவட்டச் செயலர். (த-5-7)

---

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

ANDRA திருமண அழைப்பிதழ் காட்சியறையில் மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு: 021 492 7172**

---

## 29 ஆம் ஆண்டு நினைவேந்தல்

உதிப்பு
27 . 01 . 1912



உதிர்வு
23 . 01 . 1988

அமரர்
**சரவணை நிற்சிங்கர் சிதம்பரப்பிள்ளை**
கண்கண்ட தெய்வம்

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

மனைவி ,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
பூட்டப் பிள்ளைகள்.

---

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சூசைப்பிள்ளை வேதநாயகம்**

ஈரைந்து ஆண்டோடியும்-எம்
மனமாறாத் துயரோடு.உங்கள்
நினைவோடு விழியோர நீரோடு வழி
கடந்து செல்கின்றோம்.
காவியமாய் வாழ்ந்த உங்களை
காலமெல்லாம் நினைத்திருப்போம்.

என்றும் உங்கள் பசுமையான நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

## கண்ணீர்க் காணிக்கை



எமது ஆருயிர் நண்பன்
பஞ்சலிங்கம் மணிகாந்தின்
அன்புத் தாயார்
**திருமதி கோமதி பஞ்சலிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மொறட்டுவைப் பல்கலைக்கழக
இயந்திரவியல் பீட மாணவர்கள் - 2016**

---

## மரண அறிவித்தல்

### கதிரவேலு அருளம்பலம்

**(இளைப்பாறிய காசாளர் - இலங்கை வங்கி)**



சாவகச்சேரி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கைதடி , நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு அருளம்பலம் 31.01.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லாச்சி தம்பதிகளின் அன்புப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும் தர்மகுலசிங்கம், அற்புதமலர், பரராசசிங்கம் காலஞ்சென்ற சிவசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரா, ஜெயானந்தன், செல்வராணி, கங்கேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் தர்சினி - முருகானந்தன் , செந்தூரன் - கஸ்தூரி, சுரேகா - யோகராசா, காலஞ்சென்ற சுயித்தா மற்றும் யேணுகா - இளங்கோ, ராகவன், துவராகன் - புவனேஸ்வரி, கிருத்திகா, விதுர்ஷன், ஆர்த்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் மிதுஷா,கிருஷிகா, அபிசன், அபிசாந்த், அஸ்னவி, அபினன், ஆதர்சன், ஆருத்தன், டீக்ஷிதா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.**

தகவல்:
**பரராசசிங்கம் (மகன்)
077 620 2725**

---

## கண்ணீர் அஞ்சலி




28.01.2017 அன்று சிவபதமடைந்த
**எவரெஸ்ட் மருந்தக வைத்திய ஆலோசகர்
வைத்திய கலாநிதி இரா.கனகலிங்கம்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**எவரெஸ்ட் மருந்தகம்
உசன், மிருசுவில்.**

---

## மரண அறிவித்தல்

### முத்தையா சோமசுந்தரம்



யாழ். ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ், Versailles ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முத்தையா சோமசுந்தரம் 27.01.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-அன்னமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகதாம்பிகையின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கணேசரத்தினம், சிவகுமார், இராசரத்தினம் மற்றும் அருந்தவமலர் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நீலாம்பிகை, நாகராசா (ஜேர்மனி), சிவராசா (பிரான்ஸ்) காலஞ்சென்ற செல்வராசா, நவேந்திரராசா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறீஸ்கந்தராசா (சிறி), ஜெயரூபி (ரூபி), சுகிர்தரன் (சுகிர்), ஜெயக்குமாரி (குமாரி), கிரிதரன் (கிரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலராணி, லிங்கேஸ்வரன் (ராசன்), சுனந்தினி, மனோரஞ்சிதராஜா (அப்பு), மைதிலி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீபா, மதுலா, மிதுலா, அஜய், திரிஸ், கனிஸ்கா, விர்ஜின், வித்தியா, யூலியன், அபிநயா, கீர்த்திகா, சந்திகா, கஜிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 02.02.2017 மு.ப 9.00 மணிதொடக்கம் ந.ப 12.00 மணிவரை Hospital antre mignot 177 Ruede Versailles 78150 Le chesnay France என்னும் இடத்தில் பி.ப 3 மணிக்கு பூதவுடல் Crematorium dypere lachaise, 71, Ruedes Rondeaux 75020 Paries France எனும் இடத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**தொ.இல - 0033 6501 54067**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

### பொன்னு பொன்னுத்துரை



தோற்றம் 1933.03.18
மறைவு 01.02.2017

கீரிமலை வீதி, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு பொன்னுத்துரை நேற்று (01.02.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - சின்னாச்சி தம்பதியரின் புதல்வியும் காலஞ் சென்ற சின்னையா - நாச்சன் தம்பதியரின் அன்புமருகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் நவரட்ணம், சத்தியவதி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், வேலாயுதம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிவசுப்பிரமணியம், தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் ருட்சிகா, பானுஜன், அபிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2017) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் 392/9, நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**392/9, நாவலர் வீதி,
பழைய உதயன் லேன்,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
**நவரட்ணம் (மகன்)**

# தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## பிரிவினையை...

கோரிக்கை விடுத்தார். மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையின் புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நாங்கள் நாட்டில் பேச்சு மூலம் சமர சமாகப் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். இதனூடாக நிரந்தரமான – நீதியான தீர்வை அடையலாம் என்றும் நாட்டில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் சம உரிமை அடிப்படையிலான சமாதானத்தை உருவாக்கலாம் என்றும் எண்ணியுள்ளோம்.

தற்போதைய பேச்சுக்கள் தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசினார். புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் ஊடாக நாங்கள் பிரிவினையை ஏற்படுத்த முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் உண்மையைக் கதைக்கவேண்டும். இதுவரை நடைபெற்ற பேச்சில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. ஒருமித்த நாட்டுக்குள் – பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வு உருவாக்கப்படவேண்டும். இதுதான் அந்த உடன்பாடு. நாட்டில் வாழ்கின்ற சிங்கள மக்கள், சிறுபான்மை மக்கள், இஸ்லாமிய மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாக அமைய வேண்டும்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை எனக்கு நன்றாகத் தெரியும். நீங்களும் எங்களுடைய இந்தப் பணியில் இணைய வேண்டும். உங்களுடைய ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்த்து நிற்கின்றோம். உங்கள் ஒத்துழைப்பை நாங்கள் நாடுகின்றோம். மக்கள் மத்தியில் துவேசத்தைக் கிளப்பாமல், பிரிவினையை ஏற்படுத்தாமல், மக்களை ஒற்றுமைப்படுத்தி நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு – எழுபது வருட காலமாகத் தீர்க்கப்படமால் இருக்கின்ற பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கு நீங்கள் உதவவேண்டும். இது உங்கள் கடமை. இதனைத் தவறவிடவேண்டாம் எனக்கேட்டுக் கொள்கின்றேன் – என்றார். (த-5)

## புதிய...

சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் இந்த முயற்சிக்குக் கடந்த சில மாதங்களாக முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வரும் வேளையில், புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மட்டக்களப்பில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

மாகாண சபை முறைமையை நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படும்போது பொய்ப் புரளிகள் கிளப்பப்பட்டமை போன்று தற்போதும் புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கையின் போதும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னை அரச தலைவர் ஆக்குவதற்கு மட்டக்களப்பு மக்கள் விருப்பத்துடன் செயற்பட்டிருந்தார்கள். நாட்டில் நீண்ட காலமாக நிலவி வந்த போரின் காரணத்தால் வடக்கு – கிழக்கு மக்கள்தான் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள். போரின் பின்னர் நாட்டு மக்களுக்குச் சிறந்த சேவை செய்வேன் என்றுதான் என்னை அரச தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

நாட்டில் அனைத்து மக்களும் சமாதானத்துடன் வாழவேண்டும். சமாதானத்தைக் கட்டியெழுப்பவேண்டும். மீண்டும் நாட்டில் போர் ஏற்படாத வகையில் அரசு செயற்படவேண்டும். இதற்காகத்தான் எமது அரசு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக நாங்கள் புதியதொரு அரசமைப்பை ஏற்படுத்திக் கொள்ளப் போகின்றோம். சிலர் இதனைத் தவறாகவும், பொய்யாகவும் பேசுகின்றார்கள்.

நாங்கள் நாட்டை உடைக்கப்போகின்றோம், பிரிக்கப்போகின்றோம், நிர்மூலமாக்கப் போகின்றோம், வெளிநாட்டுச் சக்திகளுக்கு அடிபணிந்து விட்டோம் என்று சிலர் கூறுகின்றார்கள். இவைகள் அனைத்தையும் நாங்கள் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம். ஒரே நாட்டுக்குள் பிளவுபடாமல் சமாதானத்துடன் வாழவேண்டும். அதற்காகத்தான் அரசமைப்பை உருவாக்கிக் கொண்டு போகின்றோம் என்று எதிர்க் கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் கூடத் தெரிவித்துள்ளார். அந்த உத்தமமான நோக்கத்தை அடைவதற்காக அரசு என்ற வகையில் பணியாற்றி வருகின்றோம். எதிர்வரும் சில மாதங்களுக்குள் அடிப்படைப் பணிகளை முடிக்க இருக்கின்றோம்.

மாகாண சபைகள் உருவான காலகட்டத்தில் நாட்டில் என்ன நடந்தது என்று மக்களுக்குத் தற்போதும் ஞாபகம் இருக்கும். மாகாண சபைகளை உருவாக்கும் சட்டத்தைக் கொண்டு வரும்போது ஒரு மாகாண சபையிலிருந்து இன்னுமொரு மாகாண சபைக்குப் போவதற்கு நுழைவிசைவு (விசா) எடுக்க வேண்டும் என்று பலர் சொன்னார்கள். மாகாணசபைச் சட்டத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் வெளிவந்த பத்திரிகைகளை தற்போது எடுத்துப் பாருங்கள். இன்று எவ்வாறு சத்தம் போடுகின்றார்களோ அவ்வாறுதான் அன்றும் கூக்குரலிட்டார்கள். இந்த நாட்டுக்குள் வாழ்கின்ற அனைவரையும் ஒன்றுபடுத்துவதற்காகத்தான் நாங்கள் பணியாற்றி வருகின்றோம்.

அரசுக்கு எதிராகப் பல்வேறு விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. இந்த நாடு சுதந்திரமான நாடு என்ற வகையில் அரசைப் பார்த்து யாரும் விமர்சிக்க முடியும். கூடுதலான விமர்சனங்கள்தான் அதிகளவு மக்களுக்குப் பணியாற்றும் எமது சக்தியாகும். அரசை வீழ்த்திவிடுவோம் என்று சிலர் சொல்கின்றார்கள். இதுபற்றி சிலர் கனவுகள் காணுகின்றார்கள். அவர்களது கனவுகள் ஒருபோதும் நனவாகமாட்டாது. அரசு என்ற வகையில் பெரிய சக்தியோடு நாம் முன்னே செல்வோம். எங்களை முறியடிக்க யாராலும் முடியாது – என்றார். (த-5)

## குற்றத் தடுப்புச்...

மட்டுமே சந்தேக நபரின் விரலடையாளங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் ஏற்படும் பாரதூரமான தன்மையினாலேயே மேற்படி சட்டத்தைத் திருத்தம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரின் அடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்கும், அவரை இலகுவாகக் கண்காணிக்கக் கூடிய வகையில் விரலடையாளத்தைப் பெற்றுக்கொள்வதற்குமான குற்றத் தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குற்றங்களின் பட்டியலைத் திருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையான குற்றமொன்றுடன் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு இடைநிறுத்தப்பட்ட தண்டனை வலுவிலிருக்கும் காலம் முடியும் வரை அந்த நபரை பொலிஸ் கண்காணிப்பின் கீழ் வைக்க வேண்டுமென நீதிமன்றத்தால் விதிக்கப்பட முடியுமான வகையிலும் குற்றத்தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி திருத்தம் தொடர்பான சட்டவரைவை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அனுமதிக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (த-5)

## துறைமுக...

தினர் மீது பொலிஸார் தண்ணீர்ப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

துறைமுகங்களைத் தனியார் மயப்படுத்தும் அரசின் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து புறக்கோட்டையிலிருந்து காலி முகத்திடல் வழியாக நேற்றுப் பேரணியாகச் சென்ற துறைமுக ஊழியர்கள் அரச தலைவர் செயலகத்துக்குச் செல்ல முற்பட்டபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டப் பேரணி காரணமாகக் காலி முகத்திடல் செல்லும் லோட்டஸ் சுற்றுவட்டம் மூடப்பட்டதால் மிகப் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. பொலிஸாரின் தாக்குதலையடுத்து ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களின் பெரும்பாலான பகுதிகளை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கும் அரசின் செயற்பாடுகளுக்குத் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுவருகின்றநிலையில், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் அண்மையில் சீனாவின் பங்களிப்பில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. இதன் போதும் பெரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## கருணா...

பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும் மன்றுக்கு அவர்கள் சுட்டிக் காட்டினர்.

அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கருணா அம்மானுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்புநீதி வான் மன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேற்படி விடயங்களை இதன்போதே நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

கருணா அம்மானின் பாதுகாப்புத் தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுவதால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாகி அவர் கையெழுத்திடவேண்டும் என்ற பிணை நிபந்தனையைத் தளர்த்துமாறு, பிரதிவாதி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

விடயங்களை ஆராய்ந்த நீதிவான் கோரிக்கையை ஏற்று மாதம் ஒருமுறை ஞாயிற்றுக்கிழமை கையெழுத்திட அனுமதியளித்துள்ளார்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் பிரதி அமைச்சராக இருந்த கருணா அம்மானுக்கு வழங்கப்பட்ட பெறுமதி மிக்க வாகனங்களை, பதவியில் இருந்து விலகிய பின்னரும் மீள ஒப்படைக்காதிருந்ததாக இவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டமை நினைவில் கொள்ளத்தக்கது. (த-5)

## சுமந்திரனே...

குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளை விடுதலை செய்யக்கோரி அன்று குரல் எழுப்பியவர்கள் இன்று எம்மைக் குறை கூறுகின்றனர். விடுதலைப் புலிகளை விடுதலை செய் தமை தவறில்லை. அரசு தேசிய பாதுகாப்பைப் பலவீனமாக கையாளுகின்றமையே தவறாகும் – என்றார். (த-5)

## சர்ச்சை...

அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட் டார்.

கொழும்பு முதன்மை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட இவர், 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் விடு விக்கப்பட்டார். (த-5)

## தகவல்...

முடியும். இது குறித்து அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்ததாவது:

தகவல் அறியும் சட்டம் கடந்த ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்டு 6 மாத காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதனடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி 6 மாத காலம் பூர்த்தியடைகின்றது.

நாம் நாளை சட்டவரைவை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். நடைமுறையில் உள்ள 51 அமைச்சுகளில் 50 அமைச்சுக்களுக்கான தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மிகுதி ஒரு தகவல் அதிகாரியும் விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

மாவட்ட மட்டத்தில் மாவட்டச் செயலர்கள் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்துள்ளனர். மாவட்ட ரீதியிலும் தகவல் அதிகாரிகளுக்கான மேலதிக பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். நாளை 3ஆம் திகதி முதல் சட்டம் நடைமுறைக்கு வருகின்றது – என்றார். (த-5)

## சைட்டத்துக்கு...

சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இந்த நிறுவனத்துக்கு எதிரான எமது போராட்டத்தை மேலும் விரிவுபடுத்துவோம்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த, நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க,

சைட்டம் தொடர்பான வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டவர்களும் வழக்கைத் தொடர்ந்த மாணவியும் ஒரே நிலைப்பாட்டில் இருந்தமையால் தீர்ப்பு தொடர்பாக எமக்கு ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லை.

நாட்டையும் பிள்ளைகளையும் ஏமாற்றும் நிறுவனத்திற்குச் சட்ட அங்கீகாரத்தை வழங்கியமையை ஏற்றுக்கொள்ளமுடியாது. வழக்குத் தீர்ப்பை வைத்து அந்த நிறுவனத்தில் கற்கும் மாணவர்கள் உடனடியாக மருத்துவச் சபையில் பதிவு செய்து கொள்ளவும் முடியாது. மருத்துவச் சபை உயர்நீதிமன்றத்திற்குச் சென்றால் அந்த வழக்கு முடியும் வரை அந்தப் பதிவை மேற்கொள்ள முடியாது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி, மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களின் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் சைட்டம் நிறுவனத்திலேயே கற்கிறார்கள். இது தொடர்பான வழக்குத் தீர்ப்பை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நிறுவனத்துக்குச் சட்ட அங்கீகாரம் வழங்குவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் உரிமை கிடையாது. நாமும் அந்த நிறுவனத்திற்குச் சட்ட அங்கீகாரத்தை வழங்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். எமது போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம். இது தொடர்பாக நாம் சகல தரப்பினருடனும் கலந்துரையட எதிர்பார்த்துள்ளோம். சில விடயங்கள் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கிடையே வேறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும் இந்த நிறு வனத்துக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்படக் கூடாது என்ற ஒருமித்த கருத்தே தற்போது நிலவுகின்றது. மருத்துவமனைகளில் உள்ள தாதியர்களே உயர்தரத்தில் ஏ மற்றும் பீ தர சித்திகளைப் பெற்றவர்களாவர். இவர்கள் மூன்று எஸ் சித்திகளை பெற்று வைத்தியராக வருபவர்களின் ஆலோசனைகளைப் பெறத் தயாராக இல்லை. பணம் உள்ள குழுக்களும் அரசியல்வாதிகள் சிலரும் சேர்ந்துகொண்டு நாட்டின் கல்வித்துறையையே தமது காலடியில் மண்டியிடச் செய்ய முயற்சிப்பதற்கு நாம் இடமளிக்கக் கூடாது – என்றார். (த-5)

## குடாநாட்டுக்...


யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண சபை சிறப்பு அமர்வு நடத்தவேண்டும் என்று, வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும் மாகாண சபை அமர்வுகளில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையில் மல்லாகம் நீதிமன்று குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் நேற்று முன்தினம் கட்டளை பிறப்பித்திருந்தது.

எனவே குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் அவசரமாகச் சிறப்பு அமர்வு நடத்தவேண்டும் என்று, எம்.கே.சிவாஜிலிங்கமும், சி.தவராசாவும் இணைந்து எழுத்து மூலம் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் நேற்று முன்தினம் மாலை கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவைத் தலைவர் கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளார். மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 9 ஆம் திக்தி நடைபெறும் போது, சிறப்பு அமர்வுக்குரிய திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (த-5-101)

எம் ஒவ்வொரு வரதும் உடலில் இருக்கும் குருதி நாளங்களின் நீளம் 99,000 கிலோ மீற்றர். இதன் மூலம் பூமியை 2.5 முறை வட்டமிடலாம்.





தலையைத் திருப்பாமல் பின்னால் பார்க்கக் கூடி யவை, முயல் மற்றும் கிளி மட்டுமே.



பல் துலக்கும் பற்தூரிகை (பிரஷ்) கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டு 1498

# மரம் வளர்ப்போம்!

தாத்தா வைத்த தென்னையுமே,
தலையால் இளநீர் தருகிறது!

பாட்டி வைத்த கொய்யாவும்,
பழங்கள் நிறையக் கொடுக்கிறது!

அப்பா வைத்த மாஞ்செடியும்,
அல்வா போல பழம் தருது!

அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது!

அண்ணன் வைத்த மாதுளையும்,
கிண்ணம் போல கனி தருமே!

சின்னஞ்சிறுவன் நானுமொரு
செடியை நட்டு வளர்ப்பேனே....








# உதவியின் பயன்!

இயற்கை வளங்கள் நிறைந்த ஓர் ஊரின் அழகைக் கண்டு அங்கே ஒரு தேவதை வந்தாள். அங்கு வசிக்கும் மக்கள், பழங்களை உண்டு வெட்ட வெளியில் இருந்தனர். அவர்களுக்கு வசிப்பதற்கு வீடுகளையும், பயிர் செய்யும் முறைகளையும் தேவதை கற்றுக்கொடுத்து, குழந்தைகளுடன் விளையாடியும் மகிழ்வித்தாள்.

நாள்கள் சென்றன. பயிர் செய்து நிறைய உணவுப் பொருள்களை விளைவித்தவர்கள் அதை வீடுகளில் பதுக்கினார்கள். பயிர் சரியாக விளையாதவர்கள் பசியாறக் கேட்டபோது அதற்கு மாற்றாக அவர்களின் வீட்டைப் பேரம் பேசி வாங்கினார்கள்.

பதுக்கிய பொருள்களைப் பாதுகாக்கும் கூட்டம் ஒரு பக்கம், வசிக்க வீடும், உண்ண உணவும் இல்லாமல் வீதிகளில் திரிபவர்கள் இன்னொரு பக்கம் என அந்த ஊரே மாறி விட்டது.

தேவதை மிகவும் வருந்தினாள். "நான் தவறு செய்துவிட்டேன். குழந்தைகளே... நீங்களாவது வேறுபாடு இல்லாமல் சந்தோஷமாக இருங்கள்" என்று சொல்லி அவர்களுக்கு பொம்மைகளை உருவாக்கிக் கொடுத்து விட்டு வானில் பறந்து மறைந்தாள்.



# விடுகதைகள்

1. கல் எறிந்தால்போதும் அரண்மனையே காலியாகி விடும். இது என்ன?
2. இருட்டுக்கு விரோதி. தன்னையே கரைத்துக் கொள்வான் இந்தத் தியாகி. ?
3. மரக்கிளையில் தறிபோட்டு நெய்யும் சின்னப் பொண்ணு நான்... யார்?
4. மண்ணுக்குள் செய்து வைத்த செப்புகள்.... ருசியோ அதிகம்...?
5. ரீங்காரமாகப் பாட்டுப் பாடுவான். அசந்தால் ஊசி போட்டு விடுவான். இவன் யார்?
6. காட்டிலும் வயலிலும் பட்டுத்துணி விரிக்கும் இவர் யார்?
7. தண்ணீரில் மிதக்குது பத்து மாடிக் கட்டடம். இது என்ன?
8. பச்சைக்கிளிப் பெண்ணுக்கு உடம்பெல்லாம் முள். யார் இவள்?
9. கடலுக்குள் பூத்தது, கோயிலில் முழங்குது. இது என்ன?

## விடைகள்:

1. தேன்கூடு
2. மெழுகுவர்த்தி
3. தூக்கணாங்குருவி
4. உருளைக்கிழங்கு
5. கொசு
6. மயில்
7. கப்பல்
8. கள்ளிச்செடி
9. சங்கு



# வரலாற்றில் இன்றைய தினம்

1536 - ஆர்ஜென்ரீனாவின் புவனர்ஸ் அயர்ஸ் ஸ்பானியரான பெட்ரோ டீ மென்டோஸால் கண்டுபிடிக்கப் பட்டது.

1901 - விக்டோரியா மகாராணியின் இறுதிச் சடங்கு இடம்பெற்றது.


1971 - உகண்டாவின் ஜனாதிபதி மில்டன் ஓபோடே தலைமைப் பதவியிலிருந்து இடிஅமீனால் நீக்கப்பட்டார்.

1995 - இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கோரி அமெரிக்க மனிதாபிமான சட்ட நிறுவனம் மனு.

1998 - பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் கொழும்பு விமான நிலையத்தில் வந்திறங்கியபோது, மரியாதை வேட்டின்போது தீ விபத்து. படையினர் 3 பேருக்குக் காயம்.

2000 - முதல் டிஜிட்டல் திரைப்படம் ஐரோப்பாவில் - பாரிஸில் முதன்முதலாக திரையிடப்பட்டது.

2012 - எம்.வி.ராபோல் குயீன் படகு, பபுவா நியூகினியாவுக்கருகில் மூழ்கியதில் 300 பேர் வரை காணாமற் போயினர்.



# வர்ணம்

தீட்டுவோம் வாங்க....

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 2

**யங்ஸ்ரார் வி.க.**
**கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து வளர்பிறை அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணம்**
**(வவுனியா லீக்)**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று இடம்பெறவுள்ள ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)



# சங்கானை பிரதேச துடுப்பாட்டம்; விக்ரோறியன்ஸ் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 2

சங்கானை பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் விக்ரோறியன்ஸ் அணி சம்பியனானது.

அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் விக்ரோறியன்ஸ் அணியும் வட்டு. வை.எம்.எச்.ஏ. அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய வை.எம்.எச்.ஏ. அணி சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது.

51 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய விக்ரோறியன்ஸ் அணி 4:5 பந்துப்பரிமாற்றங்களில் இலக்கை அடைந்து சம்பியனானது. (ம)

# தொண்டமான் சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 2

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெண்களுக்கான கயிறு இழுத்தலில் தொண்டமான் விளையாட்டுக் கழக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. தொண்டமான் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய அணி மோதியது.


இதில் தொண்டமான் விளையாட்டு கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

# இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், பெப். 2

வவுனியா வடக்கு தவசியாகுளம் அ.த.க. பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் குறித்த பாடசாலையின் மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் ச.நித்தியானந்தம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினராக வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கி.மங்களகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)



# கரைதுறைப்பற்று கால்பந்தாட்டத்தில் அலையோசை அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், பெப். 2

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான கால் பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் அலையோசை அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கரைதுறைப்பற்று பொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலிறுதி ஆட்டம் நடைபெற்றது. விண்ணொளி அணியை எதிர்த்து அலையோசை அணி மோதியது. முதல் பாதியாட்டம் இரு அணிகளுக்கும் சவாலாக அமைய முதல் 15 நிமிடங்கள் வரை கோலெதுவும் பதிவாகவில்லை. 15 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவசெய்தார் திலக். அந்தக் கோலே முதல் பாதியின் ஒரே கோலாகவும் அமைந்தது.

1:0 என்ற கோல் கணக்குடனேயே இரண்டாம் பாதி நகர்ந்து சென்றது. ஆட்டம் நிறைவடைலதற்கு 2 நிமிடங்கள் எஞ்சியிருந்த போது பிரதாப் ஒரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் அலையோசை அணி வென்றது. (ம-422)

# அரையிறுதியில் அடி வைத்தது சென். லூட்ஸ்

யாழ்ப்பாணம், பெப். 2

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான கால் பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் சென். லூட்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கரைதுறைப்பற்று பொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் சக்தி அணியை எதிர்த்து சென். லூட்ஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டம் இரு அணிகளுக்கும் சவாலாக அமைய இடைவேளைக்கு முன்னர் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவுசெய்ய இயலவில்லை.

இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்தில் சென். லூட்ஸ் அணியின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது.

பகீரதன், திலீபன் ஆகியோர் முறையே 7 ஆவது, 9 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்தனர்.

அதன் பின்னர் சக்தி அணி வீரர்கள் பலமுறை முயற்சித்த போதும் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் சென். லூட்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)



# டயமன்ஸ் மனோகரா இறுதியில்

யாழ்ப்பாணம், பெப். 2

எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வடமராட்சி லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் வதிரி டயமன்ஸ், அல்வாய் மனோகரா அணிகள் இறுதிக்குத் தகுதிபெற்றன.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் அரையிறுதிகள் இடம்பெற்றன. முதலாவது அரையிறுதியில் மனோகரா அணியும் கலைமதி அணியும் மோதின. 1:0 என்ற கோல் கணக்கில் மனோகரா அணி வென்று இறுதிக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் வதிரி டயமன்ஸும் இமையாணன் மத்தியும் பலப்பரீட்சை நடத்தின. டயமன்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (ம-23)

# ஸ்வானின் அணியில் இல்லை முரளி

இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளரான ஸ்வான், தான் சிறந்த வீரர்களாகக் கருதும் வீரர்களை வைத்து கனவு அணியை அறிவித்தார்.

முன்னாள் வீரர்கள் பலரும் தமது கனவு அணிகளை அறிவித்து வருகின்றனர். அந்த வரிசையில் ஸ்வானும் தனது அணியை அறிவித்தார்.

கோப்ஸ், கோர்டன், பிரட்மன், லாரா, சச்சின், சோபர்ஸ், கில்கிறிஸ்ட், ஸ்வான், வோர்ண், மெக்ராத், அக்ரம் என்றவாறாக ஸ்வான் அணியைக் கட்டமைத்துள்ளார். சுழல்பந்து வீரர்களாக தன்னையும் வோர்ணையும் அவர் தேர்ந்தெடுத்துள்ளார். அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வரிசையில் எவரும் இலகுவில் தொட்டுவிட முடியாத உயரத்தில் இருக்கும் சுழல் ஜாம்பவான் முரளிதரனை அவர் புறக்கணித்தமை சில அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. (ம)



# நடுவரின் முடிவில் கவலை இல்லை

நடுவரின் முடிவுகள் தொடர்பில் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை என்று இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான பும்ரா கருத்துத் தெரிவித்தார்.

நாக்பூரில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பும்ரா வீசிய கடைசி பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் முன்னணி வீரரான ஜோ ரூட் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். ஆனால் பந்து துடுப்பாட்ட மட்டையில் பட்டது. மறு பரிசீலனை முறையில் தெரியவந்தது. நடுவரின் முடிவுக்கு கண்டனங்கள் குவிந்துவரும் நிலையில் பும்ரா இவ்வாறு தெரிவித்தார். (ம)





# ஆஸி. அணியை வழிநடத்துகிறார் ஆரோன் பின்ஞ்

இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரில் களமிறங்கப் போகும் ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டது. ஆரோன் பின்ஞ் அணித்தலைவராகச் செயற்படவுள்ளார்.

இலங்கை- ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் பெப்ரவரி 22 ஆம் திகதி முடிவடைகிறது. இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் இந்தியாவில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

22 ஆம் திகதி இலங்கைக்கு எதிரான தொடரை முடித்துக் கொண்டு, அடுத்த நாள் இந்தியாவுக்குச் சென்று விளையாட வாய்ப்பில்லை என்பதால் இரு அணிகளைக் களமிறக்க ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை முடிவெடுத்தது. இளம் வீரர்களைக் கொண்ட அனுபவம் குறைந்த அணி இலங்கைக்கு எதிராகக் களமிறங்குகிறது. அந்த அணிக்கு பின்ஞ் அணித் தலைவராகச் செயற்படவுள்ளார்.

ஆஸ்திரேலிய அணி விவரம் - பின்ஞ் (தலைவர்), கிலிஞ்சர், ஹெட், லைன், ஹென்றிக்ஸ், அஸ்ரன், ரிம் பைன் (இலக்குக் காப்பாளர்), பல்க்நெர், கம்மின்ஸ், சாம்பா, அன்ரூ டை, ரிச்சாட்சன், ஸ்ரான்லேக்.

ஓர் அணிக்கு அடுத்தடுத்த நாள்களில் இரு வேறு அணிகளுடன், அதிலும் இருவேறு கண்டங்களில் தொடர்களை ஏற்பாடு செய்த பன்னாட்டு கிரிக்கெட் சபையின் அட்டவணையை ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வோர்ணர் கடுமையாக விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 2ஆவது ஆட்டம் இன்று

ஆஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள், முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றது. இதனால் ஆஸ்திரேலிய அணி அடுத்த இரு ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே கிண்ணம் வெல்லலாம் என்ற நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டது. இவ்வாறான நெருக்கடியான நிலையில் அந்த அணி இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

நியூசிலாந்தின் ஆரம்ப வீரரான குப்தில் காயம் காரணமாக இன்றைய ஆட்டத்திலிருந்து விலகினார். இது ஆஸ்திரேலியாவுக்கு சாதகமான விடயம் என்று சொல்லப்படுகிறது. லாதத்துடன் இணைந்து நியூசிலாந்து அணித்தலைவரான வில்லியம்சன் ஆரம்ப வீரராக களமிறங்க அதிக வாய்ப்புள்ளது என்றும் கருதப்படுகிறது. (ம)

# நியூசித் தொடர்: விலகினார் வேட்

காயம் காரணமாக நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இருந்து முழுவதுமாக விலகினார் ஆஸ்திரேலிய அணியின் இலக்குக் காப்பாளரான வேட்.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வென்று முன்னிலையில் உள்ளது. ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித், காயம் காரணமாக விலகியிருந்தமையால் இந்தத் தொடருக்கான தலைவராக இலக்குக் காப்பாளரான வேட் நியமிக்கப்பட்டார். தொடருக்கு முன்பாக பயிற்சியில் ஈடுபட்டபோது அவர் காயமடைந்தார். இதனால் அவர் முதலாவது ஆட்டத்துக்கான அணியில் இருந்து விலகினார். பின்ஞ் தலைவராகச் செயற்பட்டார்.

இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வேட் அணிக்குத் திரும்புவார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. எனினும் காயம் முழுமையாகக் குணமடையாததை அடுத்து, அவர் தொடரில் இருந்து விலகிச் சென்றார். இலக்குக்காப்பாளராக ஹான்ட்ஸ்கொம் செயற்படுவார் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்தது.

இந்த இரு அணிகளும் இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)



# பங்களாதேஷுக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணி நேற்று முன்தினம் மாலை அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் அணி ஓர் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுவதற்காக இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. இந்த ஆட்டம் ஹைதராபாத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்துக்கான அணியே அறிவிக்கப்பட்டது.

முடிவடைந்த இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இடம்பிடித்த வீரர்கள் பலருக்கு அணியில் இடம்கிடைத்துள்ளது. குறித்த தொடரில் இலக்குக் காப்பாளராகச் செயற்பட்ட பட்டேல் வெளியேற்றப்பட்டு, சகாவுக்கு இடம்கொடுக்கப்பட்டது. அதேபோல் தமிழ்நாட்டு வீரர் முகுந்த் ஆறு வருடங்களின் பின்னர் அணியில் சேர்க்கப்பட்டார்.

இந்திய அணி விவரம் : கோக்லி (தலைவர்), லோகேஸ் ராகுல், புஜாரா, முரளி விஜய், ரகானே, சகா, அஸ்வின், ஜடேயா, ஜெயந்த் யாதவ், இசாந்த் சர்மா, யாதவ், அபிநவ் முகுந்த், புவனேஸ்வர்குமார், 14. கருண் நாயர், ஹர்திக் பாண்டியா, மிஸ்ரா.

விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் முகுந்த் சேர்க்கப்பட்டால், அஸ்வின், முரளி விஜய், முகுந்த் என்று மூன்று தமிழ் வீரர்கள் பங்களாதேஷை எதிர்த்து விளையாடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# வித்தியாசமான ஆஸியை எதிர்கொள்ளும் இந்தியா

## ஜோன்சன் மிரட்டல்

இந்திய அணி வித்தியாசமான ஆஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளும் என்று எச்சரித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஜோன்சன்.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான கருத்துப் பகிர்வுகள் தற்போதே ஆரம்பித்து விட்டன. தொடர் இந்தியாவில் நடைபெறுவதால், இந்திய அணியின் ஆதிக்கம் மேலோங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் ஆஸ்திரேலியாவின் பலத்தை வெளிப்படுத்தும் படியான கருத்தை பகிர்ந்தார் ஜோன்சன்.

இந்திய ஆடுகளங்கள் இந்தியாவுக்குச் சாதகமானவை. இதனால் அந்த அணி வலுவாக இருக்கும் என்பதை மறுப்பதற்கல்ல. ஆனால் இந்திய அணிக்கு சவால் கொடுக்க வல்ல அணியாக ஆஸ்திரேலியா அமையும். எதிர் பார்ப்பதைப் போன்று அல்லாமல் வித்தியாசமான அணியை எதிர்கொள்ள இந்தியா தயாராக இருக்க வேண்டும் என்று ஜோன்சன் மேலும் குறிப்பிட்டார். (ம)



சமையலாளர் தேவை

பிரபல ஹொட்டலுக்கு சகல உணவு வகைகளும் (இந்தியன், சைனிஸ் உணவுகள் உட்பட) சமைக்கத் தெரிந்த 45 வயதிற்கு உட்பட்ட அனுபவமுள்ள ஆண் சமையலாளர் உடன் தேவை.

021 222 0630, 077 945 1217

# ரெய்னா அடித்தளம், டோனி அதிரடி, யுவராஜ் விளாசல், சாகல் வேட்டை
# இறுதி ரி–20 ஆட்டத்திலும் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது இந்தியா



ரெய்னாவின் அடித்தளம், டோனியின் அதிரடி, யுவராஜின் இறுதிக் கட்ட விளாசல், சாகலின் விக்கெட் வேட்டை ஆகியன கைகொடுக்க இறுதி ரி-20 ஆட்டத்தில் 75 ஓட்டங்களால் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது இந்தியா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக கோக்லி மற்றும் ராகுல் இருவரும் களமிறங்கினர். கோக்லி 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ராகுல் 22 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ரெய்னா, டோனி இணை சிறந்த ஓட்டங்களை பெறக்கூடியவாறு சராசரியில் ஏற்றம் காணச் செய்தது. ஆரம்பம் முதல் அடித்தாடினார் டோனி. ரெய்னாவின் அரைச்சதம் 39 பந்துகளிலும் டோனியின் அரைச்சதம் 32 பந்துகளிலும் பதிவானது. 63 ஓட்டங்களுடன் ரெய்னா ஆட்டமிழந்தார். வந்தவேகத்தில் நொறுக்கித்தள்ளினார் யுவராஜ். ஜோர்டானின் பந்துப்பரிமாற்றத்தில் 3 சிக்சர்களை விளாசினார். அவர் 10 பந்துகளில் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முடிவில் இந்தியா 202-6.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்தை சாகலின் சுழல் மிகையாகச் சோதித்தது. அந்த அணி 8 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதே பில்லிங்ஸை இழந்தது. மோர்கன், ரூட் இருவரும் இணைந்து அணியை மீட்டெடுத்தனர். 13 பந்துப்பரிமாற்றங்களில் 115-2 என்றிருந்தது இங்கிலாந்து. அடுத்தடுத்த பந்துகளில் இருவரையும் வீழ்த்தினார் சாகல். பட்லர், பிளங்கட் இருவரையும் பவிலியனுக்குத் திருப்பினார் பும்ரா. சாகல் வீசிய 16 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மொயின் அலி, ஸ்ரோக்ஸ், ஜோர்டான் மூவரும் ஆட்டமிழந்தனர். 127 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து. அந்த அணி இறுதி 8 இலக்குகளையும் 9 ஓட்டங்களில் பறிகொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L, A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.

3 மாத சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 04.02.2017

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புற வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

டைனாகன்ரர் விற்பனைக்கு

பத்தரை அடிநீளமுடைய ரூவாட்டா டைனாகன்ரர் இல. JIxxxx வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 043 7544

பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். | K.K.S. றோட், இணுவில்.

A/L DAY CLASS
கலை, வர்த்தகப்பிரிவு
திங்கள் முதல் வெள்ளி வரை புதிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

காசி யாத்திரை

ஆரம்பம் 10.03.2017 நாள்கள் – 16, யாத்திரீகர் –20

தரிசிக்குமிடங்கள் **டெல்லி** : அட்ஷயதாம் உட்பட 7 இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா** : தாஜ்மகால். செங்கோட்டை பார்த்தல். **மதுரா** : கிருஷ்ணஜென்மபூமி. **அலகாபாத்** : கங்கா, ஜமுனா, சரஸ்வதி (திருவேணி சங்கமம்). தீர்த்தமாடல், சயன ஆஞ்சனேயர் தரிசனம். **சீத்தாமடி** : சீதை பூமியுள் புதையுண்ட இடம் உட்பட 5 இடங்கள். **காசி** : விஸ்வநாதர், விசாலாட்சி காளபைரவர் உட்பட 15 இடங்கள் பார்த்தல் அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த இடம் (கங்கைநீராடல்) காசியில் 3 நாள்கள் கங்காபூஜை பார்த்தல். **ஹரித்துவார்** : கங்கை நீராடல். 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ரிஷிகேஸ்** : சிவானந்த ஆச்சிரமம் உட்பட்ட இடங்கள் தரிசனம். **குருச்சேத்திரம்** : பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம் உட்பட 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். அத்துடன் **பிரம்மதீர்த்தம்** நீராடல். **கயா**: உறவினர்களுக்கு சிரார்த்தம் செய்தல். **புத்தகயா**: புத்தாலயங்கள் 5 பார்த்தல் **இராமேஸ்வரம்**: (தீர்த்தமாடல்) 2 கிணறுகளில் உத்திரகோசமங்கை உட்பட 7 இடங்கள் தரிசித்தல் **சென்னை**: வருகை வான்வலம் **திருப்பதி** விஸ்ணு. அலமேலு மாங்கா தரிசித்து சென்னை வருகை

**எமது சேவை**: 5 விமான ரிக்கட், சுத்தமான குடிநீர், A/C வாகனவசதி, மடப்பள்ளி ஆள்கள் சமைத்த மூன்று வேளை உணவு, காப்பி, ரீ, 2 பேருக்கு தரமான கட்டில், மெத்தை குளியலறை இணைந்த அறைகள், எயார் போட் போக வர வாகன வசதி (ரயில் பயணம் கிடையாது) மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

மேலதிக விவரங்களுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் - 077 768 0102
மகன் ராஜன் : 077 736 2154

புதியதோர் வேலைவாய்ப்பு

தனியார் நிறுவனமானது தனது கிளையை யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கவுள்ளது. இதற்காக உடனடியாக வேலையாள்களை இணைக்கவுள்ளது. ஆர்வமுடைய O/L, A/L, படித்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
023 454 9788, 076 864 3505, 077 517 9034.

வேலைவாய்ப்பு

அலுவலக உதவியாளர்கள் (ஆண், பெண்)
தகைமைகள்:-
- 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- தொடர்பாடல் திறன் மிக்கவர்கள்
- A/L சித்தி
- கணினி அறிவு அவசியம் (Ms.Office, Photoshop, E-mail)
- அர்ப்பணிப்புடன் சேவையாற்றக் கூடிய தன்மை
- சேவை நோக்கம் கொண்டவர்களாக இருத்தல்
- அறிக்கையிடும் ஆற்றல் உடையவராக இருத்தல்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-
விளம்பர இல. 5521, மே.பா. உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பணியாளர் தேவை

உதயன் நெல்லியடிக்கிளையில் பணியாற்றுவதற்கு கணினி அனுபவமுள்ளவர்கள் தேவை


- வயது : 30 இற்கு மேல் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- வடமராட்சியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தங்கள் சுயவிவரக் கோவையுடன் 04.02.2017 சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கீழ்வரும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

உதயன் நெல்லியடி அலுவலகம்
இல.55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

## மரண அறிவித்தல்

## மாணிக்கம் சந்திரகுமார்

பிறப்பு 24 . 02 . 1962



இறப்பு 01 . 02 . 2017

வடமராட்சி, மாலு சந்தியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவில் வசித்தவரும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமான மாணிக்கம் சந்திரகுமார் 01.02.2017 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மிருகண்டு-சாந்தமலர் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மாலினியின் அன்புக் கணவரும் டிசாந்தினி, டிசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராதாமலர், விஜயகுமார், ஜெயக்குமாரி, யதிந்திரன் ஆகியோரின் சகோதரனும் சாந்தினி, சேவல்கொடி, வசந்தினி காலஞ்சென்ற ஜெயக்கொடி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிரான்ஸில் Vendredi 03 Fevrier 2017 a 08 Heures 45 Crematorium de maveuil (03.02.2017 வெள்ளிக்கிழமை பிரான்ஸில்) தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சாந்தினி - 077 810 3224
(சந்த றேட் சென்ரர்)

இல. 50/16, கோவில் வீதி,
குருமன்காடு,
வவுனியா.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.